# பைபிளின் இரத்தின சுருக்கமும் இயேசுவின் இரண்டாம் வருகையும்

## பரலோகத்தை சுதந்தரிக்க சிறந்த வழிகாட்டி நூல்

**இதோ சீக்கிரமாய் வருகிறேன்...**

வெளி : 22:12

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**



# பைபிளின்
# இரத்தின சுருக்கமும்
# இயேசுவின்
# இரண்டாம் வருகையும்


**வி. மரியா (எ) மிரியாம்**

கைபேசி : 96887 48968


(பரலோகத்தை சுதந்தரிக்க
சிறந்த வழிகாட்டி நூல்)

(உண்மையுள்ள கடவுளை நம்பி பரலோகத்தை சுதந்தரிக்க விரும்புகிற பிள்ளைகளுக்காக மட்டுமே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.)

நன்கொடை: ரூ. 10/-

முதல் பதிப்பு : பிப்ரவரி 2012 - 7000 பிரதிகள்

**புத்தகங்கள் கிடைக்கும் இடங்கள்**
(சென்னை, சேலம், புதுச்சேரி)

**புத்தகப் பதிப்பாளர் :-**

சுவிசேஷகர் **எஸ். தாயப்பன்,** அவர்கள்
12. ஜி.டி.நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ-1,
சேலையூர் (அஞ்சல்) சென்னை 600 073.

ஐயா அவர்கள் இப்புத்தகத்தை இரு முறை படித்தார். ஆண்டவர் அவருடன் இடைப்பட்டபடியால், நிச்சயம் இப்புத்தகத்தை வெளியிட்டே ஆகவேண்டும் என்று கூறினார். இதன்படி இப்புத்தகம் வெளிவர தகப்பன் ஸ்தானத்திலிருந்து எனக்கு மிகவும் உதவி செய்தார். அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் தேவன் தாமே அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் அவருடைய ஊழியத்தையும் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக.

–சகோதரி. **வி. மரியா (எ) மிரியாம்**

**வெளியிடுபவர் :-**

சகோதரர் **அ. சுந்தரராஜன்,**
பகுதிநேர ஊழியக்காரர்,
சசிகலா ஏஜென்சீஸ், சேலம்.
கைபேசி : 9994782200

**ஆசிரியர் :-**

சகோதரி **வி. மரியா (எ) மிரியாம்,**
7-ஏ, மடத்து வீதி, நெல்லித்தோப்பு (அஞ்சல்),
புதுச்சேரி-600 005.
கைபேசி : 9688748968
e-mail : rathinasurukam@gmail.com

# பொருளடக்கம்

| வ.எண். | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **புத்தகத்தின் முதல் பகுதி** | |
| 1) | ஆசிரியரின் சாட்சி | 5 |
| 2) | புத்தகத்தின் முகவுரை | 7 |
| 3) | இப்புத்தகம் எழுதக் காரணமான என்னைத் தொட்ட வசனம் | 9 |
| 4) | தலைப்புக்கான விளக்கவுரை | 12 |
| 5) | எச்சரிக்கை ! எச்சரிக்கை ! | 16 |
| 6) | நாம் கட்டாயம் கடைபிடிக்கவேண்டிய கட்டளைகள் | 20 |
| i) | விக்கிரக ஆராதனைக் கூடாது | 21 |
| ii) | ஞானஸ்நானம் எடுக்கும் முறை | 22 |
| iii) | 10 கட்டளைகள் கட்டாயம் கடைபிடிக்கவேண்டும் | 24 |
| iv) | அன்பு செய்து வாழவேண்டும் (பகைக்கிறவர்களிடமும்) | 25 |
| v) | கடனில்லாமல் இருக்கவேண்டும் | 26 |
| vi) | நகைகள் அணியக் கூடாது | 27 |
| vii) | ஓய்வு நாளை பரிசுத்தமாய் அனுசரிக்கவேண்டும் | 28 |
| viii) | திருவிருந்தில் பங்கு கொள்ளவேண்டும் | 30 |
| ix) | "666" என்ற பயோசிப் முத்திரையை தரித்து கொள்ளக் கூடாது | 31 |
| x) | பரிசுத்தமாக வாழவேண்டும் | 37 |
| xi) | தற்கொலை மரணம் கூடாது | 40 |
| xii) | இறுதிவரை ஜெப வாழ்வு வாழவேண்டும் | 41 |
| 7) | கட்டளைகளின் சுருக்கம் | 44 |

| வ.எண். | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **புத்தகத்தின் இரண்டாம் பகுதி** | |
| | பைபிளின் மூலம் அறியவேண்டியதும், என்றும் நினைவில் இருக்க வேண்டிய தேவ செய்திகள் | |
| 1) | இரண்டுவித முத்திரைகள் | 46 |
| 2) | இரகசிய வருகை | 49 |
| 3) | மரித்தவுடன் நாம் எங்கே போகிறோம் | 51 |
| 4) | இரண்டு வித நியாயத் தீர்ப்பு | 54 |
| 5) | ஆயத்தமாகுதல் | 58 |
| 6) | என்றும் நினைவில் இருக்கவேண்டிய ஆலோசனைகள் | 59 |
| 7) | விசுவாசமும் கிருபையும் | 62 |
| 8) | உலக முடிவும் அடையாளங்களும் | 64 |
| 9) | அந்தி கிறிஸ்துவின் ஆட்சி | 73 |
| 10) | புதிய வானமும் புதிய பூமியும் | 76 |
| 11) | இரகசிய வருகைக்கு முன்பே முத்திரை வரும் | 80 |
| 12) | இயேசுகிறிஸ்து சமீபமாய் வாசலருகே வந்துவிட்டதற்கான அடையாளங்கள் | 85 |
| 13) | புத்தகத்தின் இறுதிவுரை | 89 |
| | **புத்தகத்தின் மூன்றாம் பகுதி** | |
| | *ஆசிரியரின் தரிசனமும் கனவுகளும்* | |
| 1) | இறுதி நாளில் நான் பெற்ற நியாயத் தீர்ப்பு | 91 |
| 2) | வானத்தில் தோன்றிய எழுத்துக்கள் | 91 |
| 3) | ஓய்வுநாளில் தரிசனமாய் இயேசுவை கண்டது | 92 |
| 4) | நான் கண்ட மீன் வகைகள் | 93 |
| 5) | கனவில் கண்ட மோசே | 93 |
| 6) | வானத்தில் தோன்றிய இயேசு கிறிஸ்து | 95 |
| 7) | அக்கினியால் மூடப்பட்ட பூமி | 96 |

## ஆசிரியரின் சாட்சி

அன்பான தேவ பிள்ளைகளே ! என் பெயர் **மரியா (எ) மிரியாம்** நான் சேலம் மாவட்டத்தில் ஒரு **R.C.** கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த மகள் என்னுடன் பிறந்த சகோதர சகோதரிகள் ஒவ்வொருவராய் தேவனுடைய கிருபையால் ஞானஸ்நானம் பெற்றுவிட்டார்கள். அதில் என் இரண்டு சகோதரிகளும் அவர்களுடைய கணவர் இருவரும் ஊழியக்காரர்களாவும், சகோதரர் ஒருவர் அ.சுந்தர்ராஜன் சேலத்தில் சசிகலா ஏஜென்சி கடை வைத்து நடத்தி வருகிறார். அவர் பகுதி நேர ஊழியம் செய்து வருகிறார்.

குறிப்பாய் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமை முழு இரவு ஜெபம் நடத்தி வருகிறார். இந்நிலையிலும் அடிக்கடி என் வீட்டிற்கு வந்து ஆண்டவரின் சத்தியத்தை சொல்லுவார், ஆனாலும் என் கணவர் R.C.ஆலயத்தில் ஒரு முக்கிய பங்காளராக இருந்ததால் என்னால் என் சகோதரன் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாத மனநிலையில் வாழ்ந்து வந்தேன். ஆனால் ஊழியம் செய்துகொண்டிருந்த என் சகோதர, சகோதரிகள் தொடர்ந்து எனக்காய் ஜெபித்து வந்தார்கள். இதற்கிடையில் குடும்பத்தில் நாங்கள் கையிட்டு செய்த தொழில்களில் தொடர்ந்து நஷ்டங்கள் ஏற்பட்டது. இப்பிரச்சனைகளை சரிசெய்ய முதலில் நான் ஞானஸ்நானம் எடுத்து தேவனுடைய பிள்ளையாய் மாறவேண்டும் என்று தீர்மானித்து என் கணவரிடம் உத்தரவு கேட்டேன். ஆனால் அவர் நீ சபை மாறினால் நான் உன்னை விவகாரத்து செய்துவிடுவேன் என்று கோபமாக சொன்னார். ஆனாலும் நான் தேவன் மேல் நம்பிக்கை வைத்து அவர் ஊருக்கு சென்ற பிறகு என் சகோதரியின் கணவர் பாஸ்டர் அல்போன்ஸ் நடத்திவரும் "புதிய ஆவி தேவ சபையில்" ஞானஸ்நானம் எடுக்க முடிவு செய்ததின் காரணமாகவும், பிதாவின் அநாதி தீர்மானத்தின் படியும் நான் கடந்த **9-5-2004** ஆம் ஆண்டு இயேசுவை என் சொந்த இரட்சகராகவும், மீட்பராகவும் ஏற்றுக் கொண்டு முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தேன்.

இரண்டு வருடம் இயேசுவின் அன்பை புரிந்து கொள்ளாமல் வாழ்ந்து வந்தேன். இந்நிலையில் என் பக்கத்து வீட்டில் வசிக்கும் கிருஷ்ணவேணி என்ற பூ வியாபாரம் செய்யும் தாயார் என்னிடத்தில் அவர்கள் வீடு கட்டுவதற்காக சிறிது சிறிதாக ரூ.1,00,000 வரையில்

கொடுத்து வைத்திருந்தார்கள். அந்த பணத்தை நான் நடத்தி வந்த கடையில் முதலீடு செய்து வியாபரம் செய்தேன். அதை அந்த தாயாரிடமும் சொன்னேன். எனவே நீங்கள் கொடுத்த பணத்தை என்னிடம் கேட்கும்போது ஒரு மாதத்திற்கு முன்பே சொல்லிவிடுங்கள். அப்பொழுதுதான் உங்கள் பணத்தை திரும்ப கொடுக்க முடியும் என்று சொல்லியிருந்தேன். அதேப்போல் ஒரு வருடம் கழித்து அந்த தாயார் என்னிடத்தில் கொடுத்து வைத்த பணத்தை ஒரு மாதத்திற்கு முன்பே கேட்டார்கள். நானும் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டேன். ஆனால் சொன்ன தேதியில் பணத்தை திரும்பத் தரமுடியாத சூழ்நிலையில் இருந்தேன். எனவே மூன்று நாட்கள் மிகவும் பாரத்தோடு, இரவு, பகல் தூக்கமின்றி உபவாசம் இருந்து ஜெபித்தேன். உடனே இயேசுவானவர் என்னிடம் பணம் கொடுத்த அந்த தா்யாரின் கனவில் தோன்றி என் மகளை தொந்திரவு செய்யாதே என்று பேசியிருக்கிறார். அப்போது அந்த தாயார் உங்கள் மகள் என்று சொல்கிறீர்களே, இயேசுவே அப்படியென்றால் உங்கள் மகளுக்கு என் பணத்தை திருப்பி கொடுக்க நீங்களே வழி செய்யுங்கள் என்று கனவில் வந்த இயேசு சுவாமியிடம் பேசியிருக்கிறார்கள். அதன்படி இயேசுவானவர் நான் மறுநாள் ஜெபிக்கும் பொழுது நான் வைத்திருந்த கொஞ்ச பணத்தில் என் நகைகளை மீட்டு விற்க ஆலோசனை கொடுத்தார். அவர் சொன்ன ஆலோசனையின் படியே நகைகளை மீட்டு விற்றேன். குறிப்பிட்ட அந்நாளில் அந்த தாயாரும் என்னிடம் பணத்திற்கு வந்தார்கள். நான் அவர்களிடம் பணத்தை கொடுக்கும்போது அந்த தாயார் என்னிடம் சொன்னது, நீ கும்பிடுகிற இயேசு சுவாமி உண்மையுள்ள கடவுள். உனக்காக என் கனவில் வெள்ளை அங்கி அணிந்து கொண்டு என்னிடத்தில் வந்து என் மகளை தொந்திரவு செய்யாதே என்று பேசியதை எனக்கு சாட்சியாக சொன்னார்கள். இதற்கு பிறகு தான் என் இரட்சகர் எனக்காக வழக்காடுவதைப் புரிந்து கொண்டேன். பிறகு 2006ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் என்னையும் என் வாழ்வையும் தேவன் கரத்தில் முழுமையாக ஒப்புக்கொடுத்தேன். அதன் பிறகு தேவனுடைய சித்தம் அறிந்து நடக்க ஆரம்பித்தேன். பின்பு ஒரு நாள் மாலை ஜெபிக்கும் போது, என் காதில் "**தனி ஊழியம்**" என்ற சத்தம் கேட்டது. பிறகு 3 முறை இயேசுவின் வருகையையும், அவர் நியாயம் தீர்ப்பதையும், இதோ, "**உலக முடிவு சமீபம்**" என்ற வார்த்தை வானில் வந்து மறைந்ததையும் கனவில் கண்டேன்.

அதற்கு பிறகு தாகத்தோடு வேதத்தை வாசிக்கும் போது, *ரோமர். 16:25-26*ன் படி நாம் ஒவ்வொருவரும் பரலோகத்தை சுதந்தரிக்க, இயேசு பிரசங்கித்த முக்கிய கட்டளைகள் அடங்கிய பிரசங்கம் இரகசியமாய் இருப்பதையும், வெளிப்படுத்தல் அதிகாரத்தை வாசித்தபோது, அதில் மறைந்துள்ள உலக முடிவின் இரகசியங்களையும், ஆவியானவர் மூலம் அறிந்து கொண்டேன். சகல விசுவாசிகளும் இதை படித்து இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாக இருக்கும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறேன். தேவனுடைய சித்தம் பரிபூரணமாய் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. எனவே அதி சீக்கிரத்தில் இயேசு கிறிஸ்து

வரப்போகிறார், இப்புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு கட்டளையும், எச்சரிக்கையுடன் ஒளிவு மறைவு இல்லாமல், ஆவியானவரின் ஆலோசனைப்படி, வேதத்தில் இருந்து கண்டுபிடித்து, உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. தேவ, கட்டளைப்படி வாழ்ந்தால் நாம் நித்திய ஜீவனைப் பெற்று பரிசுத்த நகரமாகிய பரலோக வாசலுக்குள் நுழைய முடியும். எனவே தேவ கட்டளைகளின் படி வாழுங்கள்.

எனக்கு 2 பெண் பிள்ளைகள் உண்டு. அவர்களில் பெரிய மகள் விமலா அரசுப் பள்ளியில் ஆசிரியர் பணியிலும், இளையமகள் அமலா டாட்டா கன்சல்டன்சி சர்வீஸ் கம்பெனியில் மென்பொருள் பொறியாளராக சென்னையில் பணியாற்றி வருகிறார்கள். என் கணவர் வில்லியம் வினோபா ஆண்டவருக்கு ஊழியம் செய்யும் பணியில் மிகவும் ஆர்வமுள்ளவர். இப்புத்தகம் எழுதி முடிக்க அவர் எனக்கு மிகவும் உதவியாய் இருந்தார். எனக்கு நல்ல குடும்பத்தை கொடுத்த தேவனுக்கு கோடான கோடி நன்றி !

நான் குடும்பத்தோடு இணைந்து சில சமயங்களில் பெண்கள் மத்தியில் ஊழியம் செய்வதிலும், சில சபைகளுக்கு சென்று செய்தி கொடுக்கும் ஊழியத்தையும் செய்து வருகிறேன். எனவே, எனக்காகவும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். நான் கட்டளைகளை கடைபிடிக்க ஆரம்பித்த பிறகு தான் என்னை தேவன் ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். இப்படியாக தேவனுடைய ஆசீர்வாதத்தை உணர்ந்த நான், என் குடும்ப பொறுப்புகளை, தேவன் கரத்தில் ஒப்புக் கொடுத்துவிட்டு, தேவனுடைய ஊழியத்தை செய்து வருகிறேன்.

கிறிஸ்துவின் பணியில்,

சகோதரி **வி. மரியா (எ) மிரியாம்**

## 2) புத்தகத்தின் முகவுரை

தேவ பிள்ளைகளே !

இப்புத்தகம் வாசிக்கும்போது சில இடங்களில் வசனங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். உடனே வேதத்தை எடுத்துப் படியுங்கள். அப்போது தான் உங்களால் நன்றாக புரிந்து கொள்ள முடியும். ஆவியானவர் அபிஷேகம் பெற்ற பிள்ளைகள் முதற்கொண்டு, இன்றுதான் இரட்சிப்புக்கு வந்த பிள்ளைகள் வரை, அனைவராலும் புரிந்து கொள்ளும் வகையில் எளியமுறையில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் நடை சில இடங்களில் நான் உங்களோடு நேரடியாக பேசுவதைப் போன்றும் இருக்கும். ஆண்டவரின் வருகைக்கு காலங்கள் மிகவும் குறுகி CÚd; u \Róp úYRj§p ùNôpX1ThP *மத்தேயு.24, மாற்கு.13, லூக்கா.21*–அதிகாரங்களில் உள்ளபடி எல்லா அடையாளங்களும், இப்பூமியில் நடந்துகொண்டே இருக்கிறது. இதற்கு ஆதாரமாக, செய்தித்தாளில் வெளிவந்த பல ஆதாரங்களை வேதவசனத்துடன் இப்புத்தகத்தில் இணைத்துள்ளேன், படித்துப் பாருங்கள்.

இப்புத்தகம் தேவ சித்தமாய் இருப்பதால் வெளிவந்துள்ளது. இப்புத்தகத்தைப் பற்றி அநேகம் பேருக்கு சொல்லுங்கள். உங்களுக்கு தெரிந்த மொழியில் விருப்பமானால், காலம் தாமதிக்காமல் மொழிபெயர்த்து வெளியிடவும், இப்புத்தகத்தை பல நாடுகளில் உள்ள உங்கள் உறவினர்கள் மற்றும் உங்களுக்கு தெரிந்த விசுவாசிகளின் கரங்களில் கிடைக்கவும் உதவி செய்யுங்கள், ஏனென்றால் எந்த சபையை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவருக்கும் பைபிள் என்பது ஒன்றே, நாம் தேவபிள்ளைகளாய் வாழ்ந்தால் செல்லும் ஒரே இடம் பரலோகம், எனவே சபை பாகுபாடின்றி ஆண்டவர் ஊழியத்தை செய்வோம்.

அப்போது சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலும் இருந்து இரகசிய வருகை நடக்கும் போது எடுத்துக் கொள்ளப்படுவார்கள். *வெளி.7:9* ன்படி தேவசித்தமும் நிறைவேறும். இப்புத்தகம் மூன்று பகுதியாக உள்ளது. ஒன்றாம் பகுதி நாம் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகளைக் குறித்தும், இரண்டாம் பகுதி வேதத்தின் மூலம் அறிய வேண்டியதும் என்றும் நினைவில் வைத்து இருக்கவேண்டிய செய்திகளை பற்றியும், மூன்றாம் பகுதி ஆசிரியரின் தரிசனமும், கனவுகளும் அடங்கியது.

இப்புத்தகத்தை கையில் வாங்கிப் படிக்கும் அனைவருக்கும் ஒரு அறிவிப்பு, புத்தகத்தில் குறிப்பாய் கொடுக்கப்பட்டுள்ள வேதத்தின் கட்டளைகளை **உயிர் உள்ள நாள் வரை கடைப்பிடித்து**, வாழ்ந்து வந்தால் கட்டாயம் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியும். உதாரணமாக பள்ளியில் படிக்கும் 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு பொதுத்தேர்வுக்குரிய கேள்வித்தாள் பரிட்சை வருவதற்கு முன்பே கிடைத்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம். அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக படித்து பரிட்சை எழுதுவார்கள் வெற்றியும் பெறுவார்கள் அல்லவா, அதைப் போலவே நீங்களும் பரலோகத்தை சுதந்தரிக்க இப்போதே இப்புத்தகம் உங்கள் கையில் வந்துவிட்டது எப்படியெனில், ஆயத்தப்படுங்கள் ! ஆயத்தப்படுத்துங்கள்! இதோ ! "**மணவாளனாகிய இயேசு வருகிறார்**" என்று சொன்னால் எப்படி ஆயத்தப்பட முடியும்? பைபிள் முழுவதும் ஒருவர் படித்தாலும், என்னென்ன கட்டளைக்கு கீழ்படிந்து வாழ்ந்தால், பரலோகம் செல்லமுடியும் என்பதை அறிந்து கொள்வது, அநேகரால் முடியாத காரியம் *–மத்.7:14*ன்படி *"ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்"*, என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே உங்களுக்கு இந்தக் கட்டளைகளை கண்டுபிடித்து கொடுக்க, அடியாளுக்கு தேவன் பாராட்டிய கிருபைக்காக நன்றி கூறுகிறேன்.

இப்புத்தகத்தை ஜெபத்துடன், கவனமாக படித்து நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் வாரம் தவறாமல் ஆலயம் சென்று வருவதாலோ, பல நற்செய்தி கூட்டங்களில் கலந்துக்கொண்டு செய்தி கேட்பதாலோ, அல்லது பல வித காணிக்கைகள் செலுத்துவதாலோ, பரலோகம் செல்ல முடியாது. முதலில் கட்டளைகளை (நியாயப் பிரமாணங்கள்) கடைப்பிடித்து வாழ வேண்டும். பிறகு மேலே குறிப்பிட்ட

தேவ சித்தத்தையும் நிறைவேற்றவேண்டும். இதைத்தான் இயேசுவும் விரும்புகிறார். அவர் மரித்து உயிரோடு எழுந்து பரலோகம் செல்லும் முன் சீடர்களிடத்தில் பேசிய கடைசி சில வார்த்தைகள், *"நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்" மத்.28:18-20.* எனவே தேவ ஆவியானவர் தாமே இனி வாழ்கிற நாட்களில், கட்டளைகளை மனதில் நிறுத்தி அதன்படி வாழ உங்களுக்கு கிருபை தருவாராக !

மேலும் இப்புத்தகத்தில் உண்மையான சாட்சி ஒன்று இணைத்துள்ளேன்.

1) மரணம் அடைந்து சில மணி நேரத்தில் மீண்டும் உயிர்பெற்ற ஒரு தாயார் கண்ட காட்சிகளை இப்புத்தகத்தில் இணைத்துள்ளேன்.

எனவே நாம் பூமியில் வாழும் போதே, பரலோகத்திற்குரிய பிள்ளைகள் என்ற நிச்சயத்தோடு வாழவேண்டும். அதற்காகவே இப்புத்தகம் உங்கள் கரங்களில் கிடைக்க தேவன் கிருபை செய்து இருக்கிறார். எனவே இப்புத்தகத்தை முழுமையாக அடிக்கடி படியுங்கள். **பைபிளின் இரத்தின சுருக்கமும், இயேசுவின் இரண்டாம் வருகையும்,** என்ற இந்த புத்தகத்தை செய்திதாளின் பல ஆதாரத்துடன், தகுதியில்லா என்னைக் கொண்டு வெளியிடுவதற்கு, தேவன் பாராட்டிய எல்லா கிருபைகளுக்காகவும், தேவனுக்கு ஸ்தோத்திரம். இதற்காக ஜெபித்த அனைத்து ஊழியக்காரர் குடும்பத்தையும், விசுவாச பிள்ளைகளையும் தேவன் தாமே அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! இப்புத்தகம் படிக்கும் ஒவ்வொரு பிள்ளையும் பரலோகத்தை சுதந்தரிக்க வேண்டி என் தனி ஜெபத்திலும் என் குடும்ப ஜெபத்திலும் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே இருப்பேன். சமாதானத்தின் தேவன் உங்களுடன் இருப்பாராக !

## 3) புத்தகம் எழுத காரணமான என்னை தொட்ட வசனம்

தேவ பிள்ளைகளே, இப்புத்தகம் எழுத *மத்தேயு. 7:14* என்ற வசனத்தின் மூலம் தேவ ஆவியானவர் என்னுடன் இடைப்பட்டார். *"ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்"* என்ற வசனம் என்னை சிந்திக்க வைத்தது. அந்த சிலரில் ஒருவராக நான் இருக்க விரும்பி வேதத்தை படிக்க ஆரம்பித்தேன். பல மாதங்கள் ஆகியும் பதில் இல்லை. பிறகு என்னை முழுமையாக தேவனிடத்தில் அர்ப்பணித்து, சில தியாகங்கள் செய்து, முடிந்தவரை பரிசுத்தமாய் வாழ்ந்து ஜெபநேரத்தை அதிகப்படுத்தினேன். பிறகு இரகசிய வருகை வர சமீபமாய் இருக்கிறது. எனவே என் ஆத்துமாவை காத்துக் கொண்டு அநேக ஆத்துமாக்களையும் மீட்க வேண்டுமே! என்ற தாகத்தோடு அழுது ஜெபிக்க ஆரம்பித்தேன்.

என் இருதயத்தின் நினைவை அறிந்த தேவன் தேடுங்கள் **அப்பொழுது கண்டடைவீர்கள்** என்ற வசனத்தின் படி *மத்தேயு.7:14* என்ற வசனத் தேடுதலுக்கு, *வெளி. 22:14* ஆம் வசனத்தைக் கொடுத்தார். இவ்வசனமாவது *"ஜீவ விருட்சத்தின் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்''* என்று கூறப்பட்டுள்ளது. இதில் உள்ள கற்பனைகள் எல்லாம் ஓரிடத்தில் இல்லை. *ஏசாயா. 28:13* ல் உள்ளபடி இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாய் வேதத்தில் அநேக இடங்களில் பிரித்து எழுதப்பட்டுள்ளது. அதைக் கண்டுபிடித்த பிறகுதான் இப்புத்தகம் உருவானது. ஆவியானவரின் துணையுடன் யாரையும் குற்றப்படுத்தாத, வகையில். இதனை எழுதியுள்ளேன்.

இப்புத்தகத்திற்கு சாட்சி **பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரே.** எனவே இப்புத்தகத்துக்கு முகவுரையாளர் யார் என்பதை தேடவேண்டாம். ஏனென்றால் 2011ஆம் ஆண்டு ஜுலை 7ஆம் தேதி பதினைந்து புத்தகம் மட்டும் அடித்து சிலருக்கு அனுப்பப்பட்டது. அதன் மூலம் சில ஆலோசனைகள் கிடைத்தது. ஆனால் நான் அவர்களிடம் முகவுரை கொடுங்கள் என்று கேட்கவில்லை. ஏனென்றால் இப்புத்தகம் சில எச்சரிக்கைகள் அடங்கியதாய் இருக்கிறது. நானே வெளியிட தயங்கினேன். மீண்டும் ஆவியானவர் இது உன்கையில் கொடுக்கப்பட்ட ஊழியம் என்று பேசினார். எனவே இப்புத்தகம் வேத வசனங்களைக் கொண்டு சில ஆதாரங்களுடன் மீண்டும் உருவானது. இதில் ஒரு சில பகுதியில் ஒளிவு மறைவு இல்லாமல் எப்படி வாழ்வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கும். அதை மறைத்து எழுதலாம் என்று கூட நினைத்தேன். ஆனால் இயேசு கிறிஸ்துவின் வருகை மிக சமீபமாய் இருக்கிறது. இனி விழுந்து எழுவதற்கு நாட்கள் இல்லை என்கிறபடியால், எனக்கு ஆவியானவர் வெளிப்படுத்திய எல்லா இரகசியங்களையும் எழுதியுள்ளேன். புத்தகத்தை படிக்கிற தேவ பிள்ளைகள் இப்படிப்பட்ட கட்டளைகள் எல்லாம் தேவன் விரும்புகிறரா? என்று தர்க்கம் பண்ணவேண்டாம். உங்கள் மனம் இதில் உள்ள கருத்துக்களை அங்கீகரிக்கவில்லை என்றால், விட்டு விடுங்கள். **மற்றவர்கள் கடைப்பிடிக்க தடை செய்யாதீர்கள்.** ஏனென்றால் நாம் சந்திக்கப் போகும் தேவன் பரிசுத்தர். எனவே இப்புத்தகத்தை வாங்கி படிக்கப் போகிற ஒவ்வொரு பிள்ளைகளும் இனி வரும் காலத்தில் பரிசுத்தமாய் வாழ்ந்து பரலோகத்தை சுதந்தரிக்க வேண்டும் என்பதற்காகவே 2010ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து குடும்பமாய் இணைந்து அடிக்கடி ஜெபித்து வருகிறோம். இப்புத்தகம் குறுந்தகடு (சி.டி.) வடிவில் வெளியிடவும் ஏற்பாடு செய்துள்ளோம். ஜெபிக்கும் போது என் காதில் 2004ஆம் ஆண்டே **"தனி ஊழியம்"** என்ற சத்தம் கேட்டது என்று ஆசிரியர் பகுதியில் எழுதியிருந்தேன் அல்லவா, அந்த சத்தமே **"பைபிளின் இரத்தின சுருக்கமும், இயேசுவின் இரண்டாம் வருகையும்''** என்ற இப்புத்தகம் உருவாக காரணமானது. தகுதியில்லா என்னைக் கொண்டு இத் தேவதிட்டத்தை நிறைவேற்றிய பரிசுத்த, ஆவியானவருக்கு கோடான கோடி நன்றி !

இப்புத்தகத்தை முதல் முறை படித்து முடித்தவுடன் **S.தாயப்பன்** ஐயா அவர்கள் ஆசிரியரான என்னை முதன்முதலாக வாழ்த்தி ஒரு கடிதம் அனுப்பினார். அக்கடிதத்தை இத்துடன் இணைத்துள்ளேன்.

சென்னை–73,
13–2–2012

PRAISE THE LORD

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிக்கு,

ஸ்தோத்திரம். எழுத்துப் பிழையை கரெக்ட் செய்து இத்துடன் அனுப்பியுள்ளேன். மிகவும் அருமையாக இருக்கிறது. வேத ஆதாரங்களுடன் எழுதியிருக்கிறீர்கள். படிக்கின்றவர் எவருடைய உள்ளத்தையும் உடைக்கும். பயம் பற்றிக் கொள்ளும். தேவ கட்டளைக்கு உடனடியாக கீழ்படிந்து நடக்கணும்கிற ஒரு அவசரத்தை, அவசியத்தை உணரச் செய்யும். ஆண்டவர் உண்மையிலேயே உங்களிடம் பேசி இருக்கிறார் என நம்புவார்கள். இது மிகப் பெரிய எழுப்புதலை கட்டளை இடும் என்பதில் ஐயமில்லை. தேவன் உங்களை விசேஷித்த விதமாக அவருடைய வருகையின் எச்சரிப்பை கூறுவதற்கு தெரிந்து கொண்டிருக்கிறார்.

கர்த்தரின் கிருபை உங்களோடு இருப்பதாக!



# 4) தலைப்புக்கான விளக்கவுரை

அன்பான தேவ பிள்ளைகளே !

பைபிளின் இரத்தின சுருக்கம் என்ற பெயர் கர்த்தர் எனக்கு அதிகாலை ஜெபநேரத்தில் கொடுத்தார். இதன் விளக்கம் – வேதத்தில் உள்ள எல்லா அதிகாரங்களையும், ஆவியானவர் துணையுடன் படித்தால் தான், கீழே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து செய்திகளும் புரியும். உலக தொடக்கம் முதல் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற காரியங்களும், இனி நடக்கப் போகிற காரியங்களும், வேதத்தின் அடிப்படையில் தான் நடந்து கொண்டிருக்கிறது. பைபிளின் மூலம் நாம் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகளும், நாம் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கிய நிகழ்வுகளும், குறிப்பாய் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது உலகத்தில் நடக்கப்போகும் சம்பவங்களும், உலகம் அக்கினியால் அழியப் போகிறதைக் குறித்தும், இந்த உலகத்தில் எப்படியெல்லாம் நாம் ஒவ்வொருவரும் வாழ வேண்டும் என்பதை பற்றியும், நமக்கு விளக்கி கூறுகிறது.

பைபிள் புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு என்று இரு பிரிவுகளாக உள்ளது. இவ்விரண்டு பிரிவுகளில் 66 புத்தகங்கள் அடங்கி உள்ளது. பைபிள் தேவ ஆவியானவரின் ஏவுதலால் தேவ பிள்ளைகளால் எழுதப்பட்டது. குறிப்பாக **பைபிளில் ஆதியாகமம், சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, ஏசாயா, மத்தேயு, லூக்கா, யோவான், வெளிப்படுத்தின விசேஷம்** ஆகிய பகுதிகளை, தயவு கூர்ந்து படியுங்கள், படித்து தேவஆசியை பெறுங்கள்.

தேவ பிள்ளைகளே, கடவுள் வானம், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கடல் மற்றும் அதில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும், முதல் மனிதர்களாகிய ஆதாம் ஏவாளையும் ஆறு நாட்களுக்குள் படைத்தார். ஏழாம் நாளோ, ஓய்ந்து இருந்தார். முதல் மனிதர்கள் வழியாக நம்மையும் படைத்து இந்நாள் வரை காப்பாற்றி வருகிற ஒரே கடவுள் **''யேகோவா''** என்னும் நாமம் கொண்டவர் *யாத்திராகமம். 6:2–3.* இவர் இவ்வுலகத்தை படைக்கும் முன்னரே தனக்கு ஒரு மகனை தம் வார்த்தையினால் உண்டாக்கினார். அவர் பெயர் தான் ''இயேசுகிறிஸ்து''. பிதாவாகிய தேவன் இயேசு என்ற தன் மகனை அருகில் வைத்துக்

கொண்டுதான் இந்த உலகத்தையே படைத்து இருக்கிறார் என்பதை *நீதிமொழிகள். 8:22–32* வரையிலும் *யோவான்.1:1–3* வரையிலும் உள்ள வேத வசனங்களை படித்தால் தெரிந்து கொள்ளலாம். கடவுள் தன்னால் படைக்கப்பட்ட பிள்ளைகளாகிய ஆதாம் ஏவாளை, என்றென்றும் உயிருடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தில் வைத்தார். அங்கு ஜீவ விருட்சங்களும், நன்மை தீமை அறியாத்தக்க கனி உள்ள ஒரு மரத்தையும் வைத்தார். கடவுள் நன்மை தீமை கனியை சாப்பிடவேண்டாம் என்ற ஒரு கட்டளை கொடுத்தார். சில காலம் இக்கட்டளைக்கு ஆதாம் ஏவாள் கீழ்படிந்திருந்தனர்.

பரலோகத்தில் தேவனால் படைக்கப்பட்ட ஓர் தூதன் கீழ்ப்படியாமையால் பூமிக்கு தள்ளப்பட்டான். *வெளி. 12:7–9*, அவ்வசனத்தை படியுங்கள், மேலும் *2பேதுரு.2:4*ல் *"பாவஞ் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத் தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்தார்"* என்று எழுதப்பட்டுள்ளது. இந்த வசனத்தின்படி பாவம் செய்த தூதன் சர்ப்பமாக மாறி ஏதேன் தோட்டத்துக்குள் சென்று ஆதாம் ஏவாளை ஏமாற்றி நன்மை தீமை அறியதக்கத்தான கனியை சாப்பிடச் செய்து பாவம் செய்ய வைத்து விட்டான். இப்படியாக தேவ சந்நிதியில் இருக்கவேண்டிய தூதன் பாவம் செய்ததால் தேவன் அத்தூதனை பரலோகத்திலிருந்து நரகத்தில் தள்ளி நியாயத் தீர்ப்புக்கு ஒப்புக் கொடுத்தார்.

உடனே அந்த கெட்ட தூதனுக்காக நரகமும் உருவாக்கப்பட்டது. அந்த கெட்டதூதன் தான், உலகத்தின் அதிபதியான பிசாசு. இந்த பிசாசானவனும் அவன் தூதர்களும் வான் மண்டலத்தில் நம்மை பரலோகம்

போகவிடாதபடி போராடுகிறார்கள். நம் பிரதான தூதரான மிகாவேல் அவனிடம் போராடி வெற்றி பெற்றிருக்கிறார். இதை *வெளி. 12:7ல் "வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும், வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள், வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை"* என்று காணலாம். இதை அறியாத ஆதாம், ஏவாள் பிசாசாகிய வலு சர்ப்பத்துக்கு கீழ்படிந்தார்கள். இப்படி கீழ்படிந்த பிள்ளைகள் (ஆதாம், ஏவாள்) இனி தோட்டத்தில் வாழ்ந்தால், இதுவரை சாப்பிடாத ஜீவ விருட்ச கனியை எட்டி பறித்து சாப்பிட்டு விடுவார்கள் என்பதை அறிந்த தேவன், அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டு அனுப்பிவிட்டார். *ஆதியாகமம்.3:22,23.* (ஜீவ விருட்சம் என்பது என்றென்றும் உயிருடன் வாழ வைக்கும் சக்தியுடைய கனி ஆகும்)

ஏன் அப்படி செய்தாரென்றால் முதலில், வாழ் நாள் முழுவதும் பாவம் அவனோடே இருக்கும். இரண்டாவது, கடவுளால் எல்லாவற்றையும் படைப்பது போல அவனாலும் படைக்க முடியும். அதைப் போல தீமைகள் (பாவங்கள்) எவ்வளவு செய்ய முடியுமோ?அவ்வளவும் செய்ய மனிதனுக்கு சக்தியை கொடுக்கிறதும் நன்மை தீமை அறியத்தக்க கனியே! எனவே தீமையான செயல்களை எல்லாம் அறிந்து செய்தாலும், அந்த பாவத்தை ஒரு மனிதன் எந்நாளில் வெறுக்கின்றானோ அந்நாளில் இருந்து கடவுளாகிய தேவன், மனிதர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டு, நித்திய ஜீவனை கொடுக்க விரும்புகிறார்.

இந்த நித்திய ஜீவன் ஒவ்வொரு மனிதனுக்கும் முதல் மரணம் நடந்த பிறகே கிடைக்கிறது. முதல் மரணம் அடையும் அநேக மனிதர்களின், (ஆத்துமாக்கள்) பரலோகத்தில் உள்ள தன்னை படைத்த கடவுளை சந்திக்க முடியவில்லை. ஏனென்றால் அவர்களிடம் தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்தம் இல்லை. அவர்கள் உண்மையான கடவுளை அறியாமல் இறந்து போகிறார்கள். இன்னும் சிலர் கடவுள் கூறிய கட்டளைகள் என்ன? அவரை ஆராதிப்பது எப்படியென்பதை தெரியாமல் அல்லது அறிந்து கொள்ள மனமில்லாமல் மரித்து விடுகிறார்கள். ஆனால் தேவன் இவர்களுக்காகவே நிறைய தீர்க்கதரிசிகளை இந்த பூமிக்கு அனுப்பி வைத்தார். *ஏசாயா,எலியா, எலிசா, தானியேல், எசேக்கியேல், சகரியா, யோவான்ஸ்நானகன்* என்ற தீர்க்கதரிசிகளை அனுப்பி தன் கட்டளைகளைச் சொன்னார்.

இப்பூமியில் வாழ்ந்த மக்கள் அநேகர் அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவேதான் ஆதி முதல் தன்னிடத்தில் இருந்த ஒரே மகன், இயேசு கிறிஸ்துவை இந்த உலகிற்கு மரியாள் என்ற கன்னிப் பெண் மூலம் பிறக்க வைத்தார். இயேசுவினுடைய பிறப்பு, எந்த மாதம், ஆண்டு என்று குறிப்பிடபடவில்லை. ஏனென்றால் அன்னை மரியாள் வயிற்றில் இயேசு இருக்கும் போது தான் மக்கள்தொகை கணக்கெடுப்பு முதன்முதலில் வந்தது *(லூக்கா. 2:1-6).* அப்போது கி.மு., கி.பி. என்ற காலம் இல்லை. அவர் பிறப்பை வைத்துதான் கிறிஸ்து பிறப்பதற்கு முன், கிறிஸ்து பிறப்புக்கு பின் என்று வரலாறே பிரிக்கப்பட்டது. எனவே, மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிவடைவதற்கு முன்பே இயேசு பிறந்துவிட்டார்.

அவர் பிறப்பின் நாள் கி.மு. நூற்றாண்டோடு முடிவடைந்துவிட்டது. இப்போது கி.பி. நூற்றாண்டுகள் நடைபெறுகின்றது. அவருடைய பிறப்பு (கி.மு.) இறுதி ஆண்டு காலமும் அவர் வளர்ப்பு கி.பி. ஆண்டின் தொடக்க காலமுமாய் இருந்ததால் அவர் பிறப்பை குறிப்பிட முடியவில்லை. அவர் பிறந்த காலம் கடும் குளிர்காலம் எனவே மார்கழி மாதமாகிய டிசம்பர் மாதம் கடும் குளிராய் இருப்பதால் டிசம்பர் 25ஆம் நாள் என்று குறிப்பிட்டு அதன்படி ஒவ்வொரு ஆண்டும் இயேசு பிறப்பை மகிழ்ச்சியாய் கொண்டாடுகிறார்கள். எனவே எந்த சபை மக்களாய் நீங்கள் இருந்தாலும், இயேசுவின் பிறப்பு மற்றும் இறப்புக்கான தேதி, நாள், ஆண்டு எது என்று ஆராயாமல் அவர் நம் பாவங்களை நீக்கி, நம்மை பரலோகம் சேர்க்கவே (இயேசுவனவர்) இப்பூமியில் பிறந்து தம் ஜீவனையும் கொடுத்தார் என்பதை நினைவில் கொள்வோம். எனவே பிதாவின் சித்தப்படி அவர் பேசிய கட்டளைகளை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதற்காகவே இயேசுவும் தனக்கென்று 12 சீடர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் பரலோக இராஜ்யத்தைக் குறித்து போதிக்க சொன்னார்.

பாவங்களை அறிந்து அவைகளை எல்லாம் விட்டு விட வேண்டுமென்று கற்பித்தார். பரலோக வாழ்வை சுதந்தரித்துக் கொள்ள பல கதைகள், உவமைகள் மூலமாக பிரசங்கம் செய்து விளக்கினார். இவ்வாறு இயேசு கிறிஸ்து இப்பூமியில் 2000 வருடங்களுக்கு முன்பு பிறந்து, கடவுளின் அனைத்து கட்டளைகளையும் கடைப்பிடித்து மனிதனாக வாழ்ந்து காட்டினார். அப்படி வாழும் போது தீர்க்கப்படாத அநேக நோய்களை சுகப்படுத்தினார், பிசாசுகளை விரட்டினார். அதிசய அற்புதங்களை செய்தார். உலக மக்களின் பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில் தன்னை ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தார். 3ஆம் நாள் கல்லறையில் இருந்து உயிர்த்தெழுந்தார். **அவரின் உயிர்த்தெழுதல் ஒவ்வொரு மனிதனுக்கும் இறந்த பின்பும் மறுவாழ்வு உண்டு என்பதை உணர்த்துகின்றது.** *அப்போஸ்தலர். 1:3*–ல் சொல்லபட்டபடி நாற்பது நாட்கள் தன் சீடர்களுக்கு காட்சி தந்து இறுதியாக மீண்டும் ஒருமுறை *லூக்கா.24:38–50*–ல் உள்ளபடி தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளைப் பேசிய பிறகு *லூக்கா. 24:51, அப்போஸ். 1:9*–ன்படி மேகம் அவரை எடுத்துக் கொண்டுபோய், பரலோகம் சேர்த்து இப்போது பிதாவோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அங்கிருந்து பரிசுத்த ஆவியானவரை அனுப்பியுள்ளார். இப்போது நமக்கு தெய்வமாக, தேற்றரவாளனாக இவ்வுலகில் இருப்பவர் **பரிசுத்த ஆவியானவரே** இதுவே பைபிளின் இரத்தின சுருக்கம் ஆகும்.



# அரசு கொடுக்கி...

## ஆனால், இதைக் கொண்டு உங்களைக்...

– நன்றி –

14 அக்டோபர் 2010

புதிய தலைமுறை

புத்தகம்

வெளிப்படுத்தல். 13:16 ல் சிறியோர், பெரியோர் ஐசுவரியவான்கள் தரித்திரர் சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கையிலாவது, நெற்றியிலாவது ஒரு முத்திரையை பெறும்படிக்கு (இந்த ஆதாரத்தின் படி வெளிவந்த செய்தியை இணைத்துள்ளேன்)

அடையாள அட்டை நம் கையில் இருக்கும் போது நாம் எங்கு போகிறோம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்ற தகவல்களையும், மற்றும் உங்களது பிரைவசி என்று சொல்லப்படும் அந்தரங்கத்தை கூட அரசால் கண்காணிக்க முடியும் என்பதை அரசு கொடுக்கிறது ஆதாரம் என்ற தகவல் மூலம் அறிந்து கொள்ளுங்கள்.

[illegible]

அது மட்டுமல்ல, அரசு நினைத்தால் இந்த அட்டையைக் கொண்டு, எந்தக் குடிமகன் எந்த நேரத்தில் எங்கு இருக்கிறார் என்பதைக் கூட கண்டுபிடித்துவிட முடியும் என்று கூடச் சொல்கிறார்கள்.

அதெப்படி முடியும்?

நீங்கள் சென்னையிலிருந்து

# ஏது 'ஆதாரம்'

## கண்காணிக்கவும் செய்யலாம்

■ ராகுல்

பாண்டிச்சேரிக்குப் பயணம் செய்திருந்தால், பாண்டிச்சேரி எல்லைக்குள் நுழைந்ததும், உங்கள் செல்போனில் 'வெல்கம் டு பாண்டிச்சேரி' என்று ஒரு எஸ்.எம்.எஸ். வரும். உங்களுக்கு செல்போன் சேவை அளிக்கும் நிறுவனம் அதை அனுப்பியிருக்கும். அவர்களுக்கு நீங்கள் பாண்டி வந்தது எப்படித் தெரியும்?

இவற்றிற்குப் பின் இருப்பது RFID (RADIO FREQUENCY IDENTIFICATION) என்னும் தொழில்நுட்பம். உங்கள் செல்போன் சிம் கார்டில் ஒரு எண் கொடுக்கப்பட்டிருக்கும். அதற்கு RFID Tag என்று பெயர். சிம்மில் பதிக்கப்பட்டுள்ள இந்த டேக், வான் வெளியில் சுற்றித்திரியும் GPS சாட்டிலைட்களுடன் செல்போன் டவர் உதவியால் தொடர்பில் இருந்து கொண்டே இருக்கும். அதைக் கொண்டு நீங்கள் எங்கிருக்கிறீர்கள் எனக் கண்டுகொள்ள முடியும்.

சென்னையில் உள்ள வண்டலூர் உயிரியல் பூங்காவில் விலங்குகளைப் பார்க்க வரும் பார்வையாளர்களுக்கு ஒரு RFID TAGஐ வழங்க 2008ஆம் ஆண்டே முடிவு செய்து விட்டனர். ஏனெனில், காடு போல இருக்கும் அந்தப் பகுதியில் பார்வையாளர் யாராவது காணாமல் போய் விட்டால் TAG மூலம் அவர் எங்கு இருக்கிறார் என்று எளிதில் கண்டுபிடித்துவிடலாம்.

RFID TAGஐ அதிகம் தயார் செய்யும் நாடுகளில் நம் இந்தியாவும் ஒன்று. அதுவும் நம் சென்னையில்தான் அதிகம் எனக் கூறப்படுகிறது.

சரி, RFIDயின் பரிணாம வளர்ச்சியில் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும்?

ATM மையங்களில் சில சமயம் நீங்கள் சாதாரணமாக கதவைத் திறக்க முயற்சி செய்தால் அது முடியாது. உங்கள் ATM கார்டைச் சொருகிய பின்தான் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவீர்கள். இனி அந்தக் கவலையும் உங்களுக்கு வேண்டாம். வரப்போகிறது BIOMETRIC CHIP.

விஞ்ஞானத்தின் அபரிமிதமான வளர்ச்சியில் இதோ ஒரு மைல் கல். அரிசி அளவு உள்ள இந்த 'சிப்' மனித உடலில் எளிதில் பொருத்திக்கொள்ளும் அளவிற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு முறை இந்த சிப்பை கைகளில் அல்லது நெற்றியில் பொருத்திக்கொண்டால் வாழ்நாள் முழுவதும் அதை வெளியே எடுக்கத் தேவையில்லை.

> அரிசி அளவு உள்ள இந்த சிப்பை கைகளில் அல்லது நெற்றியில் பொருத்திக்கொண்டால் வாழ்நாள் முழுவதும் அதை வெளியே எடுக்கத் தேவையில்லை

நீங்கள் ATM மையத்திற்குச் சென்றவுடன் அங்குள்ள சென்சார், சிப்பில் உள்ள தகவல்களைக் கொண்டு உங்களை அடையாளம் கண்டு, அதுவே உங்கள் பெயரைக் கூறி கதவைத் திறந்து வரவேற்கும்.

ஒரு சில விஷயத்திற்குக் கூடப் பல ஆவணங்களை எடுத்துப் போக வேண்டாம். காலதாமதத்தைத் தவிர்க்கலாம். நம்முடைய அடையாளத்தை வேறு யாரும் தவறாகப் பயன்படுத்த முடியாது என்ற பல நன்மைகள் இருந்தாலும் வேறு சில சங்கடங்களும் இருக்கின்றன.

அதில் முக்கியமானது உங்களது 'பிரைவசி' எனச் சொல்லப்படும் அந்தரங்கம்.

இந்தச் சிப் அட்டை உள்ள ஒவ்வொருவரது தகவலும் அரசாங்கத்தின் டேட்டா பேஸில் இருக்கும். அதைக் கொண்டு உங்களைப் பற்றிய முழு விவரத்தை அது தெரிந்துகொள்ள முடியும் என்பது மட்டுமல்ல. நீங்கள் எங்கு போகிறீர்கள், வருகிறீர்கள் என உங்கள் நடமாட்டத்தை அரசு கண்காணிக்க முடியும். அது மட்டுமல்ல, அந்த அட்டை உங்கள் வசம் இல்லை என்றால் போலீஸ் உங்களை சந்தேகத்தில் துன்புறுத்தக் கூட செய்யலாம்.

நல்லதும் கெட்டதும் கலந்ததுதானே வாழ்க்கை. மறுக்கவும் இல்லாதவரை வழியில் ஏது பயம்?

– நன்றி – 14 அக்டோபர் 2010 புதிய தலைமுறை புத்தகம்

## 8) எச்சரிக்கை ! எச்சரிக்கை !!
## 666 முத்திரையான பயோசிப்
### இந்த உலகம் அழிவின் வாசற்படிக்கு வந்துவிட்டது

பிள்ளைகளே, பரலோகத்தை சுதந்தரிக்க விரும்புகிறீர்களா ?

14-10-2010ல் வெளிவந்த புதிய தலைமுறை என்ற புத்தகத்தில் இருந்து "அரசு கொடுக்கிறது ஆதாரம்" என்ற பக்கத்தை கத்தரித்து இப்புத்தகத்தில் இணைத்துள்ளேன். பக்கம் 13–14ல் இந்த பகுதி செவ்வக வடிவில் உள்ள அம்புகுறி இட்ட இடத்தை கவனித்துப் படியுங்கள். ஒரு மனிதனுக்கு கைகளில் அல்லது நெற்றியில் ஒரு சிப்பை பொருத்திக் கொண்டால் வாழ் நாள் முழுவதும் அதை வெளியே எடுக்கத் தேவையில்லை. சிப் என்பது முத்திரையை குறிக்கும். இதைத்தான் வெளி. 13:16 ல் காணலாம். இவ்வசனத்தில் குறிப்பாய் வலதுகை என்றும் குறிப்பிட்டிருக்கிறது, எனவே குறிப்பாய் எந்த கையில் பொருத்துவார்கள் என்பதை கூட நம் தேவன் சொல்லிவிட்டார், எனவே இதன்படிதான் ஒரு மனிதனுக்கு சிப்பை பதிவார்கள்.

29-9-2011 தினத்தந்தி செய்தியில் "அட்டகாசமான ஆராய்ச்சி" என்ற ஒரு சிறிய தகவல் வெளிவந்தது. இந்த தகவலை படித்துப்பாருங்கள்.



அட்டகாசமான ஆராய்ச்சி

ஒரு மனிதனின் மூளையில் அவன் என்னென்ன யோசிக்கிறானோ அதையெல்லாம் ஒரு மென்பொருள் மூலம் மாற்றப்பட்டு ஒரு படக்காட்சிப்போல் அனைவராலும் அறிந்துக் கொள்ள முடியும். இதற்குண்டான ஆதாரமும் வந்துவிட்டது. இவையெல்லாம் எதற்கென்றால் பயோசிப் வெகுவிரைவில் வருவதற்கே. பிள்ளைகளே நீங்கள் ஒருவேளை நினைக்கலாம் நாம் தான் பேன் கார்டு, ஆதார் அடையாள அட்டைக்கே நம் உடல் உறுப்புகளின் அடையாளங்களை கொடுத்துவிட்டோமே என்று நினைத்து கவலைப்படலாம். ஆனால் நம் ஆண்டவர் சொல்லும் கட்டளை என்னவெனில் நெற்றியில் அல்லது வலது கையில் போடும் முத்திரையை தான் குறிப்பாக போடவேண்டாம் என்று சொல்லுகிறார்.

எனவே முத்திரை பதிய வேண்டும் என்று உலக மக்களுக்கு அறிவிப்பு வரும். ஆண்டவர் பிள்ளைகளாகிய நாம் முத்திரையை பதியக் கூடாது என்று வேதாகமம் நமக்கு எச்சரிக்கை கொடுத்துள்ளது. மீறி முத்திரையை பதித்துக் கொண்டால் நரகமாகிய அக்கினிக் கடலில் தள்ளப்படுவோம். இதை *வெளி. 14:9–11, வெளிப்படுத்தல். 19:20* ஆகிய வேதப் பகுதியில் காணலாம். **இந்த வசனங்களில், முத்திரை பதியக் கூடாது என்று கடவுள் தந்த கட்டளை மறைந்துள்ளது.**

உலக ஆசீர்வாதமான, உங்கள் பிள்ளைகளின் படிப்பு, திருமணம், அரசு தரும் சலுகைகள், அரசு வேலை போன்ற எந்த காரணத்திற்காகவும் முத்திரையை பதியவே கூடாது. ஒரு வேளை நீங்கள் ஒரு அரசு அதிகாரியாக கூட இருக்கலாம் ? நீங்களும் கடவுளுடைய பிள்ளைதான், உங்களையும் தேவன் நேசிக்கிறார். எனவே **பயோசிப் (Bio-Chip)** என்ற முத்திரையை நீங்கள் போடாமல் இருந்து பரலோகம் என்ற சொர்க்கத்தை சுதந்தரிக்கவே கடவுள் விரும்புகிறார். எனவே இந்த முத்திரையை தரித்துக் கொள்ள வேண்டாம். இந்த சட்டம் தேவனாலே உலகத்துக்கு அனுமதிக்கப்படுகின்றது. ஆதார வசனம் *வெளி. 17:17 "தேவன் தம்முடைய வார்த்தைகள் நிறைவேறுமளவும், அவர்கள் தமது யோசனையை நிறைவேற்றுகிறதற்கும், ஒரே யோசனையுள்ளவர்களாயிருந்து, தங்கள் ராஜ்யத்தை மிருகத்திற்கு கொடுக்கிறதற்கும் அவர்களுடைய இருதயங்களை ஏவினார்"* இவ்வசனத்தில் **மிருகம்** என்று குறிப்பிடப்பட்டு இருப்பது **கணினி** ஆகும்.

அப்படி மீறி பதித்துக் கொண்டால், அதை நம் உடலில் இருந்து எந்தக் காரணத்தை முன்னிட்டும் எடுக்க முடியாது, எடுக்க முயன்றால் நம் உயிர் போய்விடும். நாமும் நம்முடைய ஆத்மாவும் நரகத்திற்கு தான் போகும். மேலும் முத்திரைக் காலத்தில் குறிப்பாக சிலர், தேவனின் சித்தத்தின்படி கொலையுண்டு, இரத்த சாட்சியாய் மரிப்பார்கள். எல்லா பிள்ளைகளும் அல்ல. எனவே சி.டி.க்கள் மூலம் நீங்கள் பார்த்தபடி முத்திரை போடாத எல்லோரையும் கொலை செய்யமாட்டார்கள். *வெளி. 13:17*ன் படி **கொள்ளவும், விற்கவும் கூடாதபடி செய்தது**, என்று வசனம் சொல்கிறது. வசனத்தின்படி அந்நாட்களில் பொருட்கள் வாங்கவும், விற்கவும் முடியாது. இந்த காரியம் மட்டும் சற்று கடினமாக இருக்கும், எனவே பயப்பட வேண்டாம். விசுவாசமாய் இருங்கள். மிக குறைந்த

காலமே முத்திரை இருக்கும் (அவருடைய காலத்தை யாராலும் அறிய முடியாது). *வெளி. 17:12ல்* முத்திரையின் காலம் ஒரு மணி நேரம் அளவுதான் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. *2பேதுரு.3:8* வசனம் சொல்வதை தியானியுங்கள், *"பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்"* இதன்படி முத்திரையாகிய பயோசிப் (Bio-Chip) குறைந்த காலமே இருக்கும். அதற்குள் ஆண்டவர் இயேசு நம்மை உயிருடன் அழைத்துச் சென்று பரலோகம் சேர்ப்பார். **திராணிக்கு மேல் நம்மை சோதிக்க மாட்டார்.**

முத்திரையை குறித்த விளக்கம் இப்புத்தகத்தில் கட்டளையாக கொடுக்கப்பட்ட பகுதியிலும் என்றும் நினைவில் இருக்க வேண்டிய பகுதியிலும், ஆவியானவர் என்ன சொல்கிறார் என்பதை கவனமாய் இப்புத்தகத்தின் உட்பகுதியில் எழுதப்பட்டுள்ளதை படியுங்கள். இதன்படி முத்திரையை தரித்துக் கொள்ளாமல் இருக்க எச்சரிக்கையாய் இருங்கள். இரகசிய வருகை சமீபமாய் இருக்கிறது. **நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பெயர் பட்டியலில் இருக்கிறீர்களா ?** என்பதை ஆய்வு செய்து கொள்ளுங்கள். இல்லையென்றால் கீழே உள்ள வேதத்தின் கட்டளைகளின் படி வாழ்ந்து சரி செய்து கொள்ளுங்கள். கடைசி மணி துளி நேரத்தில் தான் இப்போது பூமியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது கிருபையின் காலம், எனவே கட்டளைக்கு கீழ்படிந்து வாழ உறுதி எடுத்து இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன்.

சரி இப்பொழுது வசனங்கள் அடங்கிய கட்டளைகளை வாசிப்போம்.

<u>குறிப்பு:</u> இனி படிக்கப் போகும் பகுதிகளை பரிசுத்த ஆவியானவரிடத்தில் சிறிது நேரம் ஜெபித்து விட்டு பிறகு படியுங்கள். ஏனென்றால் இப்பகுதியாகிய முதற்பகுதியை மட்டும் படித்து அதன்படி வாழ்ந்தீர்கள் என்றால் கட்டாயம் பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்வீர்கள். இரண்டாம், மூன்றாம் பகுதிகள் நீங்கள் தெரிந்துக் கொள்ளவேண்டிய பகுதிகளே.

## 6) நாம் கட்டாயம் கடைபிடைக்கவேண்டிய கட்டளைகள் !

தேவ பிள்ளைகளே, கட்டளைகளை கட்டாயம் கடைப்பிடித்தே வாழவேண்டும் என்று அநேகர் சொல்கிறார்கள். மேலும் இந்தப் புத்தகமும் கட்டளைக்கு கீழ்படிந்து நடக்கவேண்டும் என்றே சொல்கிறது. அப்படியெல்லாம் நம் தேவன் சரியாய் நியாயந் தீர்க்க மாட்டார். நாம் வணங்குகிற கடவுள் இரக்கமுள்ளவர், ஏனென்றால் சிலுவையில் அறையும் போது, வலதுபுறமும், இடது புறமும் இரண்டு குற்றவாளிகளை அறைந்து இருந்தார்கள். அவர்களில் ஒருவனை மன்னித்து இன்றே **பரதீசிலிருப்பாய்** என்று சொன்னாரே. அந்த குற்றவாளி என்ன ஞானஸ்நானம் எடுத்தானா? இல்லை எல்லா கட்டளைகளையும் கடைபிடித்தானா? என்று நீங்கள் ஒரு வேளை மனதில் நினைக்கலாம். அப்படி நினைக்கும் அன்பு பிள்ளைகளே நீங்கள்

*லூக்கா.23:39–44,* வரையில் உள்ள வேத வசனத்தை சற்று தியானித்துப் பாருங்கள். அதில் ஒருவன் இயேசுவை இகழ்கிறான். ஆனால் மற்றவன் அந்த சிலுவை பாடு நிலையிலும் தேவனுக்கு பயப்படவில்லையா என்று, மற்ற கள்ளனை கடிந்து கொள்கிறான். நாம் அடையும் தண்டனை நம் பாவத்தினால் என்பதை உணர்கிறான். இயேசுவானவர் பாவமே செய்யாதவர் என்பதையும், அவர் தான் இனி ராஜ்யத்தை ஆளப்போகிறவர், மீண்டும் வரப்போகிறவர் என்பதையும், அறிந்து கொண்டான். மற்றொரு குற்றவாளியோ, அந்த தருணத்தை இழந்துவிட்டான். இப்படியாக மனம்மாறிய நல்ல கள்ளன் இயேசுவிடம், நீர் மீண்டும் வரும்போது என்னை நினைத்தருளும் என்று விசுவாசத்தோடு மன்றாடினான். எனவே தான் இயேசுவானவர் அவன் பாவத்தை மன்னித்து பிதாவினுடைய நாமத்தில் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருப்பார். எப்படியெனில் அவர் பூமியில் வாழும்போதே பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். (*லூக்கா.5:24*) அதேபோல், இயேசுவானவர் பூமியில் வாழும்பொழுது பலருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் (*யோவான்.3:22,25,26,27*), இவ்வசனங்களில் 22ஆம் வசனத்தை பார்ப்போம். *"இவைகளுக்குப்பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள், அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங் கொடுத்து வந்தார்"* இவ் வசனத்தின்படி பூமியில் ஞானஸ்நானம் கொடுத்த இயேசுவும், சிலுவையில் அந்த நல்ல கள்ளன் அருகிலேயே இருந்ததால், இன்றே பரதீசிலிருப்பாய் என்ற இரட்சிப்பின் நிச்சயத்தை பெற்றுக் கொண்டான். ஏறக்குறைய மூன்று மணி நேரமளவும் அந்த நல்ல கள்ளன் இயேசுவோடு பாடுகளை அனுபவித்திருக்கிறான். இப்படியாக பாடுகளை அனுபவிக்கும் ஒரு மனிதனால் பேச முடியுமா ? சிந்தித்துப் பாருங்கள். மரிப்பதற்குள் எப்படியாவது இரட்சிப்பை பெற்றே ஆகவேண்டும் என்ற வைராக்கியம் அவன் மனதில் இருந்திருக்கும். எனவே எப்படி கடைசி 3 மணி நேரத்தில் நல்ல கள்ளன் இரட்சிப்பு பெற்றானோ, அவனைப் போல் நாமும் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தர்க்கம் பண்ணாமல் கட்டளைகளை கடைபிடித்து இரட்சிப்பை பெற்றுக் கொள்வோம்.

***"வெளி.22:14,ஜீவவிருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய், நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்"***

## I) விக்கிரக ஆராதனை கூடாது

பிதா இந்த உலகத்தில் உள்ள சகலத்தையும் படைத்து என்றும் காத்துவருபவர் என்று *ஆதியாகமம்.1:1–31ல்* வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து என்பவர் அவருடைய மகன். இவரே இந்த உலகத்தின் மக்களுடைய பாவங்களை போக்குவதற்கு மனிதனாக பிறந்தார். இயேசுவை இரட்சகராக முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளவேண்டும். கிறிஸ்து உயிர்த்து பரலோகம் சென்றபின் நம்மைத் தேற்ற பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியை ஏற்றுக்

கொள்ளவேண்டும். பிதாவினால் நமக்கு கொடுக்கப்பட்ட கட்டளைப்படி மட்டும் வாழவேண்டும். நாம் வணங்கும் தெய்வத்திற்கு உருவம் வைக்கக் கூடாது. இக்கட்டளைக்கு யாரை கீழ்படிய சொல்கிறார் என்று பாருங்கள். எகிப்து தேசத்தில் அடிமைத் தனத்திலிருந்து மீட்டு வந்த பிதாவை மட்டும் ஆராதித்துவந்த பிள்ளைகளுக்கே இக்கட்டளைகளை குறிப்பாக கொடுத்திருக்கிறார் என்பதை தியானியுங்கள். ஆண்டவரை அறியாத பிள்ளைகளுக்கு கட்டளைகளை கொடுக்கவில்லை. யாக்கோபின் பிள்ளைகளாகிய இஸ்ரவேல் பிள்ளைகளுக்கே இக்கட்டளைகளை கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்து அனைத்து சபை விசுவாசிகளும் இக்கட்டளைக்கு கீழ்படியவேண்டும். ஆதார வசனம் *யாத்திராகமம். 20:1–5* , *மத்தேயு.22:37* வது வசனத்தில் *"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக !"* என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே எந்த விக்கிரகத்தையும் (சிலை வழிபாடு) வணங்கக் கூடாது. இந்த வழிபாட்டுக்கு விலகவில்லை என்றால் அக்கினி கடல்தான் பங்கு என்பதை *வெளிப்பாடு.21:8* நம்மை எச்சரிக்கிறது. சிறிய பிள்ளைகளுக்கு இவர்தான் இயேசு என்று காண்பிக்க பல சிலைகள் உருவங்கள் செய்து வைக்கிறோம் அதை வழிபட அல்ல. அதற்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று சொல்கிறோம். ஆனால் நம் இனத்தை சேர்ந்தவர்கள் தான் ஆபிரகாமுடன் இணைந்த ஆகார் பிள்ளைகள், அவர்கள் சந்ததி தான் முஸ்லீம் இன மக்கள். அவர்கள் ஒரு சிலையையும் வணங்கவில்லை. அவர்கள் குடும்பங்களிலும் சிறு பிள்ளைகள் உண்டு அல்லவா? எனவே பிதாவை வணங்கி இயேசுவை, இரட்சராக ஏற்றுக் கொண்டு பைபிள் படிக்கும் நாம் விக்கிரக பாவத்தை விட்டு விலகவேண்டும். இயேசு சிந்திய இரத்தமே நம் சகல பாவங்களையும் நீக்கி பரிசுத்தப்படுத்தி வருகிறது என்பதை *1யோவான்.1:7*ல் காணலாம். எனவே நாம் விக்கிரக ஆராதனையை விட்டு திரியேக தேவனையே எப்போதும் வணங்கி ஆராதிக்க வேண்டும்.

## II) ஞானஸ்நானம் எடுக்கும் முறை.

விபரம் தெரிந்த வயதில் உண்மையான கடவுள் யார் என்பதையறிந்து, அவரின் கட்டளைப்படி வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு பிதாவையும் இயேசுவையும் பரிசுத்த ஆவியானவரையும் ஏற்றுக் கொண்டு மன உறுதியோடு முழுக்கு ஞானஸ்நானம் கட்டாயம் எடுக்கவேண்டும். அப்போதுதான் நம் பழைய பாவங்களை நீக்கி உயிர்த்த கிறிஸ்துவின் சாயலில் இணைய முடியும். இதை *ரோமர்.6:2–5* ல் காணலாம்.

ஞானஸ்நானம் என்பது ஒரு முறை தான் எடுக்கவேண்டும். இப்புத்தகத்தை வாசிக்கும் தேவ பிள்ளைகள் யாராய் இருந்தாலும் நீங்கள் பெற்று இருக்கும் ஞானஸ்நானம் கீழே கொடுக்கப்பட்ட வசனத்தின்படி இருக்கிறதா என்பதை சரி செய்து கொள்ளுங்கள். அதுவே சரியான ஞானஸ்நானம் ஆகும். இயேசுவானவரும் இவ்வசனங்களில் ஞானஸ்நானமானது எப்படி இருக்கவேண்டும் என்று மறைமுகமாய்

சொல்லியிருக்கிறார். வசனத்தை பார்ப்போம் *மத்தேயு.28:18–20ல்* தம் சீடர்களை அழைத்து சகல ஜாதிகளையும் சீஷராக்க சொல்கிறார். பிறகு பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுத்து, நான் கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்ளும்படி உபதேசிக்கச் சொல்கிறார். இப்படி இயேசுவானவர் சொல்வதை பார்த்தால் சிறு குழந்தையில் எடுக்கும் ஞானஸ்நானத்தை குறிக்கவில்லை என்பது உங்களுக்கு புரியும். ஞானஸ்நானம் என்பது ஞானம் + ஸ்நானமாகும். ஞானம் என்பது கடவுளுக்கு பயப்படுகிற பயம் என்பதை *நீதிமொழிகள். 1:7ல்* காணலாம். கடவுளுக்குரிய பயம் வந்த பிறகு தான் நாம் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும். அப்போது தான் இயேசுவானவர் சொன்னபடி அவர் நம்மை சீஷனாக ஏற்றுக் கொள்ளமுடியும். மேலும் ஞானஸ்நானத்தை குறித்து *1பேதுரு. 3:20,21*ஐ படியுங்கள். இதன் விளக்கத்தைப் பார்ப்போம்.

மேலும் ஞானஸ்நானம் எடுக்கும் ஒருவர் கடவுளோடு வாழ முயற்சி செய்யும்போது அவருடைய மனசாட்சியில் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு ஞானஸ்நானம் கொடுக்கும் ஊழியக்காரரிடத்தில் வாயை திறந்து உடன்படிக்கை பண்ணவேண்டும். எப்படியெனில் திருமணம் செய்யும் ஆணும், பெண்ணும் உடன்படிக்கை பண்ணுகிறோம் அல்லவா அதுபோல ஞானஸ்நானம் எடுத்த பிள்ளையாகிய நீங்கள் உங்கள் ஊழியக்காரரிடத்தில் வாயை திறந்து பேசி நல்மனசாட்சியோடு ஞானஸ்நானம் எடுத்திருக்கிறீர்களா? என்று யோசித்துப் பாருங்கள்.

மற்றொரு வசனத்தை பார்ப்போம். நம் இயேசுவானவர் *யோவான்.3:3–5ல்* ஒரு மனிதன் மறுபடியும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மிக உறுதியாக சொல்கிறார். இந்த வசனத்தை தியானியுங்கள், மறுபடியும் பிறக்க சொல்கிறார் அல்லவா? அதற்கு அர்த்தம் என்ன? பிறப்பு என்றாலே தாயின் கருப்பையில் இருந்து குழந்தை வெளிவருவது தானே, அப்படியென்றால் பிறக்கும் குழந்தை எப்படியிருக்கும்? உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை இரத்தம் தோய்க்கப்பட்டதாய் இருக்கும் அல்லவா. அந்த நிலையில் தான் ஒரு மனிதனை மீண்டும் பிறக்கச் சொல்கிறார். சிலர் எடுத்த ஞானஸ்நானம்

என்பது தெளிப்பு ஞானஸ்நானமாகவும் குழந்தை ஞானஸ்நானமாகவும் இருக்கிறது. ஆனால் தாயின் வயிற்றில் பிறந்த குழந்தை இரத்தத்தால் மூழ்கி நனைந்து இருப்பது போல மறுபடியும் நாமும் ஜலத்தினால் பிறக்கவேண்டும். இப்படி ஜலத்தினால் ஞானஸ்நானம் ஒரு ஊழியக்காரர் கொடுப்பார், ஆனால் பரிசுத்த ஆவியை கொடுப்பது உன்னதத்திலிருக்கிற பிதாவானவரே (*லூக்கா.24:49*) எனவே ஒரு ஊழியக்காரர் பரிசுத்த ஆவியை ஞானஸ்நானம் எடுக்கிற பிள்ளைக்கு கொடுக்கவே முடியாது. இப்பரிசுத்த ஆவியை இயேசுவானவரே பிதாவிடத்திலிருந்து தான் பெற்றுக் கொண்டார். அதைப்போல நாமும், பரிசுத்த ஆவியை பிதாவினிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். எப்படி பெற வேண்டும் என்பதை ஆவியானவர் என்னிடம் விளக்கினார். ஜலத்தினால் மறுபடியும் பிறந்த ஒரு பிள்ளை ஒரு நாளில் ஒரு மணி நேரமாவது பிதாவினிடத்திலும், இயேசுவினிடத்திலும் ஜெபிக்கும் முறையை வளர்த்து கொள்ளவேண்டும். இப்படியாக நாம் குறைந்தது 10 மாதம் வரை ஜெபித்தால் தான் நமக்குள் ஆவியானவர் பிறப்பார். ஒரு தாயின் வயிற்றில் ஒரு குழந்தை உருவாக 10 மாதம் ஆகிறதே, அதே போல் நாம் தொடர்ந்து ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் சிறிது சிறிதாக தங்குவார். இப்படி நமக்குள் தங்கிய ஆவியானவரை ஜெப உறவின் மூலம் இறுதிவரை, பாதுகாத்துக் கொண்டால் தான், மறுபடியும் நாம் ஆவியில் பிறந்துவிட்டோம் என்பதை அறிந்து கொள்ளலாம். இப்படியாக, ஆவியில் இன்னும் பிறவாமல் இருப்பீர்களென்றால் இனி வரும் நாட்களிலாவது தொடர்ந்து பிதாவோடும், இயேசுவோடும், நாள்தோறும் சில மணி நேரம் ஜெபத்தின் மூலம் உறவாடி பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள். இப்படி செய்வீர்களென்றால் தான் நீங்கள் பெற்ற ஞானஸ்நானம் அர்த்தமுள்ளதாக இருக்கும். அநேகர் தண்ணீரில் எடுத்த ஞானஸ்நானத்தோடு மட்டும் என் ஆலயத்திற்கு வந்து போகிறார்கள். இன்னும் ஆவியில் பிறக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் சீக்கிரத்தில் பிறக்கவேண்டும் என்பதற்காகவே தெளிவாக ஞானஸ்நானத்தைக் குறித்து எழுதச் சொன்னார். கீழ்கண்ட வசனமாகிய *மத்தேயு.3:13-17*லும் *லூக்கா.3:21-23, மாற்கு.6:45-46* வரையிலும் காணலாம். இவ்வசனங்களில் இயேசுவானவர் இப்பூமியில் வாழும்போது ஞானஸ்நானம் எடுத்து பிதாவோடு ஜெப உறவில் நிலைத்திருந்து முன் மாதிரியை காண்பித்து சென்றிருக்கிறார். *லூக்கா.3:21*ல் *"ஜனங்களெல்லோரும் ஞானஸ்நானம் பெற்ற போது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது."*

## III) *10 கட்டளைகளை கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டும்*

நியாயப்பிரமாணத்தின்படி தான், நியாயத்தீர்ப்பு என்று *யாக்கோபு.2:9*ல் கூறப்பட்டுள்ளது. தேவன் தந்த 10 கட்டளைப்படி கட்டாயம் வாழவேண்டும். ஆதார வசனம் *யாத்திராகமம்.20:1-17* ல் உள்ள கட்டளைகளை படித்து மனப்பாடம் செய்து இருதயத்தில் நிறுத்திக்

கொள்ளுங்கள். இக்கட்டளைகளை இயேசுவானவர் *மத்தேயு.22:36-40*ல் இரண்டு கட்டளையாக மாற்றியுள்ளார். இதிலுள்ள முதல் கட்டளையை படித்து தியானிங்கள். சரி வசனத்தைப் பார்ப்போம். *"இயேசு அவனை நோக்கி உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக"* இதுவே முதலாம் கற்பனை என்று கூறியிருக்கிறார். இவ்வசனத்தின்படி பார்க்கும் போது **நமக்குள் இருதயம் ஆத்துமா மனம் என்று மூன்று பிரிவு உள்ளது** என்பது தெளிவாகிறது. அப்படியென்றால் ஒரு தேவப் பிள்ளையின் இருதயம் முற்றிலும் அவருடைய சிந்தனையால் நிறைந்திருக்கவேண்டும். மனதில் மனம்போகிற போக்கு இருக்க கூடாது. ஆத்துமாவானவது நாம் தூங்கும்பொழுது கூட கடவுளை துதிக்கும் வகையில் இருக்கவேண்டும் என்பதை இக்கட்டளை வலியுறுத்துகிறது. இப்படியாக ஒரு தேவப் பிள்ளை கட்டளையை தியானித்து நடந்தால் *யாத்திராகமம்.20:1-17*ல் உள்ள எல்லா கட்டளையின் படியும் வாழ முடியும்.

இந்த கட்டளைக்குள் மறைபொருளாய் இருக்கும் கட்டளைகளும் உண்டு. *ஏசாயா.28:13* இந்த கற்பனையாகிய கட்டளைகளை, இங்கே கொஞ்சம் அங்கே சொஞ்சமுமாய் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் பைபிள் முழுவதையும் தேவ பிள்ளையாய் இருக்கும் நாம் கட்டாயம் படிக்கவேண்டுமென தேவன் விரும்புகிறார். எனவே வேதம் முழுவதும் படித்து அதன்படி வாழ்ந்து நித்திய ஜீவனையும் நன்மையையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

## IV) *அன்பு செய்து வாழவேண்டும் (பகைக்கிறவர்களிடம்)*

அனைவரையும் அன்பு செய்து வாழவேண்டும் என்பது கட்டளைகளில் மிகவும் முக்கியமான கட்டளை ஆகும். *மத்.22:37-40*ஆம் வசனத்தில் இயேசு கிறிஸ்து பிதாவினால் கொடுக்கப்பட்ட 10 கட்டளைகளை இரண்டு கட்டளையாக மாற்றினார். இதில் 2வது அன்பைப் பற்றி கூறுவது ஆகும். *உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்தில் அன்பு கூறுவாயாக* என்பதே அந்த 2ஆம் கட்டளை. நாம் செலுத்தும் அன்பு எப்படி இருக்கவேண்டுமென்றால், *1கொரிந்தியர்.13:1-13* ல் சொல்லப்பட்டபடி இருக்கவேண்டும். இவ்வதிகாரத்தில் அன்பு என்னும் வார்த்தை எதனை குறிக்கிறது என்றால் *1யோவான்.5:3* ஆம் வசனத்தில் சொல்லப்பட்டபடி தேவனுடைய கட்டளைகள் அனைத்தையும் கடைபிடிக்கும் ஒருவரை குறிக்கிறது. இப்படிப்பட்டவர்கள் மட்டும் தான் *1கொரிந்தியர்.13* ஆம் அதிகாரத்திலுள்ள எல்லா துன்பங்களையும் சகித்துக் கொள்ள முடியும். *கலாத்தியர்.5:14* ஆம் வசனத்தின்படி நியாயப் பிரமாணம் முழுவதும் அன்பு செலுத்துவதன் மூலமே அடங்கி இருக்கிறது. எனவே நம் பகைவர்களிடம் கூட சமாதானம் செய்து அன்புடையவராய் கட்டாயம் வாழ வேண்டும். *மத்.5:9* ன்படி வாழ்ந்தால் தேவனுடைய பிள்ளைகள் ஆவோம். எப்படியெனில் அன்பு சகல பாவங்களையும் மூடும் என்று வசனம் சொல்கிறது. **நாம் பிறரிடம் குறிப்பாய் தேவ**

பிள்ளைகளாய் மாறிய சபை மக்களாகிய ஏழை, எளிய குடும்பத்தை விசாரித்து அவர்களின் தேவைகளை உங்களால் முடிந்தவரை நிறைவேற்றுங்கள். தேவப்பிள்ளைகளாய் வாழும் விதவைகளை விசாரிக்கவேண்டும். ஏனென்றால் இயேசுவானவர் என் பிதாவின் சித்தத்தின்படி வாழ்கிறவர்களே என் தாயும் என் சகோதரரும் என்று கூறுகிறார். இப்படிப்பட்டவர்களுக்கு முதலில் நாம் உதவி செய்வதை இயேசுவானவர் விரும்புகிறார். *மத்தேயு12:50, மத்தேயு.26:37–40.* மேலும் குடும்பத்தில் எதற்குமே பயனில்லாத பிள்ளைகளாய் பணவருவாய் இல்லாமல் இருந்தாலும், அவர்களிடத்திலும் அன்பு செய்யுங்கள். உங்களுடைய அன்பை சோதிக்கவே, அப்படிப்பட்ட ஒரு நபரை உங்கள் வீடுகளில் பிறக்க வைத்திருப்பார். எனவே அவர்களையும் அன்பு செய்யுங்கள். அவர்களும் நம் சொந்தம் என்பதை நினைத்து அவர்களை விசாரித்து அவர்கள் தேவைகளை உங்களால் முடிந்தவரை அன்புடன் பூர்த்தி செய்தால், தேவனை விசுவாசிக்கிறீர்கள் என்பது உறுதியாகும் *1தீமோத்தேயு.5:8* ன்படி *"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்"* இப்படியாக நம்மால் முடிந்தவரை அனைவரையும் அன்பு செய்து தேவன் சொல்லிய அன்புக் கட்டளைகளுக்கு கீழ்படிவோம்.

## V) *கடன் இல்லாமல் இருக்கவேண்டும்*

நாம் வாழும் நாட்களில் வியாபாரம் மற்றும் குடும்ப பிரச்சினைகள் காரணத்திற்காக கடன்கள் வாங்குகிறோம். இது தவறான நடைமுறையாகும். நாம் கடன் வாங்கக் கூடாது என்று பிதாவே கட்டளையாக *உபாகமம்.28:12ல் "நீ அநேக ஜாதிகளுக்கு கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்"* என்று கூறினார். இக்கட்டளை கடன் வாங்கக் கூடாது என்ற நோக்கத்திற்காகத்தான் அவர் கொடுத்துள்ளார். நாம் கடவுளை அறியாமல் இருந்த காலத்தில் கடன்கள் வாங்கி இருக்கலாம். இரட்சிக்கப்பட்ட பிறகு அவைகளை அடைத்துவிட முயற்சி செய்யவேண்டும். அப்போது தான் நீதிமான்கள் பெயர் பட்டியலில் சேரமுடியும்.

வேத வசனத்தில் *எசேக்.18:6–9* வரை படித்தால் நீதிமான்களாக இருக்க விரும்புபவர்கள் கடன்களை திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்று போடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவும் *லூக்கா.6:34* திரும்பக் கொடுப்பார்கள் என்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்கு பலன் என்ன? திரும்ப தங்களுக்கு கொடுக்கும்படியாக, பாவிகளும் பாவிகளுக்கு கடன் கொடுக்கிறார்களே என்று கூறி உள்ளார். இதன்படி கடன் வாங்குவது பாவம் என்று அறிந்து கொள்கிறோம். இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட விரும்பும் நாம் அவர் வருகை மிக சமீபமாய் இருப்பதால் நம் மூலம் வாங்கிய கடன்களை கட்டாயம் அடைத்திருக்கவேண்டும், அடைக்க தீர்மானம் எடுத்து ஜெபத்துடன்

கடன்களை அடைக்க முழு முயற்சி செய்யுங்கள். தேவன் உங்களுக்கு உதவி செய்வார். இனி கடன் வாங்க மாட்டேன். இக்கட்டளைக்கு கீழ்படிவேன் என்று உறுதியெடுத்துக் கொள்வீர்கள் என்றால் **ஆலோசனை கர்த்தராகிய ஆவியானவர்** உங்களுக்கு ஒரு வழி வாசலை திறப்பார்.

## VI) *நகைகள் அணியக் கூடாது*

ஆபிரகாம் காலத்தில் பிதா பொன், வெள்ளி நகைகளை அணிய அனுமதித்தார். *யாத்.3:22.* ஆனால் மோசே காலத்தில் பொன் கன்றுக்குட்டி செய்து வணங்க ஆரம்பித்ததால் அதாவது தம் மக்களை, (பிதாவை மட்டும் வணங்க முன்வந்த பிள்ளைகளிடம், குறிப்பாய் பேசுகிறார்) பொன், வெள்ளி ஆபரணங்களை கழற்றி போடச் சொல்கிறார். ஆதார வசனம் *யாத்.33:1–6.* அன்று முதல் பொன், வெள்ளியை தேவன் அருவருக்கிறார். எனவே பொன், வெள்ளி போன்ற நகைகள் எதுவும் அணியக் கூடாது என்ற கட்டளைக்கு R.C.கத்தோலிக்க சபையில் ஊழியம் செய்யும் கன்னியாஸ்திரிகள் கூட அணியாமல் இருக்கிறார்கள் அல்லவா? இதன் மூலம் அணிகலன்களை கட்டாயம் தேவன் அருவருக்கிறார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். *உபாகமம்.7:25–26, எசேக்.11:17–20*ல் அதை கட்டளையாகவே கொடுத்து இருக்கிறார். எனவே தேவன் வெறுக்கும் நகைகளை நாம் அணியக்கூடாது. மேலும் தேவன் வெறுக்கும் தீய செயல்களையும் செய்யக் கூடாது. அது என்னவெனில் *நீதிமொழிகள்.6:16–19*ல் காணலாம்.

இவ்வசனங்களில் மேட்டிமையான கண்கள் இருக்கக்கூடாது. பொய் பேசுகிற பிள்ளைகளாகவும், மற்றவர்கள் பாவம் செய்ய ஊக்குவிப்பவர்களாகவும் இருக்கக் கூடாது. சிலர், இரத்தம் சிந்தவேண்டி வரும். அதற்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது. நம் இருதயம் கேடு உள்ளதாயும் பிறருக்கு துர்ஆலோசனைகளை சொல்லக் கூடியதாகவும் இருக்கக் கூடாது. பிறருக்கு எப்போதும் தீங்கு செய்யும்படி துணிகரமாய் நடக்கக்கூடாது. அபத்தமாக பிறருக்கு விரோதமாக பொய்சாட்சி சொல்லக்கூடாது. நம் உடன் பிறந்த சகோதரர்களிடம் நம் சபையில் உள்ள சகோதரர் மத்தியில் பகையை உண்டு பண்ணும் வகையில் நடக்கவே கூடாது. மேலும் ஆண்கள் உடைகளை பெண்களும், பெண்கள் உடைகளை ஆண்களும் உடுத்திக் கொண்டு அலங்கரிக்கக் கூடாது. *உபாகமம்.22:5.* இப்படிப்பட்ட செயல்கள் கட்டாயம் நம் வாழ்வில் இருக்கவே கூடாது. முக்கியமாய் இக்கட்டளைகளின்படி நகைகளை மட்டும் அர்ப்பணம் பண்ணிவிட்டு நம் இருதயம் கேடுள்ளதாய் இருந்தால் தேவன் உங்களையும் அருவருப்பார். இப்படிப்பட்டவர்களும் *வெளி.21:8*ன் படி இரண்டாம் மரணமாகிய அக்கினி கடலே அவர்கள் பங்காகிவிடும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். எப்படியெனில் இயேசுகிறிஸ்து இப்பூமியில் வாழும் போது *லூக்கா.14:33*ல் எவனாகிலும் தனக்கு உண்டானவகைகளை எல்லாம் **வெறுத்து விடாவிட்டால்** அவன் எனக்கு சீஷனாய் இருக்கமாட்டான் என்று சொல்லியிருக்கிறார்.

உண்ணவும், உடுக்கவும் போதும் என்று இருந்து, *எபிரேயர்.12:14*ன்

படி பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரை சந்திப்போம். இரகசிய வருகை நொடிப் பொழுது என்று *1கொரி.15:51*ல் வாசிக்கிறோம். நீங்கள் இரகசிய வருகையில் செல்ல விரும்புகிறீர்களா? நம் காது, கை மூக்கு, கால்களில் உள்ள அணிகலன்களை கழற்றிவிட்டு, அர்ப்பணம் பண்ணுங்கள். அப்போது, *1 தெச.5:21–23* ன்படி உங்கள் மாம்ச சரீரத்தை ஆயத்தமாக்க முடியும். நம் கர்த்தராகிய ஆண்டவர் வரும்போது, உங்கள் இருதயமும் சரீரமும் குற்றமற்றதாய் இருந்து பரிசுத்தமாக்கப்படும்.

சுயமாய் சிந்தித்துப் பாருங்கள். நம் கை, கால் உடலுறுப்புகளில் பிறப்பிலே நமக்கு ஏதாவது சிறிய குறையிருந்தால் கடவுளை நாம் நிந்திருக்கிறோம் அல்லவா? கடவுள் படைத்த நம். சரீரமாகிய உடல் உறுப்புகளில் ஓட்டை போடுவது, அல்லது துளை போடுவது தவறு என்பதை, ஆவிக்குரிய பிள்ளைகளால் உணர்ந்து கொள்ள முடியும். *எபேசி.5:5* ல் பொருள் ஆசை என்பது விக்கிரக ஆராதனையையும் குறிக்கிறது. இவர்கள் பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது என்று எச்சரிக்கிறது. நகைகள் என்பது சிறிதோ, பெரிதோ, எல்லாமே நகை தானே! எனவே நகைகளை கழற்றி விட்டு உங்களையே *2கொரி.13:15* ன்படி பரிசோதித்து பாருங்கள். இந்த உலகத்தில் பிதாவையும் இயேசுவையும் முழு அன்பு செய்ய முடிகிறதா? *மத்.7:21–24* ஐ வாசித்துப் பாருங்கள். ஊழியம் செய்யும் பிள்ளைகளைக் கூட தேவன் நியாயத் தீர்ப்பு நாளில், எப்படி நியாயம் தீர்க்கிறார் என்பது புரியும். விசுவாசப் பிள்ளைகளே! சிலர் நகைகள் அணிந்து கொண்டே ஊழியம் செய்கிறார்கள் என்று அவர்களை முன் உதாரணமாக வைத்து காரணம் காட்டவேண்டாம். நீங்கள் முதலில் நகைகளை அர்ப்பணம் செய்துவிட்டு அவர்களுக்காக ஜெபியுங்கள். தேவனுடைய பார்வைக்கு விலையேறப் பெற்ற அலங்காரம் எது என்பதை 1பேதுரு.3:3–4 ல் காண்போம். *மயிரைப் பின்னி பொன்னாபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது, அதுவே தேவனுடைய பார்வையிலே விலையேறப்பெற்றது".* மேலும் *ஏசாயா.3:18–24* வரை சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளில் எல்லா ஆபரணங்களையும் மற்றும் சில அலங்காரங்களையும் தேவன் வெறுப்பதால் அதை உரித்துப் போடுகிறார். உரித்துப் போடுகிறார் என்றால் அப்படிப்பட்ட அலங்காரம் செய்பவர்களை ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிடுகிறார். எனவே நகைகள் அணியாமலும் தீமையான செயல்களில் ஈடுபடாமலும் இருந்து உங்கள் ஆத்துமாவை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

## VII) ஒய்வு நாளை பரிசுத்தமாய் அனுசரிக்க வேண்டும்

பழைய ஏற்பாட்டில் அநேக புத்தகங்களில் ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்று சொல்லப்பட்டு இருக்கிறது. *ஆதியாகமம்.2:3* ஆம் வசனத்தில் தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து

அதை பரிசுத்தமாக்கினார் என்று எழுதப்பட்டுள்ளது. *யாத்திராகமம். 20:8–11* வரை குறிப்பாய் பிதாவே கொடுக்கப்பட்ட கட்டளையை வாசியுங்கள். இவ் வசனங்களில் *"நீ ஆனாலும், உன் வேலைக்காரியானாலும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது"*. எனவே நாம் அன்று சபைக்கு சென்று ஆராதனையில் கலந்து கொண்டு, அவரின் ஊழிய வேலைகளை செய்தால் தேவன் பிரியப்படுவார். ஓய்வு நாளில் பொழுது போக்கு இடங்களுக்கு செல்வது, திருமண விழாவிற்கு செல்வது, உல்லாச பயணம் செல்வது குடும்ப வேலைகளாகிய துணி துவைத்தல் போன்றவற்றை கூட செய்யாமல் அந்நாளை பரிசுத்தமாய் அனுசரிப்போம். ஏனெனில் *மத்.24:20 ல் "நீங்கள் ஓடிப் போவது மாரிக் காலத்திலாவது, ஓய்வு நாளிலாவது சம்பவிக்காதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள்"* என்று இயேசுவே சொல்லி இருக்கிறார். மேலும் நியாயத் தீர்ப்பு சபையில் இருந்துதான் தொடங்குகிறது என்று கீழ்கண்ட வசனம் சொல்கிறது. சபை கூடுகிற நாள் ஓய்வு நாள் அல்லவா? எனவே ஓய்வு நாளை பரிசுத்தமாய் அனுசரிக்க வேண்டும். வசனத்தைப் பார்ப்போம். *1பேதுரு.4:17 ல் "நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குங் காலமாயிருக்கிறது. முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்"* என்று சொல்லப்பட்டிருக்கிறது. உலக முடிவும் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்துதான் தொடங்குகிறது என்று *எசேக்கியேல்.9:6–8* வரை வாசித்தால் தெரியும். இதற்கு ஆதாரமான வசனங்கள் *ஆமோஸ்.8:6–10* வரை உள்ளது. ஆகவே கவனமாக படித்து ஓய்வு நாளாகிய ஞாயிறு மற்றும் ஆயத்த நாளாகிய சனிக்கிழமை, ஆகிய 2 நாட்களிலும் பரிசுத்தமாய் கடவுளுக்காக வாழ வேண்டும்.

*ஏசாயா.58:13–14* ல் ஒய்வுநாளை எப்படி அனுசரிக்க வேண்டுமென்பதையும் கர்த்தருடைய வாய் இதை சொல்லிற்று என்றும் கூறப்பட்டுள்ளது. படித்து தியானியுங்கள். ஓய்வு நாளில் நமக்கு இஷ்டமானதை (உதாரணமாக நமக்கு பிரியமான அசைவ உணவு கறி, மீன், நண்டு, இறால், முட்டை) போன்றவற்றை கூட சாப்பிடாமல் ஆண்டவருக்காக தவிர்க்கலாம். ஆண்டவருக்காக இவ்வகை உணவு வகைகளை, தவிர்த்துவிட்டு ஆண்டவரின் ஊழியத்தை செய்வோம். இக்கட்டளைக்கு ஞானஸ்நானம் எடுத்த பிள்ளைகள் மட்டும் சாப்பிடாமல் இருக்க முயற்சி செய்யுங்கள். ஏனென்றால் நீங்கள் உங்கள் குடும்பம் முழுவதுமாய் கடைபிடிக்க முடியாது. இக்கட்டளைக்கு நீங்கள் கீழ்படிந்து பாருங்கள். சனி, ஞாயிறு தவிர மீதம் உள்ள மற்ற நாட்களில் நீங்கள் விரும்பும் உணவு வகைகள் அனைத்தையும் சாப்பிட தேவன் அளவில்லாமல் ஆசிர்வதிப்பார். *யாத்திராகமம்.12:16*ல் முதலாம் நாளில் பரிசுத்த சபை கூடுதலும் 7ஆம் நாளிலும் பரிசுத்த சபை கூடுதலும் இருக்கவேண்டும். அவைகளில் ஒரு வேலையும் செய்யப்படலாகாது. அவரவர் சாப்பிடுகிறதற்கு தேவையானது மாத்திரம் உங்களால் செய்யப்படலாம் என்று கூறப்பட்டு உள்ளது. ஏனவே சனி, ஞாயிறு

ஆகிய இரண்டு நாட்களையும் நாம் பரிசுத்தமாய் அனுசரிக்க வேண்டுமென்பதை *எசேக்கியேல்.20:11–20* வரையிலுள்ள வசனங்களில் கட்டளையாக ஓய்வு நாளை பரிசுத்தமாய் கடைபிடிக்கவேண்டும். அப்படி கடைபிடிக்கும் போது அந்தப் பிள்ளை தான் கடவுளுடைய பிள்ளை என்ற ஓர் அடையாளத்தையும் கொடுத்திருக்கிறார். இந்த நாளில் எந்த நாள் சரியான ஓய்வு நாள் என்று ஆராயாமல் எப்படி நாம் அந்நாளில் தேவனை ஆராதிக்கிறோம் என்பது தான் மிக முக்கியம். தேவன் உலகத்தில் நான்காம் நாள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை உருவாக்கினார் *ஆதியாகமம்.1:14–19* ல் சொல்லப்படுகிறது. அந்த நாள் முதல் தான் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அனைத்தும் வேலை செய்ய தொடங்கியிருக்கும். அப்போது ஒரு பகுதி பகலாகவும் ஒரு பகுதி இரவாகவும் தானே தொடங்கப்பட்டிருக்கும். இதனால் நேரங்காலங்கள் கட்டாயம் மாறும். எனவே தான் தேவன் *யாத்திராகமம்.12:16* ல் சொல்லப்பட்டபடி ஓய்வு நாளை இரண்டு நாட்களிலும் அனுசரிக்க சொல்லியிருக்கிறார். எனவே இந்த இரண்டு நாட்களிலும் பரிசுத்தமாய் வாழக் கற்றுக் கொண்டு நமக்கு கொடுக்கப்பட்ட சபையின் நாட்களில் ஓய்வு நாள் ஆராதனையில் பயபக்தியுடன் பங்கு கொள்வோம். குறிப்பாய் சபையில் ஆராதனை தொடங்கும் முன்பே ஆலயத்திற்குள் கட்டாயம் இருக்க முயற்சி செய்யுங்கள். தேவன் தாமே உங்களை ஆசிர்வதிப்பாராக.

## VIII) திருவிருந்தில் கட்டாயம் பங்கு கொள்ளவேண்டும்.

திருவிருந்து ஆராதனையில் பயபக்தியுடன் பங்கு கொள்ளுங்கள். உங்களுடைய சரீரம் கடைசி நாளில் நித்திய ஜீவனுக்கு எழுந்திருக்கவேண்டும். இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ள இயேசுவின் மாமிசமும் இரத்தமும் அவசியம். *'என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்"* என்று யோவான்.6:54 ல் வாசிக்கிறோம். பரலோகம் செல்ல திருவிருந்து ஒரு சிறந்த உணவாகும். எனவே ஒவ்வொரு மாதமும் தவறாமல் திருவிருந்து ஆராதனையில் பங்கு கொள்ளவேண்டும். பெண்கள் மாதவிலக்கு நேரங்களில் கட்டாயம் பங்கு கொள்ளாமல் மற்ற நாளில் பரிசுத்தமாய் பங்கு கொள்ளவேண்டும். பெண்கள் அந்நாட்களில் தீட்டு இல்லாமல் பரிசுத்தமாய் இருக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவன் அந்நாட்களை மாற்றிப்போட்டு கிரியை செய்வார். ஆதார வசனம் *லேவி.15:19, 1கொரிந்தியர்.11:27–31* வரை.

திருவிருந்து ஆராதனையில் பங்கு கொள்ளும் முன்பு உங்களுடைய நினைவு தெரிந்த நாளில் இருந்து ஞானஸ்நானம் பெறும் வரை செய்த அத்தனை பாவங்களையும் நினைவு கூர்ந்து தேவனிடத்தில் அறிக்கையிட்டு மன்னிப்பு பெற்று கொள்ளவேண்டும். தேவனும் நம் பாவங்களை மன்னிப்பார். எப்படியெனில் *"தன் பாவங்களை அறிக்கையிட்டு விட்டு விடுகிறவன் இரக்கம் பெறுவான்"* என்று வசனம் சொல்கிறது. ஆகவே

அந்த பாவங்களை எந்த சூழ்நிலையிலும் திரும்ப செய்யவே கூடாது. ஞானஸ்நானம் எடுத்த பிள்ளைகளாகிய நாம் சில கஷ்டங்களையும் நஷ்டங்களையும் சந்திக்கிறோம். அது எதற்கு தெரியுமா? நாம் ஞானஸ்நானத்திற்கு முன் செய்த பாவத்திற்கு பரிகாரமாக இரட்டத்தனையாக தேவன் நம்மை தண்டிக்கிறார். பிறகு நீதிக்கு சரிக்கட்டுவார். ஆதார வசனம் *எரேமியா.16:18.* இவ் வசனத்தைப் பார்ப்போம். *"முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும், அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன் ....* மேலும் *ஏசாயா.26:21*ஆம் வசனத்தில் *"பூமியில் குடியிருக்கும் மக்களின் அக்கிரமத்தின் நிமித்தம் அவர்களை விசாரிப்பேன்"* என்றும் சொல்லப்பட்டுள்ளது. வேதத்தில் உள்ள இஸ்ரவேலனாகிய யாக்கோபு தன் சகோதரனை ஏமாற்றியதால், அவனும் அவனுடைய மாமன் மூலம் ஏமாற்றம் அடைந்தான். ஏனென்றால் நாம் தெரிந்தோ, தெரியாமலோ, செய்த பாவத்திற்கு பூமியில் தண்டனைகளை, அதாவது தேவன் கொடுக்கும் சோதனைகளை கட்டாயம் அனுபவிக்க வேண்டும். நீதிமான்களை தேவன் சோதித்தறிகிறார் என்று வசனம் சொல்கிறது எனவே சோர்ந்து போகக் கூடாது. அப்போதுதான் நாம் பரலோகம் செல்ல முடியும். பூமியில் நாம் செய்த பாவத்திற்கு மன்னிப்பு கேட்டு பாவத்தை விட்டு விட்டால், அந்த பாவங்களை குறித்து நியாயத் தீர்ப்பு நாட்களில் நம்மிடம் விசாரிக்கவும் மாட்டார். திருவிருந்து நாட்களில் *1கொரி.11:24-34* வரையில் உள்ள வேத வசனங்களை படித்து தியானியுங்கள். மேலும் *அப்போஸ்தலர்.20:7*ல் சொல்லப்பட்டபடி நம் சபைகளிலும் வாரந்தோறும் (அப்பம் பிடுகிற) திருவிருந்து ஆராதனை நடக்க ஜெபியுங்கள். (ஏனென்றால் பெண்கள் பரிசுத்தமாய் திருவிருந்து எடுக்க) நாம் தேவனுடைய சரீரத்தையும் இரத்தத்தையும் வாங்கி உட்கொள்வதற்கு முன்பு நம்மை பரிசுத்தபடுத்திக் கொண்ட பிறகே பயபக்தியுடன் திருவிருந்தில் பங்கு கொள்ளவேண்டும். இப்படியாக திருவிருந்திற்கு முக்கியத்துவம் கொடுத்தீர்கள் என்றால் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வீர்கள்.

## IX) *666 என்ற பயோசிப் முத்திரையை தரித்துக் கொள்ளக்கூடாது.* *வெளி.14:9-11* வரை

(பயோசிப் முத்திரையை நெற்றியிலாவது வலது கையிலாவது பதிந்து கொள்ளவேண்டுமென்ற சட்டம் வரும் என்று வசனம் *வெளி.13:16-18* வரை வாசிக்கிறோம்). ஆனால் தேவன் நம் ஒவ்வொருவரின் நன்மைக்காகவே அதைப் பதித்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்லுகிறார். நம் உடம்பில் சிப் பதித்து விட்டால் நமக்கும் வானில் செயல்படுகின்ற செயற்கைகோளுக்கும் நேரடித் தொடர்பு உண்டாகும். அதன் மூலம் மனிதனுக்கு ஆபத்து வரும். எப்படியெனில் கீழ்கண்ட வசனத்தை பார்ப்போம். *"முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதை பூமியின் மேல் ஊற்றினான், உடனே மிருகத்தின் முத்திரையை தரித்தவர்களும், அதில் சொருபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்கு பொல்லாத கொடிய புண் உண்டாயிற்று"*என்று

தினத்தந்தி 19-12-2011

# கம்ப்யூட்டர் ஜாலம்

# உலகை ஆளப்போகும் செயற்கை நுண்ணறிவு

## 4. ஐ.பி.எம். நிறுவனத்தின் சூப்பர் கம்ப்யூட்டர்

வாட்சன் (Watson) என்பது [illegible] ... (POWER7 PROCESSOR) ... 3.5 GHZ ... (Open Domain question Answering) ... (NLP Natural Language Processor) ... (KRR - Knowledge Representation and Reasoning) ... (ML - Machine learning) ... (Thomas J Watson) ... [illegible]



# தினம் ஒரு தகவல்

11-12-2011

தினத்தந்தி நாளிதழ்

## உளவாளியை உளவுபார்க்கும் உளவாளி

உளவு நிறுவனத்தில் வேலைபார்க்கும் ஊழியர்களை அவர்களுக்கு தெரியாமல் உளவு பார்க்கும் நவீன தொழில் நுட்பம்தான் இப்போது சர்ச்சையை கிளப்பி உள்ளது. அரிசியில் பாதியளவு கொண்ட சின்னதான ஒரு கருவியை உளவு நிறுவன உளவாளிகளின் கையில் உரசிப்போவதுபோல் செலுத்தி விடுவார்கள். அப்புறம் என்ன அந்த ஊழியர் எத்தனை மணிக்கு பாத்ரூம் போகிறார்? எத்தனை மணிக்கு தூங்கப்போகிறார்? யாருடன் பேசுகிறார்? என்ன பேசுகிறார்? என்ற எல்லாவற்றையும் அந்த சின்னக்கருவி கண்காணித்துக்கொண்டே இருக்கும்.

ஆர்.எப்.ஐ.டி. சிப்.

ஒவ்வொரு வினாடியும் பதிவாகும் விவரங்கள் அத்தனையும் உடனுக்குடனே கண்ட்ரோல் ரூமுக்கு போய் விடும். இந்த தொழில் நுட்பத்தை ஆர்.எப்.ஐடி என்கிறார்கள். அதாவது 'ரேடியோ பிரிக்வன்ஸி ஐடி' என்பதாகும். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற சில நாடுகளில் மட்டும் இந்த சிஸ்டம் அமலில் உள்ளது.

என்னதான் கண்காணிப்பு என்றாலும், இது மனித உரிமை மீறல் என்பதால் இதற்கு உலகம் முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பிவிட்டது. அதனாலேயே மற்ற நாடுகளுக்கும் துறைகளுக்கும் பரவாமல் நின்று விட்டது. பறவைக்காய்ச்சல், பன்றிக்காய்ச்சல் போன்றவை கடுமையாக தாக்கும்போது, எந்தப்பகுதியில் இருந்து வரும் மிருகங்களில் பறவைகளில் நோய்கிருமி இருக்கிறது என்பதை கண்டறிய கசாப்பு தொழில்சாலைகள் பயன்படுத்தும் தொழில்நுட்பம் இது.

'முதலில் இந்த ஊசியை தீவிரவாதிக்கு போட வேண்டும்'

தினத்தந்தி நாளிதழ் 04-02-2012

## தினம் ஒரு தகவல்

# மனித மூளை கம்ப்யூட்டர்



என்னதான் கம்ப்யூட்டரை பற்றி ஆஹா ஓஹோ வென்று நாம் புகழ்பாடினாலும் மனித மூளையின் செயல்பாட்டோடு ஒப்பிட்டால் அது ஒன்றுமே இல்லாத பூஜ்யம்தான். மனிதனின் மூளையை போன்று செயல்படக்கூடிய கம்ப்யூட்டரை வடிவமைப்பதே இன்றைய கம்ப்யூட்டர் விஞ்ஞானிகளின் கனவு திட்டம்.

மூளையின் வெளிப்புறப்பகுதியான செரிபெரல் கார்டெக்ஸ் மூலம்தான் உயிரினங்கள் எல்லாவற்றையும் பிரித்து அறிகின்றன. விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்கும் இதுவே அடிப்படை. மூளையின் செரிபெரல் கார்டெக்ஸ் போன்று செயல்படக்கூடிய சூப்பர் கம்ப்யூட்டரை உருவாக்கும் முயற்சியில் ஐ.பி.எம். கம்ப்யூட்டர் நிறுவனம் வெற்றியை நோக்கி சென்று கொண்டு இருக்கிறது.

சாதாரண கம்ப்யூட்டரில் ஒன்று அல்லது இரண்டு பிராசஸர்கள் மட்டுமே இருக்கும். ஆனால் ஐ.பி.எம்.மின் இந்த புதிய கம்ப்யூட்டரில் ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 456 பிராசஸர்கள் உள்ளன. சாதாரண கம்ப்யூட்டரை விட இது ஒரு லட்சம் மடங்கு வேகமாக செயல்படக்கூடியது. 2006-ல் சுண்டெலியின் மூளையை போல் 40 சதவீதம் வேகமாக செயல்படக்கூடிய கம்ப்யூட்டர் வடிவமைக்கப்பட்டது.

மனித மூளையை போல் செயல்படக்கூடிய கம்ப்யூட்டரை கண்டுபிடிப்பதுதான் இறுதி நோக்கம். ஆனாலும் இது வரை கண்டுபிடிக்கப்பட்ட சூப்பர் கம்ப்யூட்டர், அதாவது நாம் உபயோகிக்கும் கம்ப்யூட்டரைவிட ஒரு லட்சம் மடங்கு வேகமாக செயல்படக்கூடிய அந்த சூப்பர் கம்ப்யூட்டரை மனித மூளையோடு ஒப்பிட்டால் வெறும் ஒரு சதவீதம் மட்டுமே செயல்படக்கூடியது. அப்படியென்றால் மனித மூளையை போல் செயல்படக்கூடிய கம்ப்யூட்டரை கண்டுபிடிக்க மனிதன் வெகுதூரம் பயணம் செய்தாக இருக்க வேண்டும்.

“இனி ‘மூளை இருக்கா?’ என்று யாரையும் கேட்டு விடாதீர்கள். அது பெரிய விஷயம்....”!

தினத்தந்தி நாளிதழ் 10-1-2012

உடற்கூறு அடையாளங்களை பதிவு செய்து தயாரிக்கப்படும்

# 'ஆதார்' அடையாள அட்டை தயாரிப்பை எதிர்த்து வழக்கு தாககல்

## மத்திய அரசுக்கு, ஐகோர்ட்டு நோட்டீசு

சென்னை, ஜன.10-

சென்னை ஐகோர்ட்டில் மனித உரிமை பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ராஜூ தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:-

கார்கில் போர் நடந்து முடிந்தபிறகு, உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசு முடிவு செய்தது. இதற்காக தேசிய பல்நோக்கு அடையாள அட்டையை உருவாக்க 2003-ம் ஆண்டு முடிவெடுக்கப்பட்டது.

அடையாள அட்டை தயாரிக்கும் பணிகளை மத்திய திட்டக் கமிஷனிடம் மத்திய அரசு ஒப்படைத்தது. இதற்காக இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையம் என்ற அமைப்பை மத்திய திட்ட கமிஷன் 2009-ம் ஆண்டு தொடங்கியது.

தனித்துவ அடையாள அட்டை ஆணையத்தின் துணைத் தலைவராக, இன்போசிஸ் நிறுவன துணைத்தலைவர் நந்தன் நீல்கனி நியமிக்கப்பட்டார்.

இவர் எந்த அடிப்படையில் துணைத்தலைவர் பதவிக்கு யாரால் நியமிக்கப்பட்டார்? யார் அந்த நியமனத்துக்கு அங்கீகாரம் வழங்கினர்? என்ற விவரங்கள் தெரியவில்லை.

சட்ட அங்கீகாரம் பெறாத இந்த ஆணையம், குடிமக்களின் அங்க அடையாளங்களைக் கொண்ட தகவல்களை மாநில அரசுகள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் பரிமாறிக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்துள்ளது.

இந்த தனிப்பட்ட அடையாளங்களை நந்தன் நீல்கனி எந்த அளவுக்கு பாதுகாப்பாக வைத்திருப்பார் என்பது தெரியவில்லை. வெளிநாட்டினரிடமோ அல்லது வேறு நபர்களிடமோ அந்த விவரங்கள் கிடைத்தால் அது மக்களுக்கு ஆபத்தாகிவிடும்.

உடற்கூறுகளைக் கொண்ட அடையாள அட்டையை தயாரிப்பது, மக்களின் தனிநபர் உரிமையை பாதிக்கும் செயலாகும். எனவே தனித்துவ அடையாள அட்டை ஆணையத்தை தனியாக அமைத்தும், அதற்கு நந்தன் நீல்கனியை துணைத்தலைவராகவும் நியமித்து திட்ட கமிஷன் பிறப்பித்த உத்தரவை சட்டவிரோதம் என்று அறிவிக்க வேண்டும். ஆதார் அட்டைக்காக இதுவரை நாடு முழுவதும் சேகரிக்கப்பட்ட குடிமக்களின் விவரங்களை பாதுகாப்புடன் அழிக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு தலைமை நீதிபதி எம்.ஒய்.இக்பால், நீதிபதி கே.பி.கே.வாசுகி ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த மனுவுக்கு 4 வாரத்துக்குள் பதில் மனு தாக்கல் செய்யும்படி மத்திய அரசுக்கு நோட்டீசு அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

*வெளி. 16:2*ல் போடப்பட்டுள்ளது. எனவே தான் இதையாரும் பதித்துக் கொள்ளவேண்டாம். பதியாமல் எப்படி வாழ முடியும் என்று மோசே காலத்தில் ஜனங்கள் முணு முணுத்ததைப் போல் இருக்கக் கூடாது.

ஞானஸ்நானம் எடுத்த பிள்ளைகளாகிய நாம் இக்கட்டளைக்கு கீழ்படிந்தால் முத்திரை காலத்தில் மிகுந்த உபத்திரவத்தின் மத்தியிலும் ஆட்டுக் குட்டியானவரின் இரத்தம் நம்மை காக்கும். ஆதார வசனம் *வெளி. 7:9–14* இதில் மிகுந்த உபத்திரவம் என்னவென்றால் *லூக்கா.21:12–19* வரை சொல்லப்பட்டபடி *"என் நாமத்தினிமித்தம் உங்களை பிடித்து ஜெப ஆலயங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக் கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும், அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்து துன்பப்படுத்துவார்கள்"* – இந்த வசனத்தின்படி உங்களை சிறையில் அடைப்போம் என்று சொன்னாலும் பயப்படாதீர்கள். நாம் மட்டும் தனியே எதிர்ப்பது எப்படி என்று கவலைப்படவேண்டாம். இந்த வசனத்தில் **உங்களை** என்று சொல்லப்பட்டுவது அநேகரை குறிக்கிறது. உங்களோடு கூட தேவாதி தேவனும் இருப்பார். எனவே முத்திரையை தரித்துக் கொள்ளாமல் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள். முத்திரையை போட்டுக் கொள்ளமாட்டோம் என்று உலகத்தில் அநேகர் பிடிவாதமாய் இருப்பார்கள் எனவே கவலைப்படவேண்டாம்.

முத்திரை காலம் வருவதற்கு இன்னும் அதிக வருடங்கள் உள்ளது என்று நினைக்கவேண்டாம், கம்ப்யூட்டர் (கணினி) மூலமாக பயோசிப் செயல்பட்டு சீக்கிரத்தில் உலகத்தை ஆளப் போகிறது. இப்பொழுது மனிதனோடு போட்டியிடக் கூடிய அளவிலான கணினிகளும் ரோபோக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மனிதனை தன்

தினதந்தி அமெரிக்க பத்திரிகை கணிப்பு 19/8 உலகம்

உலகின் முக்கிய 10 தலைவர்கள் பட்டியலில் மன்மோகன்சிங்குக்கு முதல் இடம்

நன்றி
தினத்தந்தி
19–8–2010

**வெளி. 17:12 ல் நீ கண்ட 10 கொம்புகளும் 10 இராஜாக்களாம். இவர்கள் இன்னும் இராஜ்யம் பெறவில்லை. இவர்கள் மிருகத்துடனே கூட ஒரு மணி நேரமளவும் இராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.**

கண்காணிப்பில் வைக்கக்கூடிய சிப்புகளும் (R.E.I.T. Chip) கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. இந்த சிப்புகள் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் உளவுத் துறையில் பயன்பாட்டில் உள்ளன. எது வந்தாலும், எவ்வகை நுண்ணிய கருவிகளையோ, புதிய கணினிகளோ கண்டுபிடித்தாலும், முத்திரை காலத்தில் கட்டாயம் அநேகர் பயோசிப் என்ற முத்திரையை எதிர்ப்பார்கள் எப்படியென்றால் இப்போது நமக்கு வரப்போகிற "ஆதார்" அடையாள அட்டை தயாரிப்பை எதிர்த்தே வழக்கு பதிவு செய்துள்ளார்கள். அதற்குண்டான ஆதாரம் 10–02–2012 தினத்தந்தியின் மூலம் வெளிவந்துள்ளதை இணைத்துள்ளேன். ஆதார் அடையாள அட்டைக்கே எதிர்ப்பு என்றால் முத்திரை மனிதனின் உடலில் பதிவதற்கு கட்டாயம் ஒரு பகுதி மக்கள் தடை செய்வார்கள் என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்ளுங்கள். அத்துடன் நம் இந்திய நாட்டிற்கும் மற்ற ஏனைய நாடுகளுக்கும் *வெளி.17:12* ல் *"நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம். இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை"*.... என்ற வசனத்தில் சொல்லியபடி 10 அதிகாரிகள் ஒன்று சேர்ந்து முத்திரை போட வேண்டும் என்ற சட்டத்தை இந்த உலகத்திற்கு கொண்டு வருவார்கள் என்றபடி உலகின் முக்கிய 10 தலைவர்கள் பட்டியலை அமெரிக்கப் பத்திரிக்கை வெளியிட்டுள்ளது. இச்செய்தியின் மூலம் வசனத்தில் சொல்லப்பட்டபடி, முத்திரை காலத்தை ஆளுகை செய்ய 10 தலைவர்கள் உருவாகிவிட்டார்கள். முத்திரை பதியும் காலம் அமலுக்கு வர ஆயத்தமாகி கொண்டிருக்கிறது. இதன் ஆதாரமும் இணைத்துள்ளேன். எனவே முத்திரையை தரித்துக் கொள்ளவேண்டாம்.

முத்திரை காலத்தில் வரும் முக்கிய உபத்திரவங்கள் குறித்து 3–ஆம் பகுதியில் எழுதியுள்ளேன். எது வந்தாலும் கவலைப்படவேண்டாம். ஏற்கனவே சில கட்டளைகளை நாம் கடைபிடித்து வாழ்ந்து வருவதால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பெயர் லிஸ்டில் இருப்போம். எனவே நம் நிமித்தம் உபத்திரவத்தின் நாட்களை குறைப்பார். *மத்தேயு.24:21–22* ல் உள்ள வசனத்தின்படி நம் ஜெபத்திற்கு, முத்திரை காலத்தில் சமாதானத்தின் தேவன் பதில் கொடுப்பார். எனவே பொறுமையோடு உங்கள் ஆத்துமாவை முத்திரை தரித்து கொள்ளாமல் காத்துக் கொள்ளுங்கள்.

## X) *பரிசுத்தமாக வாழவேண்டும்*

தேவப்பிள்ளைகளே! கடைசி நாட்களில் வாழும் நாம் கட்டளைகளை கடைப்பிடித்து வாழ்வதோடு, தேவன் விரும்பும் பரிசுத்தத்தோடும் வாழவேண்டும். *2 பேதுரு.3:10–11* ஐ படித்துப் பாருங்கள். *"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மட மட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவையெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால், நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்"*, என்று எழுதப்பட்டுள்ளது. பரிசுத்த நடத்தை என்ன என்பதை *1தெசலோனிக்கேயர்.5:21–23* வரை படித்து தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக 23ஆம் வசனத்தில் *"சமாதானத்தின்*

*தேவன் உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்மா சரீரம், முழுவதும் இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காக்கப்படுவதாக"* என்று சொல்லப்படுகிறது. எனவே மாமிச சரீரமாகிய மூன்று பிரிவிலும் **அவர் வருகையின் போது பரிசுத்தமாய் காத்துக் கொள்ளவேண்டும்.**

கடவுளை எப்போதும் உலக வேலைகளின் மத்தியிலும் போற்றித் துதித்து, ஸ்தோத்திரம் செய்து கொண்டிருக்கும் போது ஆவி, ஆத்துமா பரிசுத்தமாய் இருக்கும். இதை *1தெச.5:16–18* வரை படித்து பார்த்தால் தெளிவாக புரியும். சரீரத்தில் பரிசுத்தம் என்பது ஞானஸ்நானம் எடுத்து சில கட்டளைகளை கடைப்பிடித்துக் கொண்டிருக்கிற தேவ பிள்ளைகளே, நீங்கள் கணவன், மனைவியாக இருந்தாலும் இரவு நேரத்தில் மகிழச்சியாக இருப்பதை தவிர்த்துவிட்டு பரிசுத்தமாய் உறங்க முயற்சி செய்யுங்கள், ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக மிக சமீபமாய் இருக்கிறது. எனவே அதிகாலை நேரத்தில் பரிசுத்தமாய் ஜெபியுங்கள். *"அதிகாலையில் என்னைத் தேடுகிறவன் என்னை கண்டடைவான்"* என்று வசனம் சொல்கிறது. பிறகு தேவ பிள்ளைகளே, உங்கள் மகிழ்ச்சியை உங்கள் குடும்ப சூழ்நிலை, அலுவலக வேலை இவற்றிற்கு இடையில் கிடைக்கும் பகல் நேரத்தில் கணவன், மனைவியாக சமாதானமுடன் பேசி மகிழ்ச்சியாக இருங்கள். அந்நேர மகிழ்ச்சிக்கு பிறகு, வீட்டில் உள்ள எந்த பொருளையும் தொடாமல் உடனே தலையோடு தண்ணீர் ஊற்றி, அந்த துணிமணிகளை துவைத்துவிடுங்கள். நீங்கள் அந்நேரங்களில் கட்டில், தலையணை, மெத்தை ஆகியவற்றை கூட தவிர்த்துவிட்டு தரையாக மட்டும் இருந்தால் நல்லது. ஏனென்றால் அந்த இடத்தையும் சுத்தப்படுத்திவிடுங்கள். அந்த சூழ்நிலையிலே பல மணி நேரம் உறங்காமல் கணவன், மனைவியாய் வாழ்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாய் இருப்பது நல்லது. எதற்கெனில் கடைசி நாட்களில் மாமிசமானயாவர் மீதும் அவர் ஆவியை ஊற்றுவேன் என்று சொல்லியிருக்கிறார். இப்படியாக நாம் பரிசுத்தமாக இருந்தால் அவருடைய ஆவியை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இவ்வகை பரிசுத்தம் எதற்கெனில் இரகசிய வருகைக்கு காத்திருக்கும் நாம் அவர் வருகை நேரத்தில் ஒரு வேளை நாம் வீட்டிற்குள் உறங்கிக் கொண்டு இருந்தாலும் தூதர்கள் வானத்திலிருந்து இறங்கி நம் வீட்டிற்குள்ளே வந்து நம்மை அழைத்துச் செல்வார்கள். அப்படி தூதர்கள் வரவிருப்பதால் நாமும், நம் வீடும், வீட்டிலுள்ள பொருட்களும், எந்நேரமும் சுத்தமாய் இருக்கவேண்டும்.

கடவுள் இணைத்த கணவன், மனைவியை மனிதன் பிரிக்கக்கூடாது என்றும், ஆணும், பெண்ணும் மகிழ்ச்சியாய் இருந்து பலுகிப் பெருக சொன்ன கடவுள் காலத்திற்கு ஏற்றபடியும் நம்மை பரிசுத்தமாய் வாழ சொல்லி எச்சரிக்கை கொடுத்து இருக்கிறார். இதை கீழ்கண்ட வசனங்களில் பார்ப்போம். இப்படியாக மாமிச சரிரத்தில் பரிசுத்தத்தை காக்க முடியும். முடியாத சூழ்நிலையில் உள்ள பிள்ளைகள் இக்குறிப்பிட்ட விண்ணப்பத்தை பிதாவிடத்தில் கருத்தாய் சொல்லி ஜெபியுங்கள். கணவன், மனைவியாக இருக்கும் ஒருவர் இரட்சிக்கப்பட்டு மற்றவர்

இரட்சிக்கப்படவில்லை என்றால், இரட்சிக்கப்பட்ட நீங்கள் அமைதலாய் விட்டுகொடுத்து உங்கள் வாழ்க்கையை நடத்தும் போது இப்படிப்பட்ட பரிசுத்தத்தை இரவு நேரங்களில் கடைபிடிக்க விரும்புகிறேன் என்று தொடர்ந்து அதிகமாக ஜெபிக்கும் போது தேவன் உங்களுக்கு உதவுவார். *1கொரி.7:29–31 "மேலும், சகோதரரே நான் சொல்லுகிறதென்னவெனில் இனி வரும் காலம் குறுகினதானபடியால் மனைவிகளுள்ளவர்கள், மனைவிகள் இல்லாதவர்கள் போலவும் கொள்ளுகிறவர்கள், கொள்ளாதவர்கள் போலவும் இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தக்க விதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்கவேண்டும். இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறது"* என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

குறிப்பாக மோசே காலத்தில் பிதா தன் ஜனங்களை சந்தித்து கட்டளைகளை கொடுக்க வரும் போது எப்படி பரிசுத்தமாய் இருக்கச் சொல்கிறார் என்பதை *யாத்.19:10,11, 14,15* ல் உள்ள வசனங்களில் காணலாம். இந்த வசனத்தில் கர்த்தர் மோசேயை நோக்கி, நீ ஜனங்கள் இடத்தில் போய் இன்றைக்கும் நாளைக்கும் அவர்களை பரிசுத்தப்படுத்து, தன் வஸ்திரங்களை தோய்த்து, தன் மனைவியிடத்திலும் சேர வேண்டாமென்று சொல்கிறார். வஸ்திரங்களை தோய்ப்பது என்பது, பாவங்களை நீக்கி சுத்தரிப்பதாகும். *வெளி.16:15* லும் இதோ ! *"திருடனைப் போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடி விழித்துக் கொண்டு, தன் வஸ்திரங்களை காத்துக் கொள்கிறவன் பாக்கியவான்"* என்று வேதம் சொல்கிறது.

இந்த வசனத்தில் **நிர்வாணமாய் நடவாதபடி** என்று குறிப்பிட்டுள்ள வார்த்தை கட்டளைகளின்படி நடக்காத ஒரு மனிதனைக் குறிக்கிறது. எப்படியெனில் *ஆதியாகமம்.3:10–11* ஐ படித்துப் பார்த்தால் ஆதாம், ஏவாள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் போய் கனியைப் பறித்து சாப்பிட்டு, நிர்வாணியாய் ஆனார்கள் என்று பார்க்கிறோம். அதன் மூலம் இரட்சிப்பின் வஸ்திரத்தை இழந்து போனார்கள். அதைப்போல் நாமும் தேவனுடைய கட்டளைக்கு கீழ்படியவில்லை என்றால் பரிசுத்தமாய் வாழவும் முடியாது. இரட்சிப்பின் வஸ்திரத்தை காக்கவும் முடியாது. *1தெச.5:6–8* வரையிலுள்ள வசனத்தை பார்ப்போம். *"ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாய் இருக்கக்கடவோம். தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள். வெறிகொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்வார்கள். பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவையும் தரித்துகொண்டிருக்கக்கடவோம்."* கடவுளுக்கு பயந்து கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடக்கும்போது பரிசுத்த ஆவியானவரே, நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை பரிசுத்தப்படுத்துவார். *எபிரேயர்.12:14* ல் சொல்லியபடி *"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத்*

*தரிசிப்பதில்லையே"* என்று கூறப்பட்டுள்ளது. எனவே கடைசி காலத்தில் வாழும் நமக்கு பரிசுத்தம் என்பது மிக மிக முக்கியமானது.

## XI) *தற்கொலை மரணம் கூடாது*

பிதாவானவர் தான் படைக்கப்பட்ட பிள்ளைகள் என்றென்றுமே உயிருடன் வாழவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் மனிதனைப் படைத்தார். ஆனால் அந்த மனிதன் பாவம் செய்ததால் அவனுடைய ஆத்துமா மரித்தது. அந்த ஆத்துமா மீண்டும் நித்திய வாழ்வு பெருவதற்காகவே, தான் படைத்த தோட்டத்தை விட்டு அனுப்பிவிட்டார். அவன் வழியாக வந்த சந்ததியாகிய நமக்கு அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவின் மூலமாக பாவங்களினின்று விடுதலை பெறச் செய்து நித்திய ஜீவனை கொடுக்கவும் வழி வகுத்தார்.

எனவே ஒரு மனிதனுக்கு எந்த விதத்தில் சோதனை வந்தாலும், உடன் பிறந்தவர்கள், கணவன், மனைவி பிரச்சினைகள் கடன் பிரச்சனைகள் வந்தாலும் தான் வாழ்கின்ற வாழ்க்கையை வெறுத்து தற்கொலை செய்து கொள்ளவேகூடாது. சிலருக்கு கஷ்டங்கள் மூலமாக கடவுளை அறிந்து கொள்ள வாய்ப்பு கொடுப்பார். அதை அறியாமல் சாவை தேடிக் கொள்வது சரியான முடிவல்ல. எனவே ஒரு மனிதன் தானாக மரிப்பதை தேவன் விரும்பவில்லை. *எசேக். 18:32ல் "மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள், சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை"* என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். எனவே நாம் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது. தேவன் ஒரு மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஆயுசு நாட்கள் வரை வாழாமல் தற்கொலை செய்து கொண்டால் நித்திய நித்தியமாக அக்கினிக் கடலில் தள்ளப்படுவான். ஆகவே தற்கொலை மரணம் பெரிய பாவம் என்பதை உணர்ந்து **பூமியில் வாழும் எந்த மக்களும் எந்த சூழ்நிலையிலும் தற்கொலை செய்யாமல் வாழ்ந்து காட்டவேண்டும்.** சரி இந்த கட்டளைக்கு கீழ்படிந்த தேவ பிள்ளைகளே ! நாம் யார் ? இஸ்ரவேல் பிள்ளைகளாகிய தேவஜனம் அல்லவா ? அவர் உங்களுக்கென்று கொடுக்கப்பட்ட **தேவனுடைய கட்டளைக்கு கீழ்படியாமல் பூமியில் நீங்கள் வாழ்ந்தால் உங்களையே இரண்டாம் மரணத்துக்கு தெரிந்தே ஒப்புக் கொடுக்கிறீர்கள். இதுவும் ஒரு தானாக மரிக்கும் தற்கொலை மரணத்துக்கு சமமாகும்** என்று ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தினார். தயவு செய்து சிந்தியுங்கள்.

இரண்டாம் மரணத்துக்கு நீங்கள் தப்புவிக்க வேண்டுமென்றால் கட்டாயம் தேவகட்டளைகள் அனைத்திற்கும் கீழ்படிந்து நடக்கவேண்டும். கீழ்கண்ட வசனத்தில் உள்ளபடி ஒரு நபராக கட்டாயம் நீங்கள் இருக்கவே கூடாது. **ஏனென்றால் இவ்வசனங்களில் சொல்லப்பட்ட ஒரு நபராக நீங்கள் இருந்தால் பரலோக இராஜ்யத்தை நிச்சயமாக சுதந்தரிக்க முடியாது.** *1கொரிந்தியர் 6:9-10, எபேசியர்.5:5, வெளி 21:8, வெளி 21:27ல்* உள்ள பிள்ளைகளாய் இருப்பீர்களானால் சீக்கிரம் மனம் மாறுங்கள். சரி வசனத்தை பார்ப்போம் *"விபச்சாரக்காரனாவது,*

*அசுத்தனாவது, விக்கிர ஆராதனைக்காரனாகிய, பொருளாசைக்காரனாவது, தேவனுடைய இராஜ்யத்திலே சுதந்திரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே''* என்று *எபேசியர்.5:5*ல் எழுதப்பட்டுள்ளது. *வெளி.21:8*ல் *"பயப்படுகிறவர்களும் அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிர ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும், இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்''* என்று கூறப்பட்டுள்ளது *வெளி.21:27*ஆம் வசனத்தில் *"தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை''* என்று காண்கிறோம். *1கொரிந்தியர்.6:9–10*ஐ வேதத்தில் படித்து தெரிந்து கொள்ளுங்கள். இந்த வசனங்களில் சொல்லப்பட்ட ஒரு நபராக ஒரு வேளை வாழ்ந்து கொண்டிருப்பீர்களானால் இவ்வழியை உடனே விட்டுவிட்டு தயவு செய்து தேவன் பிரியப்படுகிற வழியில் உங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளுங்கள். இவ்வசனங்களில் உள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் உங்களுக்கே புரியும்.

இவ்வசனத்தில் தீட்டுள்ளது என்பது, நேரம் பார்ப்பது (நல்ல நேரம், கெட்டநேரம்) சகுனம் பார்ப்பது, திருஷ்டி கழிப்பது, குறி சொல்வது, குறி கேட்பது, அஞ்சனம் பார்ப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகும். *லேவி.19:31*ல் இதைப் படித்துக் கொள்ளுங்கள். அருவருப்பானவைகள் பற்றி நகை அணியக் கூடாது என்ற பகுதியில் காணலாம். **அருவருப்பானதை மட்டும் இரண்டு வசனங்களிலும் போடப்பட்டுள்ளதை பார்த்து** அது எதைக் குறிக்கிறது என்பதை அறிந்து அருவருப்பானவர் லிஸ்டிலிருந்து விலகி விடுங்கள். ஆகவே ஆண்டவர் கரத்தில் உங்கள் ஜீவனை (உயிரை) ஒப்புக்கொடுத்து அவர் உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஆயுசு நாட்களின்படியும் அவருடைய கட்டளையின் படியும் வாழ்ந்து நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளுங்கள். இந்த பூமியில் வாழும் நமக்கு இரண்டு வழிமுறை நம்முன் வைக்கப்பட்டிருக்கிறது. *எரேமியா.21:8 உபாகமம்.30:15 "இதோ, ஜீவனையும், நன்மையையும் மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்''* என்ற வசனத்தின்படி **நாம் ஜீவ வழியை தெரிந்துக் கொண்டு** நன்மையானதை செய்து தேவனுடைய பிள்ளையாய் வாழ்ந்து **நித்திய ஜீவனைப்** பெற்றுக் கொள்ளுங்கள்.

## XII) *இறுதிவரை ஜெப வாழ்வு வாழவேண்டும்*

இறுதிநாளில் வாழும் நாம் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இயேசுநாதர் இவ்வுலகில் வாழும் போது பிதாவை நோக்கி எப்போதும் ஜெபித்துக் கொண்டிருந்தார். *லூக்கா:5–16, லூக்.6:12*ல் ஜெபம் என்பது பரலோகத்தில் உள்ள கடவுளோடு உறவாடுவதே ஆகும். இயேசு கிறிஸ்துவிடம் சீடர்கள் ஜெபிக்க கற்றுக் கொடுங்கள் என்று கேட்டபோது அவர் *மத்தேயு.6:9–13* ல் உள்ள வசனத்தின்படி சொல்லிக் கொடுத்தார். வசனங்களை படியுங்கள். அதைப் போலவே நாமும் ஜெபிக்கும் போது முதலில் பரமபிதாவை

மகிமைப்படுத்தவேண்டும். அவர் சிருஷ்டித்து இந்தநாள் வரை காப்பாற்றி வருகிற ஒவ்வொரு செயல்களுக்காகவும் பிதாவை போற்றி துதித்து மகிமைப்படுத்தவேண்டும்.

பிறகு தன் தேவைகளை, அவர் மகன் இயேசு கிறிஸ்து மூலம் நிறைவேற்றித் தரும்படி ஜெபிக்கவேண்டும். இப்படியாகத்தான் இயேசுவுடன் வாழ்ந்த சீடர்களும் வானத்தையும், பூமியையும் படைத்த தேவனையே நோக்கி ஜெபித்தார்கள். அவர்கள் இருந்த இடம் பரிசுத்த ஆவியால் நிறைந்ததால் அந்த இடமும் அசைந்தது. நாமும் ஆவியில் நிறைந்து ஜெபிக்கவேண்டும். இயேசு சொல்லியபடியே சீடர்களும் ஜெபித்தார்கள். *அப்போஸ்தலர்.4:24–31* வரை இதனைக் காணலாம். எதற்காக ஜெபித்தார்கள் என்பதை *அப்போஸ்தலர்.4*ஆம் அதிகாரம் *1–31* வரை படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். நாம் எதற்காக ஜெபிக்க வேண்டுமென்றால் சோதனைக்கு உட்படாதபடி ஜெபிக்கவேண்டும் *மத்.26:41* ல் இதைப் படிக்கலாம். வருகை காலத்தை நாம் அறியாமல் இருக்கிறபடியினால், எச்சரிக்கையாய் இருந்து, விழிந்திருந்து ஜெபிக்கச் சொல்லியிருக்கிறார். ஆதார வசனம் *மாற்கு.13:33.* மேலும் நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுடைய பெயர்ப் பட்டியலில் இருக்க விரும்பினால் இரவும் பகலும் உலக வேலைகளின் மத்தியில் நம் இருதயத்தில் தேவனை நோக்கி ஜெபித்தால், நம்முடைய விண்ணப்பத்தை கேட்பார் என்று *லூக்கா.18:7*ல் இயேசுவே கூறியிருக்கிறார்.

**ஜெபிக்க வேண்டிய முக்கிய ஜெபக் குறிப்புகள்**

1) உலகத்தைக் குறித்து பிதாவின் சித்தம் நிறைவேற ....

2) ஊழியக்காரர்கள் அனைவரும் பிதாவின் சித்தம் அறிந்து ஊழியம் செய்ய ....

3) தேசத்தை ஆள்பவர்களுக்காக ....

4) எருசலேமின் சமாதானத்துக்காக .....

5) *மத்.24:20* ல் *"நீங்கள் ஓடிப் போவது, மாரிக்காலத்திலாவது ஓய்வு நாளிலாவது சம்பவியாதபடி இயேசு வேண்டிக் கொள்ளச் சொல்லி இருக்கிறார்."*

6) உபத்திரவத்தின் நாட்கள் குறைக்கப்பட ஜெபிக்கவேண்டும். *மத்.24:22.* (குறிப்பாக 666 முத்திரை காலத்தில் ஏற்படும் உபத்திரவங்கள்

குறைக்கப்பட ....)

7) விசுவாசிகள் அனைவரும் இயேசுவின் அன்பில் வளருவதற்காக ஜெபிக்கவேண்டும்.

8) ஞானஸ்நானம் எடுத்து பின்வாங்கிய பிள்ளைகள் மனம் திருந்தி விசுவாச வாழ்வில் நிலைத்து நிற்க ...

9) உலக சமாதானத்துக்காக ...

10) நமக்காகவும் நம் குடும்பத்துக்காகவும், ஜெபிக்கவேண்டும்.

ஜெபிக்கும் போது தனிமையில் அமைதலாகவும், ஆவியானவர் துணையுடனும் ஜெபியுங்கள்.

*"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாய் இருக்கிறபடியால், தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருந்து, ஜெபம் பண்ணுகிறதற்கு ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருக்கச் சொல்கிறார்."* ஆதார வசனம் *1பேதுரு.4:7.* எனவே நாம் செய்கிற ஊழியக்காரியமோ, குடும்ப காரியங்கமோ எதுவாய் இருந்தாலும் **இன்னும் கொஞ்ச காலத்திற்கு தான் இப்பூமி இருக்கும் என்பதை நினைவில் கொண்டு யோசித்து செயல்படவேண்டும்.** இதற்காகத்தான் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள் என்று சொல்லுகிறார். தேவனே நமக்காக எல்லாவற்றையும் செய்தாலும் அவர் வருகைக்குரிய கால சூழ்நிலைகளை நாம் தான் அறிய வேண்டுமல்லவா? **நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயும், ஜெபம் செய்கிற பிள்ளைகளாய் இல்லாவிட்டால் பரலோகத்தை சுதந்தரிக்க முடியாது.**

இப்புத்தகத்தின் முதல் பகுதியாகிய கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகளின் முதல் பகுதி முடிவடைந்து விட்டது. இப்பகுதியை அடிக்கடி படித்து தேவ ஆவியானவர் துணையுடன் இக்கட்டளைகளை கடைபிடித்து, உங்கள் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வந்தீர்கள் என்றால் *1யோவான்.5:16–17*ன்படி கட்டாயம் இரண்டாம் மரணத்திற்கு தப்புவித்து நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வீர்கள். மாறாக இப்படியெல்லாம் நம் தேவனும் இயேசுவானவரும் நம்மீது கட்டளைகளை திணிக்கவில்லை, நாம் அவர் நாமத்தை தொழுதுகொண்டு பலருக்கு சுவிஷேத்தை சொல்லி நல்லபாதையில் அநேகரை வழி நடத்தினால் போதும். கட்டாயம் நம்மை நரகத்திற்கோ, தீங்கான பாதையிலோ தள்ளமாட்டார் என்று கூறும் இஸ்ரவேல் பிள்ளைகளாகிய (தேவ பிள்ளைகளே) *ஆமோஸ்.9:9–10* ல் சொல்லப்பட்ட வசனத்தை பாருங்கள். *"இதோ ஜல்லடையினால் சலித்தரிக்கிறது போல் இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கு படிக்கும் நான் கட்டளையிடுவேன், ஆனாலும் ஒரு கோதுமை மணியும் தரையிலே விழுவதில்லை". தீங்கு எங்களை அணுகுவதுமில்லை, எங்களுக்கு நேரிடுவதுமில்லையென்று என் ஜனத்தில் சொல்லுகிறபாவிகளெல்லாரும் பட்டயத்தினால் சாவார்கள்"* என்று சொல்கிறார். இவ்வசனத்தில் பாவிகள் எல்லோரும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. "பாவம் செய்கிறவன் பாவி ஆவான். அப்படியென்றால் நமக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளை மீறுவதே பாவம் ஆகும். *1யோவான்.3:4ல் "நியாயப்*

*பிரமாணத்தை மீறுகிறதே பாவம்".* இதற்கு இணையான வசனம் இதை புதிய ஏற்பாட்டில் *லூக்கா.3:17ல்* சொல்வதை பாருங்கள். *"தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார், பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்"* என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இவ்வசனங்களில் சொல்லப்பட்டபடி கோதுமை மணியாக இருப்போமானால் பரலோக இராஜ்யத்தை சுதந்தரிப்போம்.

## 7) தனிநபர் ஒருவர் பரலோகத்திற்கு போக விரும்பினால் கட்டாயம் கடைபிடிக்கவேண்டிய கட்டளையின் சுருக்கம்

குறிப்பு – புத்தகம் முழுவதும் படித்த பிறகு கீழே உள்ள கட்டளைகளின்படி வாழ முயற்சி செய்யுங்கள்.

1) விக்கிரக ஆராதனை கட்டாயம் செய்யக் கூடாது. யாருடைய அன்புக்கும், எந்த பொருளுக்கும் முதலிடம் கொடுக்க கூடாது (நம் தேவனுக்கு தான் முதலிடம் கொடுக்கவேண்டும்)

2) கட்டாயம் முழுக்கு ஞானஸ்நானம் விவரம் தெரிந்த பிறகு எடுக்க வேண்டும். எடுத்த நாளில் இருந்து கட்டாயம் 1 மணி நேரம் நாள்தோறும் தனி ஜெபம் செய்ய வேண்டும். அப்போது தான் ஆவியில் பிறக்க முடியும்.

3) ஓய்வு நாள் ஆராதனையில் கட்டாயம் பங்கு கொள்ளவேண்டும். சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களிலுமே மீன், கறி போன்ற அசைவ உணவுகளை தவிர்க்க வேண்டும். உங்கள் வியாபார ஸ்தலங்களை அந்நாளில் கட்டாயம் மூட வேண்டும்.

4) எல்லோரிடமும் சமாதானமாகவும், அன்புள்ளவர்களாகவும், கடவுள்மேல் முழு விசுவாசத்துடனும் கட்டாயம் வாழ வேண்டும்.

5) பத்து கட்டளைகளின்படி கட்டாயம் வாழ வேண்டும் *(யாத்திராகமம் 20:1–17)*

6) திக்கற்ற பிள்ளைகள், விதவைகளுக்கு உதவி செய்து ஆண்டவருடைய சுவிசேஷம் அறிவிக்கிற ஊழியத்தை கட்டாயம் செய்யவேண்டும்.

7) இவ்வுலகில் எதற்காகவும் பயப்படக் கூடாது. குறிப்பாய் கேன்சர் போன்ற வியாதியே வந்தாலும் செல்வம் முழுவதும் அழிந்தாலும் பயப்படக்கூடாது.

8) தற்கொலை மரணம் செய்து கொள்ளக் கூடாது. (தூக்கு போட்டுக் கொள்வது, விஷ மருந்து குடிப்பது) இது போன்ற எந்த விதத்திலும் உங்கள் உயிரை அழிக்கக் கூடாது.

9) நகைகள் – வெள்ளி, பொன் போன்ற எந்த பொருளையும் அணியக்கூடாது. (உண்ணவும் உடுக்கவும் என்று இருத்தலே போதுமானது)

10) கடன் இல்லாமல் கட்டாயம் வாழ வேண்டும்.

11) திருவிருந்து ஆராதனையில் கட்டாயம் பரிசுத்தமாய் பங்கு கொள்ளவேண்டும். (மாமிசத்திற்குரிய சரீரத்திலும், ஆவிக்குரிய சரீரத்திலும் பரிசுத்தமாய் இருக்கவேண்டும்.)

12) "666" அதாவது "பயோசிப்" என்ற முத்திரையை வலது கையிலோ அல்லது நெற்றியிலோ போடக் கூடாது.

இந்த பன்னிரண்டு கட்டளைகளும் *1இராஜாக்கள். 18:31ல்* சொல்லப்பட்ட *யாக்கோப்புடைய* பிள்ளைகள் 12 பேரின் கோத்திரம் போல் அமைந்துள்ளதை நினைத்து தேவனுக்கு கோடி நன்றி கூறினேன். இக்கட்டளைகள் ஒவ்வொன்றிலும் தேவன் இரண்டுவிதமாக கண்காணிக்கிறார். 1) மனிதர்கள் பார்க்கும் பொழுதே இவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அறிந்து கொள்வார்கள். 2) ஆனால், தேவன் இருதயத்தின்- நினைவுகளையும் கண்காணிக்கிறார். எனவே தான் இக்கட்டளைகளை ஆவிக்குரிய சரீரத்திற்கும், மாம்சத்திற்குரிய சரீரத்திற்கும் ஏற்றப்படி தேவன் ஒரு இணைப்பை வைத்திருக்கிறார் என்பதை மறவாமல் இக்கட்டளையின்படி வாழுங்கள்.

இதுவே கட்டளைகளின் சுருக்கமாகும். இப்புத்தகத்தை கையில் வாங்கும் ஒவ்வொருவரும் இக்கட்டளைக்கு கீழ்படிந்து வாழவேண்டுமென்று உங்களுக்காக பிதாவிடத்தில் நானும் ஜெபித்துக் கொள்கிறேன். இப்புத்தகத்தின் முதல் பகுதி முடிவடைகிறது. இத்துடன் முதல் பகுதியை முடித்துக் கொடுத்த பரிசுத்த ஆவியானவருக்கு கோடான கோடி நன்றி.

சந்திரன் சுருங்குவதாக விஞ்ஞானிகள் தகவல்

வாஷிங்டன், ஆக.21- சந்திரன் மெல்ல மெல்ல சுருங்கி வருவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சந்திரனில் எடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான புகைப்படங்களை ஆய்வு செய்து அவர்கள் இம்முடிவுக்கு வந்துள்ளனர். அந்த படங்களின் அடிப்படையில் பார்க்கும்போது சந்திரன் குளிர்ச்சி அடையும்போதெல்லாம், அதன் மேற்பரப்பில் பல மைல் நீளத்துக்கு சுருக்கம் ஏற்பட்டு, அது சுருங்கி வருவதாக விஞ்ஞானிகள் கூறினர்.

இதன்மூலம், சந்திரனின் சுற்றளவு 100 மீட்டர் சுருங்கிவிட்டதாக அவர்கள் கூறினர். இருப்பினும், இதனால் ஆபத்து ஏதும் இல்லை, சந்திரன் காணாமல் போய்விடாது என்றும் அவர்கள் கூறினர்.

மத்தேயு. 24:29 அந்நாட்களில் உபத்திரவம் முடிந்தவுடனே சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்.

வெளிப்பாடு 6:12ல் சொல்லப்பட்டபடி சூரியன் கருப்பு கம்பளியைபோல கருத்தது. என்ற வசனத்தின்படி இந்த படத்தின் தகவல்கள் அமைந்துள்ளது

சூரியனை விழுங்கும் 'கறுப்பு?!'

# பைபிளின் மூலம் அறிய வேண்டியதும், என்றும் நினைவில் இருக்கவேண்டிய தேவ செய்திகள்

## இப்புத்தகத்தின் இரண்டாம் பகுதி

## 1) இரண்டு வித முத்திரைகள்

தேவ பிள்ளைகளே! இந்த இரண்டாம் பகுதியை எழுதிய நோக்கம், நாம் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகளாய் இருந்தாலும் அவர் வருகை நெருங்கி வரும் போது நாமும் இடறி விழத்தக்க வகையில் அடையாள அற்புதங்கள் இப்பூமியில் நடக்கும். இதை *மத்தேயு.24:24* ஆம் வசனம் கூறுகிறது. எனவே அந்த நாட்களில் வேதத்தின் அடிப்படையில் நடக்கப்போகும் சம்பவங்களை நன்கு அறிந்திருந்தால் கட்டாயம் நாம் இடறிவிழ மாட்டோம். எனவே தான், ஆவியானவர் மூலம் நான் அறிந்து கொண்ட இந்த இரகசியத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவிரும்பி இப்பகுதியை எழுதினேன். சரி! ஆவியானவர் துணையுடன் இப்பகுதியை வாசிப்போம்.

பைபிளில் நமக்கு இரண்டு வித முத்திரைகள் பற்றி கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டிலும் "முத்திரை" என்ற வார்த்தை சொல்லப்பட்டிருக்கிறது. தேவ பிள்ளைகள் இதில் கவனமாய் இருந்தால் தான் கள்ளத்தீர்க்கதரிசிகளிடம் இருந்து தப்ப முடியும். முத்திரை என்ற வார்த்தையை வைத்து உங்களை ஏமாற்றிவிடுவார்கள். எப்படியோ பயோசிப் என்ற முத்திரையை யார் சொன்னாலும் போடவேகூடாது என்று அறிந்து கொள்ளுங்கள்.

1) தேவ முத்திரை

2) மற்றொன்று **666 என்ற பயோசிப்** முத்திரை ஆகும்

## I) *தேவ முத்திரை*

ஞானஸ்நானம் எடுத்த பிள்ளைகளுக்கு தேவன் பரிசுத்த ஆவியை அனுப்பி தன் பிள்ளை என்ற உரிமையை கொடுப்பதாகும். இந்த பரிசுத்த ஆவியானவர் நம்மில் எப்பொழுதும் இருக்க விரும்புகிறார். நாம் அவரை வரவேற்று நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தோடு கலந்து இருக்க, விரும்பினால் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்திருக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவின் வருகை வரும் வரை அந்த ஆவியானவர் நம்முடன் இருந்து நமக்கு உதவி செய்து வருவார். அவர் வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்பட தேவ முத்திரை மிகவும் முக்கியமானது.

*எபேசி.4:30 "அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்"* என்று சொல்லப்பட்டுள்ளது. ஞானஸ்நானம் எடுத்த பிள்ளைகள் எப்படி துக்கப்படுத்துகின்றோம் என்று நினைக்கலாம். *எபேசியர்.4:31,32*ல் உள்ளபடி நம் தீய செயல்களை நீக்கவேண்டும். மேலும் உலகத்திற்கு உண்டான பிள்ளைகளோடு நாமும் இணைந்து, மாமிசத்திற்கு உண்டான ஆசைகளுடன், தேவனுக்கு பிரியமில்லாத சில வேலைகளிலும், நம்மை அறியாமலேயே தொடர்ந்து இணைந்து கொண்டிருக்கிறோம். பாவமென்று தெரிந்தும் சூழ்நிலைக்காக நம்வாழ்வை மாற்றியமைத்துக் கொள்கிறோம். இவைகளின் மூலம் பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுவார்.

தேவ முத்திரையாகிய பரிசுத்த ஆவியானவர் கடைசி நாட்கள் வரை நம்மில் இல்லையென்றால், அநேக வேதனைகள் நமக்கு உண்டாகும். இதை *வெளி.9:4–5* வரை காணலாம். எனவே தேவமுத்திரை இப்போதே நம் நெற்றியில் இருக்கிறது என்று விசுவாசம் கொண்டு பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் நம்முடன் இருக்க ஜெபத்தில் விழிப்பாய் இருப்போம்.

## II) *666 பயோசிப் என்ற முத்திரை*



இந்த முத்திரையை நாம் பதித்துக் கொள்ளக்கூடாது என்று ஏற்கனவே எச்சரிக்கை ! எச்சரிக்கை ! என்ற பகுதியிலும், கட்டளைப் பகுதியிலும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. முத்திரை வருவதற்கு முன்பு அறிவிப்பு கொடுப்பார்கள். அப்போது குடும்பத்துக்கு தேவையான சில முக்கிய பொருட்களை ஆயத்தப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். குறைந்த நாட்கள் இடைவெளியில் அறிவிப்பு வந்தால் பொன், வெள்ளி நகைகளையெல்லாம் விற்று கிடைக்கும் பணத்தில் குடும்பத் தேவைகளை ஆயத்தப்படுத்துங்கள். ஏனெனில் முத்திரை போடாதவர்கள் **பொருட்களை வாங்கவோ, விற்கவோ முடியாது.** நெருக்கடிகள் ஏற்படும். பண நெருக்கடியும் வராதவாறு பாதுகாத்துக் கொள்ளுங்கள். தேவையான பொருள்களையும் பணத்தையும் தயார் செய்து உங்கள் வீட்டில் வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் வங்கியில் உங்கள் பணத்தை வைத்தாலும், முத்திரை பதியாமல் உங்கள் சொந்த பணமாக இருந்தாலும் எடுக்க முடியாது. எனவே இந்த ஆலோசனைகளின்படி முத்திரைக்காலத்தில் உங்களிடத்தில் ஓரளவு பணசேமிப்பு இருந்தால் தான் உங்கள் தேவைகளை சந்திக்க முடியும். இக்கருத்து உங்களுக்கு வேதத்திற்கு மாறாக இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? இயேசுவானவர் *மத்தேயு.10:9–10* ல் தன்

சீடர்களிடத்தில் நீங்கள் ஊழியத்திற்கு போகும்போது எதையும் எடுத்துச் செல்லவேண்டாமென்று கூறினார். ஆனால் *லூக்கா.22:36* ல் என்ன சொல்கிறார் பாருங்கள். பணப்பையும், சாமான் பையும், பட்டயமும் பாதுகாப்பிற்கு வைத்துக் கொள்ளச் சொல்கிறார். அது போல் நாமும் கால சூழ்நிலைக்கு தக்கவாறு ஆயத்தமாக இருக்கவேண்டும். எப்படியெனில் *மத்தேயு.25:1–13*ல் பத்து கன்னிகைகளின் உவமையைப் பற்றி அறிந்து இருக்கிறோம். அதில் எண்ணெயுடன் ஆயத்தமாய் இருந்த, ஐந்து புத்தியுள்ள கன்னிகைகளை போல நாமும் ஆயத்தமாக இருக்கவேண்டும். மேலும் முத்திரை பதியாமல் இருக்கவேண்டும் என்ற இந்த ஒரு கட்டளைக்கு கீழ்படியும் போது நம் உறவினர்கள், வீடு பொருட்களைக் கூட இழக்க நேரிடும். **அப்படி இழந்தாலும் கடவுள் அதை பரலோகத்தில் தருவேன் என்று சொல்லியிருக்கிறார்.** இது *மாற்கு. 10:29–30* ல் *"என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடே கூட நூறத்தனையாக வீடுகளையும், சகோதரனையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"* என்று இயேசு அழகாக கூறி உள்ளார்.

இந்த வசனங்களில் சொல்லப்பட்ட உபத்திரவங்கள் அனைத்தும் முத்திரைக் காலத்தில் முழுமையாய் நிறைவேறும். முத்திரை காலங்கள் வந்த சில மாதங்களுக்குப் பிறகு அடையாள, அதிசயங்கள் நடக்கத்தக்க கூட்டங்கள் அநேக இடங்களில் நடைபெறும். இவையாவும் கள்ளக்கிறிஸ்துக்கள், கள்ளத் தீர்க்கதரிசிகளால் நிகழும். அது எப்படியிருக்கும் என்றால் இயேசு இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் செய்த அற்புதங்களைப் போலிருக்கும். ஆனால் கள்ளத்தீர்க்கத்தரிசிகள் பிதாவோடு ஐக்கியமாய் இருக்கமாட்டார்கள். மாறாக பிசாசோடு ஐக்கியமாய் இருந்து பிசாசினிடத்தில் வல்லமையைப் பெற்றுக் கொள்வார்கள். பிறரை வஞ்சிக்கத்தக்க வகையில் அடையாள அற்புதங்களை உலகத்தில் அநேக இடங்களில் செய்வார்கள். இதுவே ஆண்டவரின் வருகைக்குரிய கடைசி அடையாளமும் சொல்லப்போனால் கடைசி உபத்திரவங்கள் என்று கூட சொல்லாம். எப்படியெனில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கூட இப்படிப்பட்ட அடையாள அற்புதங்கள் நடக்கும்பொழுது இடறி விழுவார்கள் என்று வசனம் சொல்கிறது. இவ்வசனத்தை படிக்கும்பொழுது ஆண்டவரே உம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள் எப்படி இடறி விழுவார்கள் என்று தயக்கத்தோடு ஜெப வேலையில் கேட்டேன். அதற்கு ஆவியானவர் தெரிந்து கொள்ளப்பட்டவர் பிள்ளையின் வீட்டில் அவர்களின் பிள்ளைகளுக்கோ, கணவன் மனைவிக்கோ நோயின் நிமித்தம் உடல் பலவீனம் ஆகலாம். எந்த வேலையும் செய்ய முடியாத ஒரு நிலை ஏற்படலாம். அது என்

சோதனை என்பதை அறியாமல் உடனே அந்நாட்களில் அற்புத அடையாளங்கள் நடக்கும் கூட்டத்திற்கு செல்வார்கள். ஏனெனில் அவர்களும் நம்பும் வகையில் அக்கூட்டங்களில் அதிசய அற்புதங்கள் நடைபெறும். எனவே தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு இது கடைசி உபத்திரவம் ஆகும் என்று ஆவியானவர் விளக்கினார். இப்படி செய்பவர்கள் கள்ளக் கிறிஸ்துக்கள் ஆவார்கள். **இவ்வாறு நடக்கும்போது ஆண்டவரின் வருகை மிக, மிக சமீபம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.** அக்கூட்டங்களுக்கு செல்ல வேண்டாமென *மத்தேயு.24:24–26* வரையில் உள்ள வசனம் நம்மை எச்சரிக்கிறது. ஏனென்றால் *ரோமர்.13:1–3* வரையில் உள்ள வசனங்களில் மேலான அதிகாரிகளுக்கு கீழ்படிய வேண்டும் என்றும் அரசாங்கத்திற்கு வரிகட்ட இயேசுவானவர் மீன் வாயிலிருந்து வெள்ளி பணத்தை எடுத்துக் கொடுத்து அரசாங்கத்திற்கு வரி கட்டச் சொன்னாரே, அதுபோல் முத்திரை காலத்திலும் அரசாங்கத்திற்கு கீழ்படியச் சொல்லி கள்ளதீர்க்கதரிசிகள் ஏமாற்றுவார்கள். *2தெச.2:7–12, மாற்கு.13:22–24*ன் மூலமும் இதனை தெரிந்துக் கொள்ளுங்கள். இந்த கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய அற்புதங்களும், அடையாளங்களும், வஞ்சகங்களும் தேவனால் அனுமதிக்கப்படுகின்றது என்பதை தெரிந்து கொள்ளுங்கள். இதை தேவன் ஏன் அனுமதிக்கிறார்? என்றால் அவிசுவாசிகள் **தேவன் சொல்லிய சத்திய வார்த்தைகளை நம்பாமலும், நீதியின் பாதையில் நடக்க மனமில்லாமலும்**, மேற்கண்ட அடையாள அற்புதங்களை மட்டுமே நம்புவதால் அவர்கள் எல்லாம் ஆக்கினைக்குள்ளாகும்படி, தேவன் இவ்வாறான காரியங்களை நடப்பிக்கிறார். முத்திரை காலத்தில் நடக்கப்போகும் மேற்கண்ட சம்பவங்களை ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தியதை, இப்புத்தகத்தின் மூலம் எழுதி உள்ளேன். எனவே இச்சம்பவங்கள் பூமியில் அநேக இடங்களில் நடக்கும் போது ப்ரிசுத்தமாய் வாழுங்கள். தேவகுமாரனுடைய வருகை மிகமிக சமீபமாய் உள்ளது. இதுவே இரண்டு வகை முத்திரையின் விளக்கமாகும்.

## *2) இரகசிய வருகை*

இந்த உலகம் முடிவடையும் காலத்திற்கு முன்பாக இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை வரும் என்பதை *மத்தேயு.24:3* ன் மூலம் அறிந்து இருக்கிறீர்கள். இவ்வசனங்களில் சீஷர்கள் இயேசுவிடம் **உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்னவென்று கேட்கிறார்கள்.** இதன் மூலம் அவர் வருகை உலகத்தின் முடிவிற்கு முன்பாக வருமென்பது தெளிவாகின்றது. அவர் வருகைக்கு முன்பாக வரப்போகும் உபத்திரவங்களை, இயேசுவானவர் சீடர்களிடத்தில் *மத்தேயு.24:4–42* வரையில் உள்ள வசனங்களில், சொல்லப்பட்டப்படி நடக்கும் என்று கூறியிருக்கிறார். மேலும் யோவானிடம் *வெளி.6:1–17*வரை உள்ள வசனத்தின் படியும் நடக்கும் என்பதை தரிசனத்தில் அவருக்கு தம் தூதர்கள் மூலம் வெளிப்படுத்தினார். குறிப்பாக *மத்.24:29*ல் *"அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடன், சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து*

# தரை இறங்கும் மேகங்கள்

கவிஞர்களின் கற்பனைக்கு எல்லையே இல்லை. அதிலும் காதல் கவிதை என்றால் கேட்கவே வேண்டாம். கற்பனை வளம் கொட்டும். உதாரணத்திற்கு, 'மேகம் தரை இறங்கி வந்து உன் தலை கோதி விட்டுப்போகும்' என்று காதலியிடம் காதலன் சொல்வது போல கவிதை உண்டு. இந்த கற்பனை கொஞ்சம் கொஞ்சமாக நிஜமாகி வருகிறது. மேகங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வான் வெளியில் இருந்து தரையை நோக்கி இறங்கி வருகின்றன என்கிறது சமீபத்திய ஆய்வு ஒன்று.

காணித்தது. கடந்த 10 ஆண்டுகளில் மேகங்களின் இயக்கம் குறித்து இந்த கருவி சேகரித்த தகவல்களை நியூசிலாந்தில் உள்ள ஆக்லாந்து பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினார்கள்.

அப்போது தான் மேகம் கொஞ்சம் கொஞ்சமாக பூமியை நோக்கி தரை இறங்கி வருவது தெரியவந்தது. இதுதொடர்பாக ஆய்வை நடத்திய பேராசிரியர் ரோஜர் டேவிஸ் கூறும்போது, 'கடந்த 10 ஆண்டுகளில் மேகம் சுமார் 30 முதல் 40 மீட்டர் வரை உயரம் குறைந்துள்ளது' என்றார்.

இதற்கு காரணம் என்ன? என்று கேட்டபோது, 'இப்போதைக்கு சரியான காரணம் எதையும் கண்டுபிடிக்கவில்லை, இருப்பினும் காற்றின் சுழற்சி மாற்றம் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்' என்று கருதுவதாக பேராசிரியர் ரோஜர் தெரிவித்தார்.

வான்வெளியில் மிதக்கும் மேகம் உயரம் குறைவதால் வானிலை மாற்றம் ஏற்படலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். இது எந்த அளவுக்கு மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதை இனி வரும் ஆய்வுகள் மூலமே கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

*விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்"* என்று கூறப்பட்டுள்ளது. இவைகள் பூமியில் நடைபெறும்பொழுது நாம் பயப்படாமல், ஆண்டவருடைய வருகையின் நேரம் நெருங்கிவிட்டதென்று, இருக்கும் இடத்திலிருந்து ஜெபிக்க வேண்டும். **இருக்கும் இடத்தைவிட்டு எந்த இடத்திற்கும் நகர வேண்டாம்** என்று *மாற்கு.13:15-16* நம்மை எச்சரிக்கிறது. அவர் வருகை மிகவும் சமீபம். எப்படியெனில் *மத்தேயு.24:30*ல் சொல்லப்பட்டபடி **மனுஷகுமாரன் மேகங்கள் மேல் வருகிறதை பூமியில் உள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். என்ற வசனத்தின்படி மேகங்கள் மேல் நம் ஆண்டவர் வருவதை அனைவரும் காணும் வகையில் மேகம் கொஞ்ச கொஞ்சமாக பூமியை நோக்கி தரையிறங்கி வருவதை நியூசிலாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.** இதற்கான ஆதாரத்தை (தினத்தந்தி 27-2-2012) இணைத்துள்ளேன். ஆண்டவர் வருகை மிக மிக சமீபம் என்பதை நீங்கள் கட்டாயம் மறக்கவே கூடாது, உங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

*"வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரத்தை எடுப்பதற்கு பின்னிட்டு திரும்ப வேண்டாம் என்றும், வீட்டின் மேலிருக்கிறவன் வீட்டிற்குள் இறங்கி எதையும் எடுத்துக் கொள்ளவேண்டாம்"* என்று வசனத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது *லூக்கா.21:28* ல் **"நீங்கள் நிமிர்ந்து பார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள்"** என்று எழுதப்பட்டுள்ளது. இந்த வசனத்துக்கு ஏற்றபடி வருகையின் சம்பவங்களை அறிந்து ஜெபித்துக்

கொண்டிருந்தால் *மத்.24:40–41* ல் சொல்லப்பட்டப்படி அந்த இரண்டு பேரில் ஒருவராக நீங்களும் எடுத்துக் கொள்ளப்படுவீர்கள். இயேசுவின் இரண்டாம் வருகைக்குரிய சம்பவங்கள் தற்போது பூமியில் அநேக இடங்களில் நடந்து கொண்டிருக்கிறது. *லூக்.21:26*ன் படி மனிதர்களும் பூமிக்கு வரும் அழிவைப் பார்த்து பயந்து கொண்டிருக்கிறார்கள். தேவ பிள்ளைகளே, நாம் கடவுளுக்கு மட்டும் தான் பயப்படவேண்டும். மற்ற எதற்கும் பயப்படக்கூடாது. பயப்படுதல் என்பது தேவனுக்கு பிரியமில்லாத காரியம். வேதத்தில் அநேக இடங்களில் பயப்படாதே, என்று வாக்குத்தத்தம் கூறி உள்ளார். எனவே நாம் பயந்து நடுங்கக் கூடாது, **பயப்படுகிறவன் பரலோக இராஜ்யம் போகவே முடியாது,** அவனுக்கு அக்கினி கடல் தான் பங்கு என்று *வெளி.21:8* சொல்கிறது. எனவே, இயேசு கிறிஸ்து சீக்கிரமாக வருவதற்கு ஆயத்தமாய் இருக்கிறார். அவர் வருகை *வெளி.16:15* ல் சொல்லப்பட்டபடி திருடன் வருகிறவிதமாய், திடீரென்று எந்த வேளையிலும் வருவேன் என்று சொல்லியிருக்கிறார். இவ்வசனத்தை சற்று தியானிங்கள். திருடன் ஐசுவரியவான்கள் இருக்குமிடத்திற்கே வருவான். *யாக்கோபு.2:5* ல் சொல்லப்படி இவ்வுலகில் தரித்திரராக நாம் இருந்தாலும், நம் தேவன் மேல் விசுவாசமாய் இருந்து தேவன் தந்த வாக்குதத்தத்தின்படியும், கட்டளைகளின்படியும் நடந்தால் நாமே ஐசுவரியவான் பிள்ளைகள். இப்படிப்பட்ட பிள்ளைகளையே இரகசிய வருகையில் அழைத்துச் செல்ல திருடன் வருகிற விதமாய் வருகிறார். எனவே, கட்டளைகளை கடைப்பிடித்து இரட்சிப்பின் வஸ்திரத்தை பாதுகாத்து மேலே சொல்லப்பட்டபடி அவர் வருகையில் நடக்கப்போகும் சம்பவங்களை நினைவில் வைத்து இரகசிய வருகைக்கு ஆயத்தமாகுங்கள்.

## *3) மரித்தவுடன் நாம் எங்கே போகிறோம் ?*

ஒரு மனிதனுக்கு ஆவி, ஆத்துமா, சரீரம் என்று மூன்று பிரிவுகள் உண்டு. அவன் மரிப்பதற்கு முன்பாக அவனுடைய இரண்டு காலின் விரல் பகுதியில் இருந்து சிறிது சிறிதாக உச்சந்தலை வரை மரத்துப் போகும். (அதாவது உணர்வே இல்லாத நிலை) அந்த நிலை வந்ததும் அவன் இறந்துவிட்டான் என்ற நிச்சயத்தை பெற்றுக் கொள்கிறான். உடனே அவன் ஆவி ஆத்துமா மேலே போகின்றது. அவன் தன்னையே சுமந்து செல்வதைப் போல் உணர்கிறான். மரித்து இரண்டு அல்லது மூன்று நாட்களில் மீண்டும் உயிர் பெற்றவர்கள் சொன்ன இக்கருத்து மருத்துவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மரித்த மனிதனின் ஆவி ஆத்துமா மேலே செல்கிறது என்பதை வேதத்தில் *பிரசங்கி.3:21*,ல் *"உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?"* என்று எழுதப்பட்டுள்ளது. *1கொரிந்தியர்.15:40*ல் வானத்திற்குரிய சரீரம் உண்டு என்பதை காணலாம். இவ்வாறாக *"வானத்திற்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு என்று வசனம் சொல்கிறது"* மரித்து மேலே சென்ற ஆத்துமாக்கள், நிதானமாய் நியாயத்தீர்ப்பு பெற்ற பிறகு, அங்கே பரலோக பிள்ளைகளாய், நம் முற்பிதாக்களுடன் மகிழ்ந்து தேவனைத்

## தினம் ஒரு தகவல்

தினத்தந்தி
20-4-2011

# மரணத்தை நெருங்கிய நேரம்

உலகிலேயே மிக பயந்த உயிரினம் மனிதன்தான். மனிதன் அளவுக்கு எந்த விலங்கும் பயம் கொள்ளவில்லை. அவற்றின் பயம் மீறிப்போனால் தனது எதிரி விலங்கை பார்க்கும்போது தற்காத்துக்கொள்வதில் ஏற்படும் பயமாகத்தான் இருக்கும். மனிதனுக்கு இயற்கை, விலங்கு, சகமனிதன் என்று எல்லாவற்றின் மீதும் பயம் இருந்தது. இந்த பயத்துக்கு முக்கிய காரணமே மரணம்தான். மரணத்தை கண்டு நடுங்காத மனிதர்களே இல்லை.

மரணம் மனிதனை வந்தடையும் அந்த தருணம் எப்படியிருக்கும்? மரணம் அடைந்து பின் சில மணி நேரங்களில் உயிர் வந்து பிழைத்த நபர்களை தேடிப்பிடித்து அவர்களிடம் பேசி, மரணம் இப்படித்தான் இருக்கும் என்று மருத்துவ ஆய்வாளர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் கருத்துப்படி மரணம் அடைந்தவர் முதலில் நான் இறந்து விட்டேன் என்பதை உணர்ந்து கொள்கிறார். அதன்பின் இந்த பூமியை விட்டு வெளியேறி விண்வெளியில் மிதந்து சுற்றிச்சுழல்வதுபோல் எண்ணுகிறார். தன் உடலை விட்டு விலகி தனது உடலையே முழுமையாக பார்ப்பதுபோல் உணர்கிறார். சிலர் தங்கள் உடலை சுற்றி உறவினர்களும் மருத்துவமனை என்றால் டாக்டர்கள் மற்றும் நர்சுகளும் நின்று கொண்டிருப்பதை பார்த்திருக்கிறார்கள்.

மிக அமைதியான வெளிச்சம் குறைவான சுரங்கத்துக்குள் போய்க்கொண்டே இருப்பதைபோல் உணர்கிறார்கள். கண்களை கூசவைக்காத, ஆனால் அதீதமான வெளிச்சத்தை நோக்கி மெதுவாக பறப்பதுபோல் தோன்றுவது, போகும் வழியில் வெள்ளையான அல்லது வெள்ளை நிறத்தில் உடை அணிந்த ஆண், பெண் என்று வித்தியாசம் இல்லாத உருவத்தை பார்த்திருக்கிறார்கள்.

இறந்தவரின் வாழ்க்கையில் என்னென்ன நடந்ததோ அவை எல்லாமே திரும்பவும் பிளாஸ்–பேக் போல கண் முன் வந்துபோவது, பூமியில் இருக்கும் தனது உடலுக்குள் நுழைய வேண்டும் என்ற துடிப்பும், வேண்டவே வேண்டாம் என்ற வெறுப்பும் மாறி மாறி தோன்றும். இறந்ததாக நினைத்து கல்லறை வரை கொண்டு போகப்பட்டு, அதன்பின் உயிர்திரும்பிய பலரும் இப்படி உணர்ந்திருக்கிறார்கள்.

இப்படி இறந்து பிழைப்பதிலும் ஒரு நன்மை உண்டு. மரணம் எவ்வளவு உண்மையானது; வாழ்க்கை எவ்வளவு நிலையற்றது என்ற ஆத்மஞானங்கள் தோன்றுகின்றன. திரும்பவும் உயிர்பெற்றவர் ஏதோ மறுபிறவி எடுத்ததுபோல் நினைக்கிறார். தான் செய்த தவறுகளுக்கெல்லாம் மனம் வருந்துகிறார். தவறுகளுக்கு சம்பந்தப்பட்ட நபர்களிடம் நேரில் சென்று மன்னிப்பு கேட்கிறார். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்கிறார். இனி மரணம் வரை எந்த தவறான செயல்களிலும் ஈடுபடுவதில்லை என்று உறுதி எடுத்துக்கொள்கிறார். இதெல்லாம் மரணம் கொடுத்த அறிவுரைகள்.

துதிப்பார்கள். இது உண்மையாய் இருக்குமா என்று நினைக்கிறீர்களா ? வேதத்தை பார்ப்போம். இயேசு தம் சீடர்களுக்கு சொன்ன ஓர் உண்மைக் கதையை *லூக்கா.16:19–31* வரை வாசியுங்கள். அதில் மரித்த லாசர் ஆபிரகாம் மடியில் இருப்பதை பாதாளத்தில் உள்ள ஐசுவரியவான் அறிந்து கொள்கிறான். அப்படியென்றால் பூமியில் பார்த்த அதே உருவத்தில் லாசருவை அந்த ஐசுவரியவான் பாதாளத்தில் இருக்கும் போது பார்த்திருக்கிறான். இதன் மூலம் நமக்கும் பூமியில் உள்ள உருவமே இருக்கும் என்பது தெளிவாகிறது. பிறகு பாதாளத்தில் இருந்து ஐசுவரியவான் ஆபிரகாமிடம் தண்ணீர் கேட்டு, கிடைக்காத போது அதன் வேதனையை நன்கு உணர்ந்தவனாய், நாம் தான் இங்கு வந்துவிட்டோம். என்னைப் போன்ற 5 சகோதரர்கள் பூமியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள், அவர்களும் பாதாளத்திற்கு வராமல் இருக்க உதவி செய்யும்படி கேட்கிறான். அதன் மூலம் நாம் மரித்த பிறகு நம் ஆவிக்குரிய சரீரம் மேலே போனாலும் குடும்பத்தின் உணர்வு இருக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம். லாசர் மரித்த பின்பு தூதர்கள் அவனை அழைத்துச் சென்றதாக இப்பகுதியில் பார்க்கிறோம். இப்படியாக நியாயத் தீர்ப்பு பெற்றபிறகு லாசர் ஆபிரகாம் மடியிலிருக்கிறான். அது போல் நாமும் ஆண்டவர் பிள்ளையாய் வாழ்ந்து மரித்தோமானால், தூதர்கள் நம்மை அழைத்துச் சென்று ஆபிரகாமிடம் சேர்ப்பார்கள்.

இந்த நியாயத் தீர்ப்பு எப்படி நடக்குமென்றால்; ஒரு மருத்துவமனைக்கு சென்றால் அட்டை பதியும் இடம், மருத்துவரை பார்க்கும் இடம், ஊசி போடும் இடம் என்று பல பிரிவுகள் உண்டு. அதேபோல்தான் மரித்த பிறகு ஒரு மனிதனின் ஆவி பரலோகத்தின் வாசலிலுள்ள பல ஸ்தலங்களுக்குச் சென்று, இறுதியாக அவனவன் கிரியைக்கு தக்க பலனை பெறுவான். இதுவே ஒவ்வொரு மரித்த மனிதனுக்கும் நடக்கும் சம்பவமாகும். மரித்த மனிதன் மேலே ஆவிக்குரிய சரீரமாக செல்லும்போது ஒரு பெரிய வெளிச்சத்தை காண்கிறவனாகவும், அங்கு ஆண் பெண் வித்தியாசமில்லாத வெள்ளை ஆடை அணிந்தவர்களையும் பார்த்ததாக சொல்கிறான். இச் செய்தி எந்த அளவிற்கு உண்மை என்பதை இத்துடன் தினத்தந்தி செய்தித் தாளில் வந்த தினம் ஒரு தகவல் என்ற பகுதியில் "மரணத்தை நெருங்கிய நேரம்" என்ற செய்தியை இணைத்துள்ளேன், படித்துப்பாருங்கள். மேலும் புதுச்சேரியில் வசித்து வரும் ஒரு சகோதரியின் சாட்சியையும் இத்துடன் சேர்த்துள்ளேன். அவர் மரித்து பரலோக வாயில் வரை சென்று திரும்பிவந்த ஒரு நபர்.

### *ஒரு ஏழைத் தாயின் உண்மையான சாட்சி*

என் பெயர் – சரோஜா வயது 60 ஆகிறது. கணவனை இழந்த ஒரு ஏழைத்தாயாக வசித்து வருகின்றேன். எனக்கு கடந்த 2008ஆம் ஆண்டு வயிற்றுப் போக்கு ஏற்பட்டு நோய்வாய்ப்பட்டேன். என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அப்போது இயேசுவை வணங்கும் ஒரு சகோதரி, இயேசுவை மட்டும் நம்பி மருத்துவமனைக்கு போ! அவர் உனக்கு சுகம் தருவார் என்றார். நான் அவ்வாறே இயேசுவை

வணங்கிவிட்டு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் 18 நாட்களாக மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தேன். குளுக்கோஸ் ஏற்றப்பட்டிருந்தது. ஆனால் என்னுடைய கடைசிநாளில் உயிர் பிரிந்து மேலே போனதை 18ஆம் நாள் உணர முடிந்தது. அது பரலோக வாசல் என்பது அப்போது எனக்கு தெரியாது. நான் வரிசையில் நின்று கொண்டிருந்தேன். அங்கு சிலர் வரிசையில் நிற்பவர்களுக்கு ஆகாரம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். எனக்கும் ஒரு ஆள் பெரிய அரிசி சோறும், அகத்தி கீரை தண்ணி சாரும் கலந்து சாப்பாடு கொடுத்தார். நான் 18 நாட்களாக ஒன்றும் சாப்பிடாமல் பசியாய் இருந்ததால் அதை வாங்கி சாப்பிட்டேன். பிறகு மரித்த என் உறவினர்கள் சிலரை அங்கு பார்த்தேன். அவர்கள் அழுது கொண்டேயிருந்தார்கள். அங்கு அநேகருடைய அலறல் சத்தமும் கேட்டுக் கொண்டேயிருந்தது. அது எனக்கு நரகமென்று தெரியாது. நான் தொடர்ந்து வரிசையில் சென்று கொண்டு இருக்கும் போது ஒரு தூதன் இருப்பதையும் பார்த்தேன். அவர் என்னைப் பார்த்து உனக்கு மரணமில்லை. உன்னுடைய ஆயுசு நாட்கள் முடியவில்லை. பூமிக்கு திரும்பிப் போ! என்று என்னை லேசாக தள்ளிவிட்டார். உடனே என்மரித்த சரீரத்தில் நான் இணைந்து விட்டேன். என்னை சுற்றி மருத்துவர்கள் இருந்தார்கள். நான் படுக்கையை விட்டு எழுந்ததும் அங்கு சாப்பிட்டு வந்த உணவு வாய்மூலமாக வெளியே வந்தது. உடனே டாக்டர்கள் என்னம்மா 18 நாட்களாக சாப்பிடவில்லை. படுக்கையில் இருந்தாய்–இப்போது எப்படி? உணவு வாயிலிருந்து வருகின்றது என்று கேட்டார்கள். அதற்கு அவர்களிடம் மேலே நடந்த சம்பவத்தைக் கூறினேன்.

அன்றிலிருந்து பூரண சுகம் பெற்றுக் கொண்டேன். அதன்பின் வீட்டிற்கு வந்து, தேவ பிள்ளைகள் மூலமாக ஆண்டவரின் சத்தியத்தைக் கேட்டேன். பிறகு ஞானஸ்நானம் எடுத்து நகைகளையும் அர்ப்பணம் செய்து ஆண்டவரின் பிள்ளையாக இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இந்த சாட்சி ஆண்டவரின் நாமம் மகிமைப்படும்படியாக உங்களிடம் தெரிவிக்க, புத்தகம் எழுதிய சகோதரி கேட்டதினால் சொன்னேன். தகுதியில்லா என்னையும் ஆண்டவர் சாட்சியாக எடுத்து, பயன்படுத்தியதற்காக கோடான கோடி நன்றி கூறுகின்றேன். இதன் மூலம் ஒரு உண்மையுள்ள சாட்சியை அறிந்து கொண்டீர்கள். வேதத்திலும் *1யோவான்.5:7* ஆம் வசனத்தின்படி நாம் மரித்து பரலோகம் செல்லும் போது பிதாவானவரும், வார்த்தை என்ற இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும், நம்மை சாட்சி கையெழுத்திட்டு, ஏற்றுக்கொள்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இவைகளே மரிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் நடக்கும் சம்பவங்கள் ஆகும். இதனை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் வேண்டும்.

## *4) இரண்டு வித நியாயத்தீர்ப்பு*

இவ்வுலகத்தில் வாழும் நாம் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற நோக்கத்தோடு வாழக்கூடாது. பரலோகம் சென்று வாழ்வதற்காகவே

நமக்கு கடவுள் ஜீவனைக் கொடுத்துள்ளார். உதாரணமாக பூமியில் ஒரு உயர்ந்த வேலை பெறவேண்டுமென்றால் (டாக்டர், இன்ஜினியர்) அதிக ஆண்டுகள் படிக்கவேண்டும். அதைப் போலவே பரலோக வாழ்வை சுதந்தரித்துக் கொள்ள, கர்த்தரின் கட்டளைகளைக் கடைப்பிடித்து, ஜீவன் உள்ள நாள் வரை தூய வாழ்வு வாழவேண்டும். அதன்பின் மரணத்தை சந்திப்போமானால் அங்கு நடைபெறும் இரண்டுவித நியாயத் தீர்ப்பை நாம் காண முடியும்.

முதல் நியாயத் தீர்ப்பு – நிதானமாய் தீர்வு காண்பது

இரண்டாவது நியாயத் தீர்ப்பு – பொதுவான தீர்வு காண்பது

## I) முதல் நியாயத் தீர்ப்பு

ஆதார வசனம் *சங்கீதம்.98:9* இவ்வசனத்தில் *"அவர் பூமியை நியாயந் தீர்க்க வருகிறார், பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந் தீர்ப்பார்"* என்று கூறப்பட்டுள்ளது. இதன்படி பூமியில், நியாயத் தீர்ப்பதென்பது முதலாவது இரகசிய வருகையை குறிக்கிறது. பிறகு மரித்து மேலே சென்ற பிள்ளைகளை, அவர் நீதியாகிய வசனத்தைக் கொண்டு நிதானமாய் நியாயம் தீர்ப்பார். இந்த நியாயத் தீர்ப்பு ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு நாளில் சராசரி 21 ஆயிரத்து 500 பேர் மரிக்கிறார்கள் என்று கணக்கெடுப்பில் சொல்லப்படுகிறது. அப்படி மரிக்கும் அத்தனை பேரும் பரலோக வாசலின் முன் பகுதியில் தான் நிற்பார்கள். வரிசையில் நிற்கும் ஒவ்வொருவருக்கும் சில தூதர்களே நியாயத் தீர்ப்பு கொடுப்பார்கள். அவர்களில் துன்மார்க்கராய் ஜீவித்தவர்களை, தூதர்கள் அறிந்து அவர்களை கீழே தள்ளிவிடுவார்கள்.

துன்மார்க்கர்கள் யாரென்றால் தற்கொலை செய்து கொண்டவர்கள், விபச்சாரம், குடிவெறி போன்ற பாவத்தை தொடர்ந்து செய்பவர்கள் ஆவார்கள். தற்கொலை செய்து கொண்ட துன்மார்க்கர்களின் ஆவி, தூதனால் பூமிக்கு மீண்டும் தள்ளப்பட்டு விடும். ஏனென்றால் அவன் ஆயுசு நாட்கள் முடியாமல் மரித்து மேலே போனதால், ஆயுசு நாட்கள் முடியும் வரை பூமியில் சுற்றி திரிந்து கொண்டிருப்பான். இப்படி நாமிருக்கும் ஊர்களிலும், தெருக்களிலும் ஆவிகள் சுற்றித் திரிவதை நாம் கேள்விப்படுகிறோம் அல்லவா? இதிலிருந்து மரித்து மேலே செல்லும் மனிதர்களுக்கு, தனி நியாயத்தீர்ப்பு நடைபெறுகின்றது என்பதை அறிந்து கொள்கிறோம். இப்படியாக முதல் நியாயத்தீர்ப்பு நிதானமாய் தீர்வு காண்பதாகும். தேவ சித்தப்படி மரித்தவர்கள் அடுத்த ஸ்தலத்திற்கு போவார்கள். அவர்களில் ஓயா குடிகாரன், கொலை வெறிப்பிடித்தவர்கள், எப்போதுமே பாவத்திலேயே வாழ்ந்து மரித்தவர்களின் ஆவி, இரண்டாம் ஸ்தலத்திற்கு போய் நிற்கும். இவர்களை தூதர்கள் அறிந்து துன்மார்க்கராகவே பூமியில் வாழ்ந்தார்கள் என்று, இரண்டாம் ஸ்தலத்திலிருந்து நரகத்திற்கு தள்ளி விடுவார்கள். ஏனென்றால் அவர்கள் வாழ்க்கை முழுவதும் பாவத்திலிருந்ததால், அவர்களுக்கு நியாயத் தீர்ப்பு இல்லை. இப்படியாக பல ஸ்தலங்களுக்கு நம் மரித்த ஆவிக்குரிய சரீரம்

சென்று இறுதியாக தேவபிள்ளை என்று இயேசு கிறிஸ்துவால், நியாயத் தீர்ப்பு பெற்ற பிறகு ஆபிரகாம் பிள்ளைகளாய் ஆவிக்குரிய சரீரத்தோடு கர்த்தருடன் இருப்போம்.

இயேசு கூறிய லாசர் ஐசுவரியவான் உண்மை கதையில் நியாயத்தீர்ப்பு நடந்துள்ளது என்பதை அறியலாம். *சங்கீதம்.1:5* ல் சொல்லப்பட்டதைப் பார்த்தால் *"துன்மார்க்கர் நியாயத் தீர்ப்பிலும் பாவிகள் நீதிமான்கள் சபையிலும் நிலை நிற்பதில்லை"* என்று சொல்லப்பட்ட வசனத்தின் மூலம் நியாயத் தீர்ப்பு இன்றும் நடந்து கொண்டிருப்பதை தெளிவாக அறிந்து கொள்ளலாம். இவ்வசனத்தின் மூலம் நம்மை பாவிகள், நீதிமான்கள், துன்மார்க்கர் என்ற பிரிவாக பிரிப்பார்கள். நாம் நீதிமான்களாக இருப்போமானால் பரலோகத்தில் பிதாவையும், இயேசுவையும் பரிசுத்த ஆவியானவரையும், போற்றித் துதித்து மகிமைப்படுத்தி கொண்டிருப்போம். பாவிகளாக பிரிக்கப்பட்டவர்கள், அவர்களுக்கு உரிய சரீரத்துடன் நரகத்தில் தள்ளப்படுவார்கள். மேல் உலகத்தில் பரலோகம் நரகம் இருக்கிறது என்பதை நாம் அங்கு அறிந்து கொள்ளலாம். *மாற்கு.9:43–48* ஆம் வசனம் வரை படித்து நரகம் ஒன்று உண்டு என்பதை அறிந்து கொள்ளுங்கள். இவ்வசனங்களில் *"உன் கைகள் அல்லது கால்கள், கண் உனக்கு இடறலாய் இருக்குமானால் அதை தறித்துப்போடு"* இவைகளில் இரண்டு உறுப்புகளோடு நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒரு உறுப்புடையவனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது, உனக்கு நலமாய் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படியாக மரித்து மேலே போன ஒரு மனிதனின் ஆவிக்குரிய சரீரத்திற்கு, தனித் தனியாக முதலில் நியாயத் தீர்ப்பு செய்வார்கள். இதுவே தனி நியாயத் தீர்ப்பாகும்.

எனவே பரலோகம், நரகம் உண்டு என்பதை, மேற்கண்ட செய்திகள் மூலம் அறிந்து கொள்ளுங்கள்.

## II) இரண்டாவது நியாயத் தீர்ப்பு பொதுவானதாய் தீர்வு காண்பது

மேற்கண்டவாறு நிதானமாய் நியாயந் தீர்க்கப்பட்டவர்கள், உலக முடிவின் போது ஆண்டவரின் வருகையில், பரிசுத்தவான்களுடன், ஆவிக்குரிய சரீரத்துடன் கீழே பூமிக்கு வந்து *யோவான்.5:28–29* ல் சொல்லப்பட்டபடி உயிர் பெறுவார்கள். நன்மை செய்த நீதிமான்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். தீமை செய்த பாவிகள் ஆக்கினை அடையும்படி எழுந்திருப்பார்கள். இதைக்குறித்து கூறப்பட்டு உள்ள மற்றொரு வசனம் பிரேதக் குழியிலிருந்து ஒரு மனிதன் எப்படி உயிர் பெறுவான் என்பதை *எசேக்கியேல்.37:1–14* வரை தயவு செய்து எடுத்து படியுங்கள்.

மரித்தபிறகு நாம் எப்படி உயிர் பெறுவோம் என்ற கேள்வி உங்கள் மனதில் இருக்கும். இவ்வசனங்களை ஆவியானவர் துணையுடன் படித்தீர்கள் என்றால் எப்படி உலர்ந்த எலும்புகளை எல்லாம் உயிர் பெற வைப்பார் என்பது புரியும். விளக்கத்தைப் பார்போம்: கர்த்தர் எசேக்கியேல்

தீர்க்கதரிசியிடம், நீ அந்த பள்ளத்தாக்கில் இருக்கும் எலும்புகளிடத்தில் சொல்ல வேண்டியது என்னவென்றால், கர்த்தராகிய நான் எலும்புகளாகிய உங்களை நரம்பு, மாமிசம், தோல் இவைகளால் மீண்டும் இணைத்து ஆவியையும் கொடுப்பேன். அப்போது நீங்கள் உயிரடைவீர்கள் என்று சொல்லச் சொன்னார். அதன்படியே எசேக்கியேல் தீர்க்கதரிசி அந்த பள்ளத்தாக்கின் நடுவில் நின்று பேசினார். உடனே இரைச்சல் சத்தம் கேட்டது. அப்போது ஒரு மாமிசத்துக்குரிய எலும்புகள் அதன் அதனோடு இணைந்தது. எலும்புகள் அசைந்ததால் இரைச்சல் சத்தமும் அசைவுகளும் வந்தது. இதனை கற்பனை செய்து பார்த்தால் மனித எலும்புக்கூடுகள் நிறைந்த பள்ளத்தாக்காக அப்போது மாறியிருக்கும். இந்நிலையை எசேக்கியேல் தீர்க்கதரிசி பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ஒவ்வொரு எலும்புக் கூட்டின் மீது நரம்புகளும், மாமிசமும், தோல்களும் இணைந்தது. ஆனால் அதற்கு ஆவியில்லாமல் இருந்தது. இந்நிலை எதற்கு சமம் ஏன்றால் இறந்த மனிதனின் உடலுக்கு சமம். பிறகு கர்த்தர் எசேக்கியேலிடம் ஆவிக்கு தீர்க்க தரிசனம் சொல்லு என்று கூறுகிறார். அவர் ஆவிக்கும் தீர்க்க தரிசனம் சொல்லி இறந்த நிலையில் உள்ளவர்கள் மேல் ஆவியை ஊது என்று சொல்லச் சொன்னார். அதன்படியே எசேக்கியல் தீர்க்க தரிசனம் உரைத்தார். அப்போது அந்த ஆவி அவர்களுக்குள் பிரவேசித்து **உடனே காலூன்றி மகா பெரிய சேனையாக நின்றார்கள்.** இதுவே *எசேக்கியேல். 37:1–10* வரையில் உள்ள வசனங்களின் விளக்கமாகும்.

இப்படியாகவே நாமும் நம் முன்னோர்களும் இரகசிய வருகைக்கு முன்போ, பின்போ மரித்திருந்தால் கடைசி நாட்களில் உயிர் பெறுவோம். ஆதார வசனம் *யோவான். 5:28–29* "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். *ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.* இவ்வாறாக மேலே சென்ற ஆவிக்குரிய சரீரமும், மண்ணுக்கு சென்ற மாமிசத்துக்குரிய சரீரமும் மீண்டும் உயிர் பெறும். இப்படியாக மரித்து உயிரோடு எழுந்த அனைவரும் *வெளி.20:12–15* ல் கூறியுள்ளபடி இறுதி நாளில் அவனவன் கிரியைக்குத்தக்க கடைசி நியாயத் தீர்ப்பாகிய நித்திய ஜீவன், அல்லது அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். இதுவே பொதுவான நியாயத் தீர்ப்பாகும். **பூமியில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் தம் பெற்றோரின் உதவியால் அந்நாள் முதலே வாழ ஆரம்பிக்கும். அதுபோல் மரித்து மேலே போன ஒவ்வொரு ஆவிக்குரிய சரீரமும், தூதர்களால் நியாந்தீர்க்கப்பட்டு பரலோகம் அல்லது நரகம் என்ற இடத்தில் வாழ ஆரம்பிப்பார்கள்** என்பதை நினைவில் கொண்டு ஜீவனையும், தீர்க்காயுசையும் பெறும்படியாக தேவ பிள்ளையாக வாழுங்கள்.

## 5) ஆயத்தமாகுதல்

தேவ பிள்ளைகளே, நாம் இந்த பூமியில் வாழும் போது எத்தனையோ உலகப் பிரச்சினையில் மாட்டிக் கொள்கிறோம். அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறோம். அதற்கு ஒரே வழி தேவன் கொடுத்த கட்டளைகளின் படி வாழ்ந்து,அவர் சத்தத்திற்கு உண்மையாய் கீழ்படியவேண்டும். *உபாகமம்.28:1ல்* காணலாம். மேலும் தேவன் தந்த வாக்குத்தத்த வசனங்களை சுதந்தரித்துக் கொள்ளும் போது, உலகப் பிரச்சினைகளில் இருந்து விடுதலை பெறலாம். பரலோகத்தை சுதந்தரிக்க வேண்டும் என்கிற தேவ பிள்ளைகளே, கட்டாயம் நீங்கள் தொடங்கிய எல்லா பிரச்சினைகளையும் முடிக்கவேண்டும். ஏனென்றால் இந்த பூமியில் வாழும் நாம் ஒரு சூழ்நிலையின் நிமித்தம் வேறு நாட்டிற்கு செல்லவேண்டுமென்றால் கட்டாயம் நாம் வாழ்ந்து கொண்டிருந்த, இந்த ஊர்களில் என்னென்ன செயல்களில் ஈடுபட்டிருந்தோமோ, அந்த செயல்களை முடித்த பிறகே செல்வோம், அது தான் நியாயமான முறை.

அதுபோலவே இந்த மண்ணுலகம் விட்டு விண்ணுலகிற்கு செல்லும் நாம் இந்த பூமியில் வாழும் போது நம் குடும்பத்திற்காகவோ, பொது தேவைக்காகவோ, ஊழியத்திற்காகவோ பட்ட கடன்களை எல்லாம் அடைத்து முடித்திருக்கவேண்டும். *1கொரி.1:8* ல் *"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றம் சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி, முடிவு பரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்".* என்ற வசனத்தின்படி நாம் மரிப்பதற்கு முன்போ அல்லது இரகசிய வருகையில் தேவன் நம்மை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றாலோ, குற்றம் சாட்டப்படாதபடி வாழவேண்டும். இந்த வசனத்தில் **கிறிஸ்துவின் நாளில்** என்று போடப்பட்டுள்ளது. **அது அவர் வருகையின் நாளைப்பற்றி குறிக்கிறது.**

எனவே தேவபிள்ளைகளே, **கடன் வாங்குதல், சீட்டுப் போடுதல், சீட்டுப் பிடித்தல், மாதர் சங்கத்தில் சேருவது, வங்கிக் கடன்கள் வாங்கி விடு கட்டுவது, டி.வி.தொடர் பார்ப்பது, சினிமா பார்ப்பது** இதுபோன்ற உலக பிரச்சினையோடு தொடர் சங்கிலியைப் போல் இன்னும் இணைந்து கொண்டேயிருந்தால் நீங்கள் விடுதலை பெற்று ஆயத்தமாய் இருக்கமுடியாது. ஏனென்றால் அவர் வருகை நாள் மிகவும் சமீபமாய் இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் *2இராஜா.20:1-5* வரை படித்துப் பாருங்கள். *எசேக்கியா* என்ற ராஜா மரணப்படுக்கையில் இருக்கிறார். அந்நிலையில் உள்ள அவரையே தேவன் *குடும்ப காரியத்தை ஒழுங்கு பண்ண சொல்லு. அவன் மரிக்கப் போகிறான்* என்று *ஏசாயா* என்ற தீர்க்கதரிசியிடம் ஆள் அனுப்பி சொல்ல வைக்கிறார். அப்படியென்றால் தேவனின் சித்தம் எதுவென்பதை புரிந்து கொள்ளுங்கள். ஆகவே நீங்கள் தொடங்கிய எல்லா குடும்ப காரியங்களையும் நீங்களே முடித்து, ஒழுங்குபடுத்தி ஆயத்தமாக இருக்கவேண்டும். அப்போது தான் நீங்கள் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவீர்கள். இல்லையென்றால் கைவிடப்பட்டு விடுவீர்கள்.

எப்படியெனில் நம் இயேசுவானவர் மரிக்கும் போது தன் தாயை யோவானிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டுத்தான் மரித்தார். நான் கடவுளின் மகன், எனவே என் தாயை பிதாவே பார்த்துக் கொள்வார் என்று தன் தாயை விட்டுவிடவில்லை, பூமியில் உள்ள பொறுப்பை சரியாய் முடித்தார். அதுபோல நாமும் குடும்பக் காரியங்களை சரிசெய்யவேண்டும். எனவே பிள்ளைகளே, இப்படிப்பட்ட உலகப்பிரகாரமான காரியங்களில் ஈடுபடாமலிருங்கள். பழைய பிரச்சினைகளை சீக்கிரம் முடித்து விடுதலையாகி விடுங்கள். மேலே கண்ட இது போன்ற புதிய பிரச்சினைகள் எதிலும் ஈடுபடவேண்டாம். ஏனென்றால் இயேசுவின் வருகையின் நாட்கள் மிக மிக குறைவாக உள்ளது. குடும்ப காரியங்களை சரி செய்து கொண்டே ஆத்தும ஆதாய ஊழியத்தை செய்து ஆயத்தமாகுங்கள்.

## *6) என்றும் நினைவில் இருக்கவேண்டிய ஆலோசனைகள்*

பரலோக தேவனை சந்திக்க ஆயத்தமாகும் தேவ பிள்ளைகளே! நாம் அனைவரும் செல்லும் ஒரே இடம் பரலோகம். எனவே சபைப் பாகுபாடின்றி அனைவரும் இப்புத்தகத்தில் உள்ள தேவனுடைய கட்டளைகளை கடைப்பிடிப்போம். வசனம் போடப்பட்டிருக்கிற இடத்தில் உடனே வேதத்தை எடுத்து படியுங்கள், அதன்படி செயல்படுங்கள். அநேக சபைகளில் கண்டிப்பாய் நகை காரியம் பற்றியும், நாம் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய கட்டளைகளைப் பற்றியும் சபைகளில் அடிக்கடி சொல்ல முடியாது. ஏனென்றால் சபைக்கு வாரந்தோறும் புதிய ஆத்துமாக்கள் வருவார்கள். இப்பகுதியை எழுதும் போது ஆவியானவர் என்னுடன் மீண்டும் இடைப்பட்டார். அவர் கூறிய வார்த்தை என்னவெனில் என்னுடைய சபையில் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் மட்டும் தனியாக ஆராதிக்கவேண்டும் என விரும்புகிறேன். பிற இன மக்கள் என் ஆலயத்திற்கு வரும் போது அவர்களுக்கு தனி இடம் அல்லது தனி கூடாரம் கொடுத்து என் சுவிசேஷத்தை சொல்லவேண்டும். நான் அவர்களுக்காகவும் ஜீவனை கொடுத்துள்ளேன். என்னுடைய அநேக அற்புதங்களை சாட்சிகளாக சொல்லி, உலகில் உள்ள கால சூழ்நிலைகளை எடுத்துக் கூறியும் அவர்களின் தேவைகளை கேட்டறிந்து அவர்களுக்காக ஜெபித்து அனுப்பவேண்டும். இதை விரும்பி எனது ஆலயத்திற்கு தொடர்ந்து அவர்கள் வரும்போது ஞானஸ்நானம் பற்றி எடுத்துக் கூறி, பரிசுத்த ஆவியானவர் வரம் கிடைக்கும் என்று சொல்லவேண்டும். அப்போது இந்த பூமியில் எல்லா துன்பங்களையும் தாங்கி உங்களாலும் மகிழச்சியாய் வாழ முடியும் என்று மூப்பர்களாகிய நீங்கள் சொல்லும்போது அவர்கள் ஏற்றுக்கொண்டு மனம்மாறி ஞானஸ்நானத்திற்கு ஒப்புக் கொடுத்தால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து பிறகு சபையில் சேர்க்கவேண்டும். ஆதார வசனம். ***அப்போஸ்தலர். 2:38–40*** ல் இதனைக் காணலாம். இப்படி சபை இருந்தால் என் ஊழியம் செய்யும் பிள்ளைகள் கட்டளைகளை வலியுறுத்தி சபையில் உபதேசிக்க முடியும். என்னை விசுவாசித்து ஞானஸ்நானம் எடுத்தப் பிள்ளைகளும்

கட்டளைகளை கடைபிடிப்பார்கள். இவ்வாறாகவே ஆதியில் சபையிருந்தது. *அப்போஸ்தலர்.2:47ல் "தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்டுகிறவர்களைப் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்".* என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வசனத்தின்படி ஒய்வு நாளில் என் ஆலயத்தை நோக்கி புதியதாக வருகிற பிள்ளைகளுக்கு ஆலயத்திலுள்ள மூப்பர்கள் தனியாக ஒரு இடத்தில் சுவிசேஷத்தை *அப்போஸ்தலர்.2:36–40* வரையில் உள்ள வசனத்தின்படி போதனை செய்து இரட்சிக்கப்பட்ட பிறகே சபையில் சேர்த்தால் என் சபை (ஆண்டவரின் சபை) பரிசுத்த குலைச்சல் இல்லாமலும், சீக்கிரத்தில் ஒரு எழுப்புதலும் உண்டாகும்.

இது கடைசி காலமாய் இருப்பதால் ஆதியில் இருந்த சபையை போல நம் காலத்திலும் இருக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். வசனம் *அப்போஸ்தலர்.20:28ல் "ஆகையால் உங்களை குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்"* என்று எழுதப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் தமது சபை என்று யாரைச் சொல்கிறார் என்றால் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, ஞானஸ்நானம் எடுத்து இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் கூடியிருப்பதையே தமது சபை என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு இயேசுவின் இரத்தத்தினால் கழுப்பட்ட பிள்ளைகள் மட்டும் சபையிலிருந்தால் தான் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை என்ற வார்த்தை அர்த்தமுள்ளதாகவும், பூரணப்பட்டதாகவும் இருக்கும். இப்படிப்பட்ட சபையாக இருந்தால் தான் இரகசிய வருகையில் சபை எடுத்துக் கொள்ளமுடியும். இப்படியாகவே உலகத்திலுள்ள பெரிய தொழிற்சாலைகள் அலுவலகங்கள், சிறு கைத்தொழில்கள் செய்யும் இடத்திற்கு ஆட்கள் வந்தால் கூட முதலில் தனியாக அவர்களுக்கு பயிற்சி கொடுத்தப் பிறகே வேலை செய்ய அனுப்புவார்கள். ஆனால் என் சபையில் எல்லா மக்களும் கலந்தே இருப்பதால் சத்தியத்தை *எரேமியா.3:16*ன்படி உடன்படிக்கை பெட்டியில் உள்ள என் கட்டளைகளை மறந்தே விட்டார்கள். அவர்கள் இப்பூமியில் என் கட்டளைகளை மறந்தாலும் *வெளி12:19ல்* சொல்லப்பட்டபடி பரலோகத்தில் உள்ள தேவனுடைய ஆலயமாகிய என்னிடத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட உடன்படிக்கை பெட்டி ஒன்று உள்ளது என்பதை நினைக்காமல் இருக்கிறார்கள். என் ஊழியம் செய்யும் பிள்ளைகள் தன் சபைக்கு வரும் விசுவாசிகள் அனைவரும் என் கட்டளைகளை வேதவசனத்தில் உள்ளபடி கடைபிடிக்கிறார்களா, என்பதை விசாரிக்காமலும் அவர்களை சரிபடுத்தாமலும் அநேக ஊழியங்களை செய்து கொண்டே போகிறார்கள். எனவே, ஊழியம் செய்யும் பிள்ளைகளாய் இருந்தாலும், விசுவாசிகளாய் இருந்தாலும், **எல்லோருக்கும் ஒரே மேய்ப்பனாக இருப்பவர் யார்** என்றால் **நல்ல மேய்ப்பனாகிய இயேசுவானவரே.** *(யோவான். 10:11)*

நீங்கள்எந்த சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் சில

கட்டளைகளை தேவ சித்தப்படி கடைபிடித்தே ஆகவேண்டும். ஏனெனில் நியாயத் தீர்ப்பு நாளில் அவரவர்களுக்குரிய பகுதியை வேதத்திலிருந்து எடுத்து காண்பித்து, அந்நாளில் நியாயந்தீர்ப்பார். எனவே ஒருவரை ஒருவர் காரணம் காட்டி தப்ப முடியாது. ஊழியம் செய்யும் பிள்ளைகளைக் கூட அந்நாளில் எப்படி நியாயம் தீர்ப்பார் என்பதை சில வசனங்களில் பார்ப்போம். *எரேமியா.25:34–38, எசேக்கியேல் 9:6–8, மத்தேயு.7:21–23* இவைகளில் காணலாம். எனவே இவ்வுலகில் ஊழியம் செய்யும் பிள்ளைகள் அனைவரும் பிதாவின் சித்தத்தின்படியே ஊழியம் செய்ய அவர்களுக்காக பாரத்தோடு ஜெபியுங்கள். நாம் அனைவரும் *பிலிப்பியர்.2:12*ன்படி இரட்சிப்பை பாதுகாத்துக் கொள்வோம். *"ஆதலால், எனக்கு பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாய் இருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாய் இருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும்.உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்".*

மேலும் தேவனுடைய அன்பில் இறுதிவரை நிலைத்திருந்து, அவருடைய கட்டளைகளை கடைப்பிடிக்கிறவனே இரட்சிக்கப்படுவான் என்ற வேத வசனத்தை நிறைவேற்றுங்கள். நாம் அடிக்கடி ஒரு தவறு செய்வோம். அது என்னவென்றால் மற்றவர்களைப் பற்றி குறை சொல்வது, தேவ பிள்ளைகளே! இறுதிக்காலமாய் இருப்பதால் சபைகளில் உள்ள குறைகளையோ, மற்றவர்களுடைய குறைகளையோ பேசக்கூடாது. ஏனென்றால் நாம் நியாயத் தீர்ப்பு நாளில் குற்றவாளியாக நிற்கவேண்டும் என்று *ரோமர்.2:1* ல் வாசிக்கின்றோம். இப்படி மற்றவர்களை குறை பேசுவது உங்களுக்கு பாவமென்று தெரியாமல் செய்துவிடுகிறீர்கள். *"மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"* என்று *மத்.12:36* ம் வசனத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது, எனவே முடிந்தவரை மௌனமாய் இருக்க முயற்சி செய்யுங்கள். தேவையில்லாமல் குடும்ப நபராய் இருந்தாலும் குறை பேசவேண்டாம். நீங்கள் எப்போதும் விட்டுக்கொடுத்து அமைதியாய் இருங்கள். நீங்கள் பேசும் நபர் எப்படிபட்டவர்கள் என்பதை அறிந்து ஞானமாய் ஒரு சில வார்த்தைகள் மட்டும் பேசி அவர்களிடமிருந்து விடுதலை பெறுங்கள். *கொலோசியர்.4:5–6* நம்மை எச்சரிக்கிறது. வசனத்தைப் பார்ப்போம் *"புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக."*என்று எழுதப்பட்டுள்ளது. எனவே எந்த சகோதர, சகோதரிகளைக் குறித்தும் ஒருவருக்கொருவர் குறைவாயும் புறம் பேசவும் கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சபைக்கு சென்று கருத்தாய் ஆராதனையில் பங்கு கொள்ளுங்கள். அப்போது உங்கள் ஆத்துமாவைக் காத்துக் கொள்ள தேவன் வல்லவராய் இருக்கிறார். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## 7) விசுவாசமும் கிருபையும்

இறுதி நாளில் வாழும் தேவ பிள்ளைகளே! நீங்கள் தேவன் மேல் முழு விசுவாசத்துடன் இருக்கிறீர்களா, என்பதை சோதித்துப்பாருங்கள். விசுவாசம் என்பது என்ன? பிதா இயேசு ஆவியானவர் கிரியைகளை முழுமையாய் நம்புவது. அது என்னவெனில் ஏற்கனவே நடந்து முடிந்ததும் இப்போது உலகத்தில் நடந்துக் கொண்டிருக்கிற செயல்களும், இனி இந்த உலகத்திற்கு நடக்கப்போகும் சம்பவங்களும், நம் தேவனாலேயே நிறைவேறுகிறது என்பதை முழுமையாய் நம்பி விசுவாசிக்க வேண்டும். வேதத்தில் விசுவாசம் என்பது *எபிரேயர்.11:1ல் "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமாய் இருக்கிறது"* என்று சொல்லப்படுகிறது. வேதத்தில் சொல்லப்பட்டபடி மரித்த பிறகு நமக்கு ஒரு நித்திய வாழ்வு உண்டு என்பதை விசுவாசித்து இப்பூமியில் வாழும்போது பரிசுத்தமாய் கட்டளைகள் அனைத்தையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் விசுவாசமாய் இருப்போம். ஆபிரகாம் நம் விசுவாச தந்தை. எனவே அவர் எப்படி தேவனை விசுவாசித்தாரோ, அதேபோல் நாமும் கடைசிநாள் வரை விசுவாசத்தில் நிலை நிற்க வேண்டும். அப்போது கிருபை நம்மை சூழ்ந்து கொள்ளும். கிருபை என்பது நமக்கு வேண்டிய ஒரு உதவி எதிர்பார்க்காத ஒரு நபரிடம் இருந்து ஏற்ற நேரத்தில் கிடைப்பது ஆகும். அதேபோல் நாம் தேவ குமாரனுடைய வருகையை எதிர்நோக்கி இருக்கிறோம். அது எந்த நாள் நாழிகை என்று இயேசு கிறிஸ்துவுக்கே தெரியாது–*மத்தேயு.24:36.* அப்படி இருக்கும் சூழ்நிலையில் நாம் எப்படிதான் ஆயத்தமாய் இருந்தாலும், அவர் வருகையின் நேரத்தில் பிதாவானவர் எதிர் நோக்கும் பரிசுத்தம் நம்மில் தவற வேண்டியதாய் இருக்கும், அப்போது தேவ கிருபை நம்மை சூழ்ந்து அவருடைய பரிசுத்தத்தில் நம்மை வாழ வைத்துவிடும். *சங்கீதம்.32:10 "கர்த்தரை நம்பி இருக்கிறவனையோ கிருபை சூழந்து கொள்ளும்".* எனவே இன்னும் ஒரு சில ஆண்டுகளே இப்பூமியில் வாழப்போகிறோம். தேவன் தந்த கட்டளைகளாகிய சத்திய வசனத்தை கடைப்பிடிக்க முடிகிறதா என்பதை தங்களையே *2கொரிந்தியர்.13:5* ன்படி சோதித்துப் பாருங்கள்.

நகை அணியக்கூடாது என்ற கட்டளையை கடைப்பிடித்துப் பாருங்கள். நகை அணியாமலே வெளியே போக முடிகிறதா? பலருடன் பழக முடிகிறதா? என்று சோதித்துப்பாருங்கள் அல்லது மற்றவர்களை குறை பேசக் கூடாது என்ற கட்டளைக்கு கீழ்படிய வேண்டும் என்று வைராக்கியம் எடுத்தபிறகும் குறை பேசாமல் இருக்கமுடிகிறதா? இதுபோன்று ஒவ்வொரு தேவ கட்டளைக்கும் குறிப்பாய் புத்தகத்தில் கொடுக்கப்பட்ட கட்டளைகளை கடைப்பிடிக்க முடிகிறதா என்பதை சோதித்துப் பார்த்தீர்கள் என்றால் உங்களை சரி செய்து கொள்ளமுடியும். இப்படியாக சத்தியமுள்ள தேவ கட்டளைகளை விசுவாசமாய் கடைப்பிடித்தால், கிருபை நம்மை கடைசி நேரத்தில் சந்திக்கும். *சங்கீதம்.32:10* கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும். எனவே விசுவாசத்தில் நிலைத்திருங்கள். **அவிசுவாசியாய் இருத்தல் கூடாது.**

அதாவது அவிசுவாசம் என்பது தேவன் பைபிள் மூலம் நமக்கு வெளிப்படுத்திய எல்லா காரியங்களிலும் அரைகுறையாக நம்புவதும் நம்பிக்கை இல்லாமல் இருப்பதும் விசுவாசித்த தேவ செயல்களின் படி வாழாமல், வாயால் மட்டும் அறிக்கையிடுகிற விசுவாசமே அவிசுவாசமாகும். இப்படிப்பட்ட கிரியையில்லாத விசுவாசம் செத்ததாகிவிடும். இப்படிப்பட்டவர்கள் நீதிமான்களாகவும் முடியாது. நியாயப்பிரமாணத்தின்படி செய்பவர்களே நீதிமான்கள் ஆக்கப்படுவார்கள். *ரோமர்.2:13*ல் காணலாம். எனவே முழு விசுவாசமாய் இருங்கள்.

*வெளி.3:15-16*ன் படி குளிருமின்றி, அனலுமின்றி வெது வெதுப்பாய் இருந்தால் தேவன் இப்படிப்பட்டவர்களை வாந்தி பண்ணிப்போடுவார். *வெளி.21:8*ல் சொல்லப்பட்ட படி அவிசுவாசிகளை நியாயத்தீர்ப்பு நாளில் இரண்டாம் மரணமாகிய, அக்கினிக் கடலில் தள்ளி விடுவார். எனவே அரைகுறை விசுவாசம் கூடாது. *எபிரேயர்.11* ஆம் அதிகாரம் முழுவதையும் படித்துப் பாருங்கள். விசுவாசம் பற்றி போடப்பட்டு இருக்கும். எனவே நமக்கு *யோவேல்.3:16,மத்தேயு.28:20*ல் **வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வசனங்ளை மட்டும் மனப்பாடம் பண்ணுங்கள்.** அப்போது தான் நீங்கள் தேவன் மேல் நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் வாழ முடியும். பூமியில் நமக்கு வரும் ஆபத்தை கண்டு பயப்பட வேண்டாம். ஏற்ற நேரத்தில் இவ்வசனங்களை சொல்லி ஜெபியுங்கள். உதாராணமாக நானும் உங்களைப் போன்று ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக சில நெருக்கடிகள், நோய்கள், பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்தும் மற்ற உலககாரியங்களை குறித்தும், ஒரு சில சமயங்களில் பயப்படுவேன். ஆனால் சபையில் சொல்லப்பட்ட பிரசங்கத்தில் நீங்கள் பயப்படவேண்டாம் என்ற செய்தி என்னை சிந்திக்க வைத்தது. அப்போது ஆவியானவர் என்னுடன் இடைப்பட்டு ஒரு சிறிய கதை மூலம் என் பயத்தை நீக்கினார்.

அது என்னவெனில், ஒரு வீட்டில் தாய், தகப்பன் தன் குழந்தையுடன் இரவில் தூங்குகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது தீடீர் என்று வீடு தீ பிடித்து விட்டது என்றால் குழந்தையை விட்டு விட்டு தாயும், தகப்பனும் வெளியே ஓடி விடுவார்களா? அப்படி செய்யமாட்டார்கள் அல்லவா? எதிர்பாராத விதத்தில் தீ பற்றி எரியும் போது உலகத்திற்குரிய தகப்பன் தன் குழந்தையை காப்பாற்றுகிறார் என்றால், உலகத்திற்கு இந்த அழிவு வரும் என்று முன்கூட்டியே சொன்ன நம் பரம தகப்பன் இந்த உலக அழிவில் இருந்து, அவரையே நம்பி இருக்கும் நம்மை காப்பாற்றுவார் என்பது நிச்சயம் அல்லவா என்று விளக்கினார். அந்நாள் முதல் பயத்தின் ஆவி என்னை விட்டு முற்றிலும் நீங்கியது. அதுபோல் நீங்களும் பயப்படாமல் விசுவாசமாய் வாழவேண்டும். சமீபத்தில் 14-2-2012 தினத்தந்தியில் வந்த செய்தி தகவலை இத்துடன் இணைத்துள்ளேன், எதற்கென்றால், உங்கள் விசுவாசம் கடவுள் மேல் இன்னும் உறுதியாய் இருக்கவேண்டும். செய்தியை படியுங்கள். பள்ளியில் 9ஆம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவன், தன் ஆசிரியையை கொலை செய்துவிட்டான் என்ற செய்தி நம் அனைவருக்கும் தெரிந்த விஷயம். அந்த ஆசிரியை

**நலனுக்காகவே ஆசிரியர்கள் கண்டிக்கிறார்கள்**

என் அம்மாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு வந்துள்ள அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். என் தாய் எங்களை விட்டு பிரிந்தது மிகவும் கஷ்டமாக உள்ளது. பெரியவர்கள் அமர்ந்துள்ள இந்த கூட்டத்தில் பேசும் தகுதி எனக்கு இல்லை. இருந்தாலும் 3 விஷயங்களை இங்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒன்று, இறப்பு என்பது எல்லோருக்கும் வருவது. கடவுளுக்காக இறக்க நாம் அனைவரும் தயாராக இருக்கவேண்டும். அடுத்து மாணவர்களாகிய உங்களை ஆசிரியர்கள் திட்டினாலும், ஏன் அடித்தாலும் கூட கோபப்படக்கூடாது. மாணவர்களின் நலனுக்காகவே ஆசிரியர்கள் கண்டிக்கவும், அடிக்கவும் செய்கிறார்கள் என்பதை மாணவர்கள் உணரவேண்டும்

உமாமகேஸ்வரியின் மகள் சங்கீதா, தன் தாயின் அஞ்சலி கூட்டத்தில் பேசிய பகுதியில் இறப்பு என்பது எல்லோருக்கும் வருவது, ஆனால் **கடவுளுக்காக இறக்க நாம் அனைவரும் தயாராக இருக்கவேண்டும்** என்ற வார்த்தையை படித்தவுடன் என் உள்ளமே உடைந்தது, ஏனென்றால் தாயை இழந்த வயது வந்த பெண் பிள்ளையால், எப்படி இந்த நிலையிலும் கடவுளை நினைக்க முடிந்தது. அதுவும் உயிரையும் கொடுக்க தயாராகவேண்டும் என்ற வார்த்தை என்னைத் தொட்டது. இப்பகுதியை விசுவாசப் பிள்ளைகளே படித்து சிந்தித்துப் பாருங்கள். இதேபோல் முத்திரைக் காலத்தில், கடவுள் பிள்ளையாகிய நாம், கடவுளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கடவுளுக்காக உயிரையும் கொடுக்க தயாராக இருக்கவேண்டும். **குறிப்பாய் முத்திரைக் காலத்தில் பயோ சிப்பை பதித்துக் கொள்ளக் கூடாது. இது தேவனுடைய கட்டளை என்பதில் விசுவாசமாயிருந்து** கடைசிவரை தேவ பிள்ளைகளாய் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் வாழ தேவன் கிருபை தருவாராக.

## 8) உலக முடிவும் - அடையாளங்களும்

பூமியில் இரகசிய வருகையின் போது அவருடைய பிள்ளைகள் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, 7 வருடம் 70 நாட்கள் தான் இந்த பூமி (உலகம்) இருக்கும். 2625 நாட்கள் இருக்கும். ஆதார வசனம் *தானியேல். 12:11-12*. இவ்வசனங்களில் 1290 நாள் என்றும் 1335 நாள் காத்திருக்கிறவன் பாக்கியவான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு நாட்களையும் கூட்டி ஒரு வருடத்தின் நாட்களாகிய 365 நாட்களால் வகுத்தால் 7 வருடம் 70 நாளாகும். இந்த 7 ஆண்டில் மூன்றரை வருடம் பஞ்சம், **பிறகு 3 வருடம் 6 மாதம் மகாபஞ்சமாக இருக்கும்.** இதையெல்லாம் கடந்து கடவுள் கட்டளைகளையும் கடைப்பிடிக்கிறவர்கள் தான் பாக்கியவான். எனவே அவருடைய வருகையில் ஒரு வேளை கைவிடப்பட்ட நிலையில் இருப்பீர்களானால், தவித்துக் கொண்டே நாட்களை வீணாக்க வேண்டாம். எந்த நாட்களில் இரகசிய வருகை நடந்தது என்பதை குறித்து வைத்துக் கொள்ளவும். எப்படி அந்த நாளை அறிய முடியுமென்று நினைக்க வேண்டாம். அந்த

நாளில் உலக முழுவதிலும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள் மட்டும், *மத்.24:31, மத். 24:40–41* ன் படி இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அந்நாளில் மின்சாரம் உலகமெங்கும் தடைப்பட்டிருக்கும். போக்குவரத்து சாலைகளில் அதிகமாக விபத்துக்கள் நடக்கும். ஏனென்றால் அவர் வருகையின் போது தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள் வாகனத்தில் (அ) ஆகாய விமானத்தில் (அ) மற்ற வாகனங்களில் சென்று கொண்டிருப்பார்களானால் பிதாவின் சித்தப்படி எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அதனால் அநேக விபத்துக்கள் உலகம் முழுவதும் நடக்கும். செயற்கைகோள்கள் அவர் வருகையின் போது பழுதாகிவிடும். எனவே தொலைபேசி தொடர்புகள் துண்டிக்கப்படும். இது போன்ற அநேக உபத்திரவங்கள் அவர் வருகை நாளில் ஒன்று சேர்ந்து நடப்பதால் இயேசுவானர் வந்துவிட்டார் என்று உலகத்தில் உள்ள அனைவராலும் அறிந்து கொள்ளமுடியும்.

எனவே கைவிடப்பட்ட பிள்ளைகளே, நீங்கள் அந்த குறிப்பிட்ட நாளை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். *தானியேல்.8:13–14*ல் *"பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக் கேட்டேன், அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவரை நோக்கி, அன்றாட பலியைக் குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைதைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான். அவன் என்னை நோக்கி, இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும் வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்."* இந்த வசனத்தின்படி 2300 நாட்கள் வரை பரிசுத்த ஆவியானவர் இந்த பூமியில் உலாவி, கைவிடப்பட்ட பிள்ளைகள் இன்னும் எந்தெந்த கட்டளைக்கு கீழ்படியவேண்டும் என்பதை அவர்களுக்கு ஆலோசனை கொடுப்பார். இதை *ஏசாயா.4:2*ல் *"இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு அந்நாளிலே கர்த்தரின் கிளை அலங்காரமும், மகிமையுமாயிருக்கும். பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும்"* என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் *சகரியா.8:11–12* லும் இதனைக் காணலாம். குறிப்பாக 12ம் வசனத்தில் *"இதில் மீதியான ஜனத்திற்கு விதைப்பு சமாதானமாய் பூமி தன் பலனை தரும். அதை மீதியானவர்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள்"* என்று சொல்லப்பட்டுள்ளது. *ஆமோஸ்.8:11*லும் ஆகாரத்திற்கும், தண்ணீருக்கும் பஞ்சமில்லை. வேத வசனத்திற்குதான் பஞ்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி வேத வசனத்திற்கு பஞ்சமிருக்கும் போது, யார் நமக்கு முழுமையான சத்தியத்தை அறிவிப்பார்கள். நம் நிலை என்னவாகும் என்று கவலைப்படவேண்டாம். **கைவிடப்பட்ட நிலையில் உள்ள தேவ பிள்ளைகளே, உங்களுக்காக ஆவியானவர் எழுதச் சொன்ன ஆலோசனையை எழுதுகிறேன்.** நீங்கள் 666 முத்திரை தரித்திருக்கக் கூடாது. இப்படிப்பட்ட தேவபிள்ளைகளே, நீங்களிருக்கும் ஊர், தெரு, சபையில் உள்ள தேவனால் எடுத்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் குடும்பங்கள் உறவினர்களைப்

போய் சந்தியுங்கள். அப்போது எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் எப்படி தேவனுக்காக வைராக்கியமாய் வாழ்ந்தார்கள், எப்படி ஜெயித்தார்கள் என்னென்ன கட்டளைகளை கடைபிடித்து வாழ்ந்து வந்தார்கள் என்பதை கேட்டு எழுதி வைத்து கொள்ளுங்கள். இப்படியாக இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களின் அநேகருடைய தகவல்களை ஒரு பட்டியல் எடுத்து ஒன்று சேகரித்தீர்கள் என்றால் உண்மையான சத்தியம், கட்டளை எது என்பது விளங்கும். இப்படி செய்வது மிக மிக சாலச் சிறந்ததாகும். தேவனும் இதை விரும்புவார். தாகத்தோடு அலைந்து திரிவதைக் கண்டு உங்களுக்கு மனமிரங்கி உதவி செய்வார். எப்படியெனில் உடல்நிலை சரியில்லாத ஆபத்தான சூழ்நிலையில் இருக்கும் தன் பிள்ளைகளை பெற்றோர்கள் மிகவும் கவனமாய் பார்த்துக் கொள்வார்கள். அதுபோல தான் கைவிடப்பட்ட பிள்ளைகள் மேல் நம் பரம தகப்பனும் கவனமாய் இருப்பார். ஆனால் நீங்கள் தான் அந்நாட்களில் *எபேசியர்.5:16*ல் சொல்லப்பட்டபடி கவனமாய் இருக்கவேண்டும். அந்நாட்கள் பொல்லாங்கானதாய் இருக்கிறபடியாலும் குறுகிய நாட்களாய் இருப்பதாலும் இருக்கப் போகும் கொஞ்ச காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். 2300 நாட்களுக்கு பிறகு பரிசுத்த ஆவியானவர் மேலே எடுக்கப்பட்டு, கிருபையின் காலம் முடிவடைந்த பிறகு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும். ஆதார வசனம் *தானியேல்.8:13–17* வரை. எனவே எந்தெந்த கட்டளைகளுக்கு கீழ்படியாமல் வாழ்ந்தீர்களோ அவற்றுக்கு உடனே கீழ்படிந்து வாழுங்கள். ஆலயம் சென்று தேவனை ஆராதியுங்கள். இரகசிய வருகைக்கு பிறகு 7 வருடம் 70 நாட்களில் பரலோகத்திலுள்ள பிதாவின் கோபம் அதிகமாகி, *வெளி.8, 9, 16*ஆம் அதிகாரத்தில் உள்ளபடி, எல்லா உபத்திரவங்களும் இந்த பூமியில் நடந்தேறும். குறிப்பாய் இடிமுழக்க சத்தங்கள், மின்னல்கள், பூமி அதிர்ச்சிகள் மிகவும் அதிகமாக அந்நாட்களில் இருக்கும். அப்படி நடக்கும்போது இரகசிய வருகைக்கு முன்பு நடந்த உபத்திரவங்கள் இணைந்து, இந்த பூமியில் உள்ள மக்களுக்கு வேதனைகள் கூடும். இந்த வேதனைகள் கீழே காண்போம்:–

7 தூதர்கள் 7 எக்காளங்களை ஊதுவார்கள். அப்போது இந்த பூமியில் மரங்களில் 3ல் 1 பங்கு வெந்து போகும். பசும்புல் எல்லாம் எரிந்து போகும். சமுத்திரத்தில் 3ல் 1 பங்கு இரத்தமாகும். கடலில் வாழும் மீன் வகைகளில் 3ல் 1பங்கு இறந்து போகும். கப்பல்களில் 3ல் 1 பங்கு சேதமாகும். வானத்தில் இருந்து எட்டி என்ற பெயர் கொண்ட ஒரு பெரிய நட்சத்திரம் நீருற்றுகளாகிய ஆறுகளில் விழுந்து கசப்பாகும். கசப்பான தண்ணீரைக் குடிக்கும் மனிதரில் அநேகர் மரிப்பார்கள். பிறகு சூரிய சந்திர நட்சத்திரங்களில் 3ல் 1 பங்கு சேதப்பட்டு இருள் அடையும். பகலில் வெளிச்சமும், இரவில் இருளும் இல்லாமல் இருக்கும். அநேக இடங்களில் பகல் நேரம் இரவு நேரத்தைப் போலும், இரவு நேரம் இரவாக இல்லாமல் பகல் நேரத்தைப் போலும் இருக்கும். இப்படியாக காலச் சூழ்நிலைகள் மாறும்.

கடைசி நாட்களில் தேவ சித்தப்படி வாழாமல், மனம் மாறாமலும்

இருக்கும் அனைத்து மக்கள் மேலும் பரிசுத்த ஆவியானவராகிய தேவ முத்திரை இருக்காது. தேவ முத்திரை இல்லாத பிள்ளைகளுக்கு கீழ்கண்ட வசனத்தின்படி உபத்திரவங்கள் நேரும். இதனை *வெளி.9:4–5* ல் *"பூமியின் புல்லையும், பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல் தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையை தரித்திராத மனுஷரை மாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. மேலும் அவர்களைக் கொலை செய்யும்படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல் ஐந்து மாத அளவும் அவர்களை வேதனைப்படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. அவைகள் செய்யும் வேதனை தேளானது மனுஷரைக் கொட்டும் போது உண்டாகும் வேதனையைப் போலிருக்கும்"*, என்று எழுதப்பட்டுள்ளது. இத்தனை உபத்திரவங்கள் நடந்தாலும் அவரைப் பற்றிக் கொண்டு மனம்மாறி வாழ விரும்புகிறவர்களுக்கு உதவி செய்து, அவர்களை ஜெயிக்கவும் வைப்பார். *வெளி.6:2.* இந்த வசனத்தில் சொல்லப்பட்டப்படி ஜெயிக்க விரும்பும் தேவப் பிள்ளைகளே, நீங்கள் பாவத்திலிருந்து விடுதலைப் பெற்று, பரலோக இராஜ்யத்தை சுதந்தரிக்க ஜெயம் கொடுக்கிற தேவன் உங்களுக்கு உதவி செய்வார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

## உலக முடிவின் கடைசி அடையாளம்

இப்படியாக மனம் மாறாத பிள்ளைகளுக்கு உடம்பு முழுவதும் கொடிய புண்கள் உண்டாகும். இதுவே கடைசி அடையாளமாகும். எப்படியெனில் *வெளி.16:8* வரை உள்ள வசனத்தை வாசித்துப் பாருங்கள். 4ஆம் தூதன் செய்த காரியத்தைக் காணலாம். சூரியனுடைய வெப்ப மிகுதி அதிகமானதால் புண்கள் ஏற்படும் என்று எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக 11ஆம் வசனத்தில் *"தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும் பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயில்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனம் திரும்பவில்லை"* என்று கூறப்பட்டுள்ளது. எனவே கடைசி நாட்களில் என்னைத் தொழுது கொள்கிற பிள்ளைகளுக்கும், தொழுது கொள்ளாத பிள்ளைகளுக்கும் ஏற்படும் வித்தியாசத்தைக் காண்பீர்கள் என்று சொல்லப்பட்ட வசனம் நிறைவேறும். இதுவே உலக முடிவின் கடைசி உபத்திரவம் ஆகும்.

தேவ கட்டளைக்கு கீழ்படிந்து வேத வசனத்தை படித்து ஆராய்ந்து பாருங்கள். கைவிடப்பட்ட பிள்ளைகளுக்கு தேவ செய்திகள் கிடைப்பது மிகவும் கடினமாய் இருக்கும். பரிசுத்த ஆவியானவர் இரகசிய வருகைக்கு பிறகு 2300 நாட்கள் வரை இப் பூமியில் இருப்பார். பிறகு *சகரியா. 13:8–9* ல் சொல்லப்பட்டபடி தேசத்தில் உள்ள 2 பங்கு மக்கள் சங்கரிக்கப்பட்டு மாண்டு போவார்கள். (3ஆம் பங்காகிய தேவ பிள்ளைகளை வெள்ளியை உருக்குகிறது போலவும், பொன்னை புடமிடுகிறது போலவும் சோதிப்பார். கைவிடப்பட்ட பிறகு தேவனை இறுகப் பற்றிக் கொண்டு, அவர் சித்தப்படி வாழ்ந்து வருகின்ற பிள்ளைகளே 3ஆம் பங்கு பிள்ளைகளாகும்). எனவே நீங்கள் பயப்படாமலும், கலங்காமலும் கடைசி நாளில் அவருக்காக வாழுங்கள்.

வெளி. 8:7-10 ல் உள்ளபடி கீழே விழ காத்திருக்கும் ஒரு பெரிய (எட்டி என்ற) எரி நட்சத்திரம் தீவட்டியைப் போல் எரிந்து விழும் என்றபடி இதுவே அந் நட்சத்திரமாக இருக்கலாம். அப்பொழுது எரிகற்களும் விழும். இரத்தம் கலந்த கல் மழையும், அக்கினியும் பூமியில் கொட்டும் என்ற வசனத்தின்படி இந்த ஆதாரம் மாலை மலர் 10-6-2009ல் உள்ளது.

விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவல்

# 6 லட்சம் பேர் மீது 'அக்னி மழை'

வானத்தில் இருந்து பூமியில் விழப்போகிறது

பரம்பரை, பரம்பரையாக சேர்த்து வந்த இயற்கையிது இப்போதெல்லாம் [illegible] ஒரு வித பீதி.

இன்றும் எப்போது என்ன நடக்குமோ? என்கிற அச்சம் யாருக்கும் இல்லாமல் இல்லை.

உங்களிடம் சொல்லக் கூடாது என்று ஒரு ரகசியத்தை கட்டிக் காத்து வருகிறார்கள் உலக விஞ்ஞானிகள்.

சொன்னால்... 620 கோடி ஜனங்களின் ஒட்டுமொத்த தூக்கமும் இந்த நிமிஷமே போய் விடும்!

அமெரிக்காவில் உள்ள அரிசோனா பல்கலைக்கழக விண்வெளி விஞ்ஞானி 'லாரன்ஸ் பெர்லிக்' விண்கற்கள், நட்சத்திரங்கள் மற்றும் எரிகற்களை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளில் ஒருவர்.

பல ஆண்டுகளாக வானத்தை இஞ்ச் பை இஞ்சாக படம் பிடித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் இவரது கம்ப்யூட்டர் திரையில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் 'திடீர்' என கங்காரு மாதிரி ஒரு பிரமாண்ட உருவம்?

அதிர்ந்துதான் போனார் லாரன்ஸ் பெர்லிக்.

தலைக்கு ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டு நடுங்கும் கைகளால் 'மவுசை' பிடித்து அந்த ராட்சத உருவத்தை 'பிட் இன் விண்டோ' வுக்கு கொண்டு வந்தார்.

டொக் டொக் என்று கம்ப்யூட்டர் பட்டன்களை தட்டி "யார் நீ?" என்று அடிவயிற்றில் இருந்து மெதுவாக கேட்டார்.

அது ஒரு மிகப்பெரிய சைசிலான எரிநட்சத்திரம் ரொம்பவும் வயதாகி கிழடு தட்டிய நிலையில் இருந்தது.

தனது கம்ப்யூட்டரில் அந்த எரி நட்சத்திரத்தை 'சேவ்' செய்தபடியே உலக விஞ்ஞானிகளுக்கு தனது புதிய கண்டுபிடிப்பை சொன்னார்.

விஞ்ஞானிகள் வட்டாரம் பரபரப்படைந்தது.

டெலஸ்கோப்பு கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகள் தமது இருட்டுக் கூடத்துக்குள் நுழைந்து அந்த எரி நட்சத்திரத்தை அலசி ஆராய ஆரம்பித்தார்கள்.

இவர்களில் நியூ மெக்சிகோவில் உள்ள லாஸ் அலமாஸ் தேசிய லேபாரட்டரியை சேர்ந்த ஜேக் ஹில்ஸ் என்பவர்தான் அது ஒரு 'சைக்கோதக கல்' என்பதை போட்டுடைத்தார்.

நமது தலைக்கு மேல் ஆயிரக்கணக்கில் சுற்றிக் கொண்டிருக்கும் இத்தகைய எரிகற்கள் ஒரு நாள் கால் தடுக்கி பூமியை பார்த்து கீழே விழும் என்கிறார் அவர்.

இத்தகைய எரி கற்கள் வானத்தில் இருந்து மணிக்கு 50 ஆயிரம் கி.மீ. வேகத்தில் 7 லட்சம் மெகா டன் சக்தியுடன் நமது தலை மீது விழப்போகிறது என்று கண்டு பிடித்திருக்கிறார் அவர்.

இத்தகைய அக்னி மழை எப்போது பெய்ய போகிறது? நியூயார்க்கிலா? அல்லது சென்னையிலா? தெரியவில்லை.

வானவெளியில் லட்சக் கணக்கில் எரிகற்களும், நட்சத்திரங்களும் சுற்றிக் கொண்டு தான் இருக்கின்றன. அவை எரிந்து கீழே விழும் பட்சத்தில் பூமியை தொடுவதில்லை.

ஆகவே அச்சம் அவசியமில்லை என்கின்றனர் சில விஞ்ஞானிகள்.

ஒரு வேளை அப்படியும் இருக்கலாம்! கடந்த 1976-ம் ஆண்டுகள் ஒரு நாள் திடீரென இதுபோல எரிகற்கள் மழையாகச் சிதறி பூமியில் விழுந்தன. இதனை அமெரிக்காவில் உள்ள [illegible] கோபட் கோளரங்கம் படம் பிடித்து பார்த்தது. இதில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

பொதுவாக [illegible] அல்லது சிறிய [illegible] சைசில் இருக்கும் இத்தகைய எரிகற்கள் மணிக்கு 70 கி.மீ. வேகம் முதல் 25 ஆயிரம் கி.மீ. வேகம் வரை பூமியை நோக்கிப் பாயும்.

ஒரு மணி நேரத்தில் 200 முதல் 6 ஆயிரம் வரையிலான எண்ணிக்கையில் அவை பூமி மீது விழும்.

இந்த எரிகற்கள் புவி ஈர்ப்பு பகுதிக்குள் நுழையும் போது தீப்பிடித்து எரிந்து சாம்பலாகி விடும் என்பதை எல்லாம் நாம் மறுப்பதற்கில்லை.

ஆனால், லாரன்ஸ் பெர்லிக் கண்டுபிடித்திருப்பது அதுவல்ல? [illegible] அப்படித்தான் இது இருக்கும் என்கிறார் அவர். இத்தகைய எரிகற்கள் ரொம்ப பெரியவை. ரொம்ப நாட்களாக வானில் சுற்றி வயதாகி விட்ட நிலையில் பூமி மீது பாயக் காத்திருக்கிறது என்கிறார் அவர்.

இதில் விசேஷம்? உலக நாடுகள் கோடிக்கணக்கில் பணச் செலவு செய்து, நீண்ட கால ஆராய்ச்சி நடத்த சுமார் 500 செயற்கைகோள்கள் வான மண்டலத்தில்தான் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் சில பூமியிலிருந்து 1 ஆயிரம் கி.மீ. உயரத்தில் உள்ளன.

ஒரு வேளை அக்னி எரிமழை பெய்யும் போது இவைகளும் சாம்பலாகி பூமியை ஒரு கை பார்க்கலாம்.

— [illegible] எதிர்கொள்ள தயாராகி விட்டார்கள் விஞ்ஞானிகள்.

எதிர்பாராத விதமாக அப்படியொரு சம்பவம் நடக்குமானால் என்ன செய்வது? என்று அவர்கள் தலையை பிய்த்து கொண்டிருக்கிறார்கள்.

நமது சாதாரண தலைக்கு தெரிந்த ஒரே யோசனை! ஏதாவது 'ஹெல்மெட்' வாங்கி அன்றைய தினம் அணிந்து கொள்வதை என்பதுதான்!

"செப்பனியா.3:8 பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியால் அழியும்".

*தினத்தந்தி 6–12–2009*

ஆபத்து என்றால், அப்படிப்பட்டது, இப்படிப்பட்டது என்று கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத மிகப் பெரிய ஆபத்து காத்து இருக்கிறது.

இப்போதைக்கு நமது தலைமுறை தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் நமது வருங்கால தலைமுறையின் எதிர்காலம் மிகப்பெரிய கேள்விக் குறியாக வாசலில் கொண்டு இருக்கிறது.

இதற்கு காரணம், பூமி வெப்பம் ஆகிக்கொண்டு இருப்பதுதான்.

அதாவது ஆங்கிலத்தில் "குளோபல் வார்மிங்" எனப்படும் இந்த விவகாரம் பூமியையே அச்சுறுத்திக்கொண்டு இருப்பதோடு நாளை டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடைபெற இருக்கும் மாநாட்டில், இந்தியாவின் குரல்வளையை நெரிக்க வளர்ந்த நாடுகள் தோள் தட்டிக் கொண்டு இருப்பதால் இதைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது.

எதிர்காலத்தில் இயற்கையைப் புரட்டிப் போட்டு, நமக்கு நாமே ஆழமான சவக்குழியை தோண்டிக்கொள்வதற்கு காரணமாக இருக்கும் புவி வெப்பமடைதல் என்றால் என்ன என்பதை பார்க்கலாம்.

பூமியில் வசிக்கும் மனிதன் உள்பட அனைத்து உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும் சூரிய வெப்பம் அவசியம். ஆனால் அது அளவோடு இருக்கவேண்டும்.

சூரிய கதிர்களால் பூமியின் பரப்பளவு வெப்பம் அடைகிறது. அந்த சூடு தணிந்து நாம் வாழ்வதற்கு தேவையான வெப்பம் மட்டுமே பூமியில் இருக்கும் வகையில் பார்த்துக்கொள்வதற்காக இயற்கை நமக்கு கொடுத்து இருக்கும் வரப்பிரசாதம் தான், பூமியின் மேல் மட்டத்தில் காணப்படும் வெளிமண்டலம்-அதாவது காற்றுமண்டலம்.

பூமியை தாக்கும் வெப்பக்கதிர்கள் பூமியில் அப்படியே தங்கிவிடாமல், அதில் ஒரு பகுதி பூமியின் மேற்பரப்பால் வானமண்டலத்துக்கு திருப்பிவிடப்படுகின்றன. இதனால், பூமியில் நமக்கு தேவையான வெப்பம் மட்டும் இருக்கும். இத்தகைய அற்புதமான பணியை செய்யும் அந்தப் பகுதியை "பசுமைக்குடில்" என்று அழைக்கிறார்கள்.

இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை என்னவென்றால், பூமி திருப்பிவிடும் வெப்பம், வானமண்டலத்துக்கு செல்லாமல் மீண்டும் பூமிக்கே திரும்பி வருவது தான்.

இதன் விளைவுகள்.

★ இமயமலை போன்ற உயரமான மலைகள் மீது இருக்கும் பனிப்பாறைகளும், துருவ பிரதேசத்தில் காணப்படும் பனிப்பாறைகளும் உருகத் தொடங்கும். இதனால் அவற்றின் தண்ணீர் கடலில் கலந்து கடல் நீர் மட்டம் உயரும்.

★ பூமியின் மேற்பரப்பும் கடலின் மேல் மட்டமும் அதிக வெப்பம் அடைவதால, குளங்களின் தண்ணீர் ஆவியாகி வானவெளிக்கு சென்றுவிடும். இதனால் பல பகுதிகள் பாலைவனம் ஆகிவிடும்.

★ அதே சமயம், வானவெளியில் சேரும் அதிக அளவு நீராவி, மேகக்கூட்டங்களாக மாறி, ஏதோ ஓரிடத்தில் எதிர்பாராத மழையாக கொட்டித் தீர்த்து வெள்ள ஆபத்தை உருவாக்கிவிடும்.

★ அதாவது, மழை வரும் என்று எதிர்பார்த்து இருக்கும் இடங்களில் வறட்சி- மழை இருக்காது என்று நினைத்துக்கொண்டு இருந்த இடங்களில் வெள்ளம் என்று, வானிலையை கணிக்க முடியாத சூழ்நிலை உருவாகி விவசாயத்தை நாசப்படுத்திவிடும்.

★ இந்தியாவைப் பொறுத்த அளவில் இதனால் இன்னும் 15 ஆண்டுகளில் விவசாய உற்பத்தி 30 சதவீதம் குறைந்துவிடும்.

★ மாலத்தீவு போன்ற சிறிய தீவுகள், கடலுக்குள் சங்கமம் ஆகிவிடும். மற்ற நாடுகளிலும் கடலோர நகரங்கள் காணாமல் போய்விடும்.

★ கோடை காலத்தில் வெப்பம் அதிகமாகி வறுத்தெடுக்கும்; குளிர்காலத்தில் மழையும் குளிரும் மிக அதிகமாகி நடுநடுங்க வைத்துவிடும்.

★ மொத்தத்தில் மனித இனம் அழிவுக்கு வெகுவிரைவில் நாள் குறிக்கப்படும்.

இத்தகைய பேராபத்துக்கு காரணமாக இருக்கும் வாயுக்களைத்தான் "பசுமைக்குடில் வாயுக்கள்" என்கிறார்கள்.

பெரும்பாலும் தொழிற்சாலைகளால் உருவாக்கப்படும் கரியமில வாயு, மற்றும் மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, குளிர்சாதன வசதிகள் வெளிப்படுத்தும் "குளோரோ புளோரோ கார்பன்" போன்ற 12-க்கும் மேற்பட்ட நச்சு வாயுக்கள், "பசுமைக்குடில்" வாயுக்கள் எனப்படுகின்றன.

தொழில் புரட்சி காரணமாக இந்த வாயுக்களின் உற்பத்தி அதிகமாகி அவை பூமியின் காற்றுமண்டலத்தில் அமர்ந்து, பூமியின் வெப்பத்தை அதிகரித்துக்கொண்டு இருக்கின்றன.

மனிதனின் முன்னேற்ற வாழ்க்கைக்கு தொழில் புரட்சி தேவை. ஆனால், அதேசமயம் பசுமைக்குடில் வாயுக்களின் உற்பத்தி அதிகமாகாமல் தடுக்க என்ன செய்யலாம் என்பது இப்போது உள்ள முக்கியமான கேள்வி.

அன்றாடம் நாம் பயன்படுத்தும் குண்டு பல்ப் அதிக வெப்பத்தை ஏற்படுத்துவதால் அதற்கு மாற்றாக புளோரசென்ட் விளக்குகள் பயன்படுத்தலாம் என்கிறார்கள்.

பஸ், கார் போன்ற வாகனங்களில் கரியமில வாயுவை அதிகம் வெளியேற்றாத தியால் பயன்படுத்தலாம் என்கிறார்கள்.

வாகன போக்குவரத்தையே குறைத்து, மெட்ரோ ரெயில் போன்றவற்றை அதிகம் பயன்படுத்தலாம் என்கிறார்கள்.

இப்படி பல வித யோசனைகள் வைக்கப்படுகின்றன என்றாலும், ஒவ்வொரு நாடும் இதை எவ்வாறு பின் பற்றுவது என்பதில் உலக நாடுகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருக்கிறது.

ஏனென்றால் இந்த யோசனைகளை அமல்படுத்தும்போது, தொழில் வளர்ச்சி பாதிப்பதோடு மேலும் பல சிரமங்களையும் சந்திக்க வேண்டி இருக்கும்.

பசுமைக்குடில் வாயுக்கள் குறைப்பு என்பதை அமல்படுத்துவதில், ஏராளமான தொழிற்சாலைகள் கொண்ட அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளுக்கும்- இப்போது தான் அதிக தொழிற்சாலைகளை தொடங்கி வளர்ந்துகொண்டு இருக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கும் ஒரே அளவுகோலா என்ற வினாகுறிக்கு விடைகாண, நாளை கோபன்ஹேகன் நகரில் சர்வதேச மாநாடு நடைபெற இருக்கிறது.

இதில் இந்தியா போன்ற நாடுகள், வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் தனித்தனி கொள்கையை ஏற்படுத்த வேண்டும் என்கிறார்கள்.

ஏற்கனவே நடைபெற்ற சுற்றுச்சூழல் மாநாட்டில் உருவான கியோட்டோ ஒப்பந்தத்தையே இன்னும் நிறைவேற்றாத அமெரிக்கா போன்ற நாடுகள், இந்தியாவின் கோரிக்கைக்கு செவிசாய்த்து, மனித குல அழிவு தேதியை ஒத்திவைக்க உதவுமா அல்லது நமது எதிர்கால சந்ததிகளுக்கு நாம் இப்போதே கல்லறையை தயார் படுத்துவதா என்பதற்கு கோபன் ஹேகன் மாநாட்டில் விடை காணலாம்.

இவ்வசனத்தில் சொல்லப்பட்டபடி உங்களை அவர் ஜனமென்று ஏற்றுக் கொண்டு, இரகசிய வருகையில் ஒரு பங்கு மக்களை முதலில் எடுத்துக் கொண்டார் அல்லவா? அதுபோல உலக அழிவிற்கு முன்பாக உங்களை எடுத்துக் கொள்வார். எப்படியெனில் *ஏசாயா11:12, 1தெச.4:15-17* வரை கூறியுள்ளதை வாசியுங்கள். *"கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்"* என்று எழுதப்பட்டுள்ளது.

அதன் பிறகே பூமி முழுவதும் கீழ்கண்ட வசனத்தின்படி அக்கினியால் அழியும் என்பதை *ஏசாயா.24:19-22, 2 பேதுரு.3:10-11, செப்பனியா.3:8* லும் வாசிக்கலாம். பூமியின் மேல் விழுகிற அக்கினியானது எப்படி இருக்கும் என்பதை *யோவேல்.2:3* ல் இருந்து 12ஆம் வசனம் வரை படித்துப் பாருங்கள். அந்த அக்கினி ஜுவாலையின் இரைச்சல் ஒடுகிற இரதங்களின் இரைச்சல் போலவும் குதிரையின் சாயலுக்கு ஒத்தது என்றும் சொல்லப்பட்டு இருக்கின்றது. கடைசி நாளில் யாகத்தை ஆயத்தம் பண்ணுவேன் என்றும் சொல்கிறார். தேவனுடைய நாள் சமீபம் என்பதற்கு 10-6-2009 மாலை மலர் பேப்பரில் அக்கினி மழை பொழியப் போகிறது என்றும், எரி நட்சத்திரம் பூமியை நோக்கி விழ காத்துக் கொண்டிருக்கிறது என்ற செய்தி வெளிவந்துள்ளது. அந்த நட்சத்திரம் விழும் போது செயற்கைகோள்கள் அனைத்தும் பழுதாகி பூமியின் மேல் விழும். மனிதர்கள் வெப்பம் தாங்காமல் ஓடுவார்கள். பிறகு மனிதர்களின் நிலை என்னவாகும் என்பதை இணைத்துள்ள செய்தித் தாளில் படித்து தெரிந்து கொள்ளுங்கள். மேலும் இந்த ஆதாரம் வேதத்தில் எந்த பகுதியில் உள்ளது என்பதை இணைப்பின் மேல் பகுதியில் அச்சிடப்பட்டுள்ளது. அந்த எரி நட்சத்திரம் நீரூற்றுகளில் விழும். நீங்கள் ஒரு வேளை அந்த தண்ணீரைக் குடித்தாலும் மாராவின் தண்ணீரை மதுரமாக்கிய தேவன் இந்த தண்ணீர் மூலம் தேவ பிள்ளைகளுக்கு ஆபத்து வராமல் பாதுகாத்துக் கொள்வார். *செப்பனியா.1:7ல் "கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள், கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது. கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம் பண்ணி அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்"* என்று கூறப்பட்டுள்ளது. அந்த விருந்தாளிகள் யார் என்று *செப்பனியா.1* ஆம் அதிகாரத்தை முழுவதும் படித்து பாருங்கள். அப்படிபட்டவர்களையும் *வெளி.19:20ல்* உள்ளவர்களும் அந்த விருந்தாளிக்கு உரியவர்கள் ஆவார்கள். எனவே உலகம் அக்கினியால் அழிவதற்கு ஆயத்தமாய் இருக்கிறது என்பதை.

தினத்தந்தி 6–12–2009ல் வந்த ஆதாரத்தையும் இணைத்துள்ளேன். பூமி வெப்பமயமாகிக் கொண்டே வருகிறது. இனி ஒரு தலைமுறையை நாம் பார்க்க முடியாது என்று இச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் உலக முடிவின் அடையாளங்களை கண்டு கொண்டிருப்பீர்கள் என்று இயேசுவின் நாமத்தில் நம்புகிறேன். எனவே உலக முடிவிற்கு முன்பாக கட்டளைகளைகள் அடங்கிய, நியாயப் பிரமாணங்களை கடைப்பிடித்து எச்சரிக்கையுடன் வாழுங்கள். *பிரசங்கி. 12:13ல் "காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளை கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே"* என்று கூறப்பட்டுள்ளது. எனவே நாம் அநேக ஊழியங்களை செய்தாலும் நாம் வழி நடத்தும் பிள்ளைகள் கட்டளைகளை கைக் கொண்டு வாழ்கிறார்களா என்பதில் மிகவும் கவனமாய் இருங்கள். இதை *மத்தேயு.24:44–46* வரை உள்ள வசனம் நம்மை எச்சரிக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## *9) அந்திகிறிஸ்துவின் ஆட்சி*

பிள்ளைகளே, பரலோகத்தை சுதந்தரிக்க விரும்புகிறீர்களா ?

உலகம் முழுவதும் இன்னும் ஒரு சில ஆண்டுகளிலேயே நம் நெற்றியிலாவது, வலது கையிலாவது சிப் ஒன்று உலக மக்கள் அனைவருக்கும் பதிய வைக்கப் போகிறார்கள். அதற்கான தீவிர நடவடிக்கைகளை அரசாங்கம் 2009ம் ஆண்டிலிருந்தே செயல்படுத்தி வருகிறது. இதற்கு அடையாளமாக பல நாடுகளில், நம் நாட்டிலும் ஒவ்வொரு மனிதனின் முகம், கண்ணின் கருவிழி, பத்துவிரல் ரேகைகள், நம் போட்டோ போன்ற ஆதாரங்களை சேகரித்து கணினியில் பதிய, ஏற்பாடுகள் நடக்கிறது.

இது எதற்கு என்றால் ஒவ்வொரு மனிதனுக்கும் 18 இலக்க எண் கொடுப்பதற்குதான். இதற்குண்டான ஆதாரத்தை இணைத்துள்ளேன். இதற்கு ஆதாரமாக 16 இலக்க எண் ஒரு மனிதனுக்கு கொடுக்க ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. இந்த 16 இலக்க எண் 18 இலக்க எண்ணாக மாற்றப்படலாம். எப்படியெனில் பி.எஸ்.என்.எல். தொலைத் தொடர்பு நிறுவனத்தில் வீட்டில் உபயோகிக்கும் தொலைபேசிக்கு முதலில் 6 இலக்க எண் கொடுத்திருந்தார்கள். இப்போது 7 இலக்க எண்ணாக மாற்றியிருக்கிறார்களே அது போல மாறும். (ஆதாரம் 17–10–2009ஆம் ஆண்டு தினத்தந்தி பேப்பர் கட்டிங்) இந்த 18 இலக்க எண்ணை தான் மூன்று பிரிவாக பிரித்து (3x6) 666 என்று சொல்லப்படுகிறது. இந்த எண் தான் மனிதனுடைய இலக்கமாய் இருக்கும் என்றும் அதனுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு *வெளி. 13:18* ல் காணலாம். ஒரு மனிதனுடைய எல்லா தகவல் மற்றும் செயல்களையும் மென்பொருள் மூலம் (பயோசிப்) பதிய ஏற்பாடு செய்யப்படுகிறது. இதை நெற்றியில் அல்லது வலது கையில் அரிசி போன்ற சிறிய வடிவில் வலி இல்லாமல் பதித்து அடையாள எண் கொடுப்பார்கள். இந்த எண் தான் **666.** எனவே அறுநூற்று அறுபத்தாறு என்பது அந்திகிறிஸ்து என்னும் ஒரு மனிதனை

குறிக்கவில்லை. மாறாக பயோ சிப் என்ற முத்திரையையே குறிக்கிறது. இப்படியாக பதிந்த பயோசிப் மூலம் ஒரு மனிதனின் மனதில் உள்ள எல்லா தகவல்களையும் அறிய முடியும். இப்படி முத்திரை பதிந்த இரண்டு நபர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது அவர்கள் மனதில் மறைந்துள்ள எல்லா விஷயங்களையும் வெளிப்படையாக ஒரு தீர்க்கதரிசியை போல பேசிக் கொள்வார்கள். இதை நாம் பார்க்கும்போது நமக்கு ஆச்சரியமாக இருக்கும். ஏனென்றால் நாம் தான் முத்திரையை தரிக்காமல் இருக்கிறோம் அல்லவா. இப்படி ஒரு மனிதனின் உள் நினைவுகளை மனிதன் உடம்பில் பதியப்போகும் மென்பொருளே வெளிப்படுத்துகிறது. எனவே அந்திகிறிஸ்து என்னும் ஒரு மனிதன் பிறக்கத் தேவையில்லை. இனி அந்திகிறிஸ்து என்பவன் யார் என்பதை கீழே காண்போம்.

## அட்டகாசமான ஆராய்ச்சி

உங்கள் மூளைக்குள் ஓடிக்கொண்டிருக்கும் விஷயங்களையெல்லாம் அப்படியே படம் பிடித்து ஒரு சிடியில் போட்டு உங்களிடம் தந்தால் எப்படி இருக்கும்?

கேட்கவே பிரம்ப்பாய் இருக்கிறது இல்லையா?

இந்த ஆராய்ச்சி பல்வேறு வழிகளில் பல்வேறு நாடுகளில் நடந்து கொண்டே இருக்கிறது. இந்த ஆராய்ச்சி நிஜமாகும் நாளில் ஏகப்பட்ட வியப்பூட்டும் விஷயங்கள் நடக்கும் என்பது மட்டும் சர்வ நிச்சயம்.

இரவு தூக்கத்தில் நீங்கள் காணும் கனவுகளை எல்லாம் அப்படியே அழிபடாமல் காலையில் பார்க்கலாம். எதிரே வரும் ஒரு அழகியைப் பார்க்கும் போது உங்கள் மூளை எப்படி எல்லாம் ஆட்டம் போட்டது என்பதைப் படம்பிடித்து காட்டிவிடும். ஒரு குற்றவாளி என்ன நினைக்கிறான் என்பதை வெள்ளித் திரையில் காணலாம்!

எல்லாவற்றுக்கும் மேலாக மருத்துவ உலகின் மாபெரும் பாட்சியை இது நிறைவேற்றலாம். பேசவே முடியாத ஒரு நபர் தனது மனதில் என்ன நினைக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்கலாம். பல ஆண்டுகளாக கோமா நிலையில் இருக்கும் ஒரு நபருடைய சிந்தனைகளை புரிந்து கொள்ளலாம். மருத்துவத்துக்கும், மனித உணர்வுப் பரிமாற்றத்துக்கும் ஒரு புதுப் பரிமாணமே கிடைக்கலாம்.

கலிபோர்னியாவிலுள்ள பார்க்லே பல்கலைக்கழகத்தில் இந்தக் கண்டுபிடிப்பின் வியப்பூட்டும் ஒரு கட்டம் வெற்றிகரமாக எட்டப்பட்டது. மூளையில் செல்லும் ரத்த ஓட்டத்தின் தன்மையைக் கொண்டு சிந்தனைகளைப் படமாக மாற்றியிருக்கிறார்கள்.

இந்தச் சோதனையில் ஈடுபட்டவர் ஹாலிவுட் திரைப்படம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்க, அவருடைய மூளையில் நிகழ்ந்த ரத்த ஓட்ட மாற்றங்கள் கணினியில் தகவல்களாகச் சேமிக்கப்பட்டன. அந்த தகவல்கள் ஒரு மென்பொருள் மூலம் மாற்றப்பட்டது. அது வியப்பூட்டும் படக் காட்சியாக மாறி எல்லோரையும் வியப்பூட்டியிருக்கிறது.

மூளையின் நிகழ்வுகளையும், சிந்தனைகளையும் படமாக்கும் முயற்சியின் முக்கியமான கட்டம் என இதை வர்ணிக்கின்றனர் விஞ்ஞானிகள். 'மக்களுடைய சிந்தனைகளையும், கனவுகளையும் படமாக்கும் முயற்சியில் முக்கியமான ஒரு கதவை இந்த ஆராய்ச்சி திறந்து வைத்திருக்கிறது' என்கிறார் ஆராய்ச்சியில் பங்கு கொண்ட பேராசிரியர் ஜேக் கேலண்ட்.

மூளையிலுள்ள பார்வைப் புறணி (visual cortex) மூலம் இயங்கும் ரத்தமே இந்தப் படங்களை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் பார்ட்டிகள் எதிர்காலத்தில் மூளையும் கலவரமாகப் பிடிபடலாம் ஜாக்கிரதை!

**வெளிப்பாடு. அதிகாரம். 13:18ல் சொல்லப்பட்டபடி மனுஷனுடைய இலக்கம் 666, இதற்கு ஆயத்தமாக 16 இலக்க எண் வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

2011-ம் ஆண்டு 17/10/2009

# மக்கள்தொகை கணக்கெடுப்பின்போது கைரேகையும் பதிவு செய்யப்படும்

## ஒவ்வொருவருக்கும் அடையாள எண் வழங்கும் திட்டத்துக்காக புதிய ஏற்பாடு

புதுடெல்லி, அக்.17-
2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, அனைவரிடமும் 10 விரல் ரேகைகளையும் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 10 விரல் ரேகைகளும் பதிவு செய்யப்படும்

பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள்தொகை கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. அடுத்த மக்கள்தொகை கணக்கெடுப்பு, 2011-ம் ஆண்டு மேற்கொள்ளப்படுகிறது. அப்போது, புதிய ஏற்பாடாக, ஒவ்வொருவரின் 10 விரல் ரேகைகளையும் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தகவலை இந்திய தேசிய அடையாள ஆணையத்தின் தலைவர் நந்தன் நிலேகானி தெரிவித்துள்ளார். இவர் இன்போசிஸ் இணை நிறுவனர் பணியில் இருந்து விலகி, மேற்கண்ட மத்திய அரசுப் பணியில் இணைந்துள்ளார். அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை, அடையாள எண் ஆகியவை வழங்குவதே இந்த ஆணையத்தின் பணி ஆகும்.

...யாள எண் வழங்குகிறார்கள். ஆனால் இந்தியாவில் 120 கோடி பேருக்கு அடையாள எண் வழங்க வேண்டும். எனவே, இது சவாலான பணியாக இருக்கும். இதற்கு ரூ.1½ லட்சம் கோடி செலவாகும் என்று கூறப்படுவது தவறு. ஆனால் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவாகும். இந்த நிதியை யார் அளிப்பது என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

இவ்வாறு நந்தன் நிலேகானி கூறினார்.

### 16 இலக்க எண்

இதுகுறித்து நந்தன் நிலேகானி கூறியதாவது:-

2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, ஒவ்வொரு நபரின் 10 விரல் ரேகைகளும் பதிவு செய்யப்படும். அல்லது அதற்குப் பதிலாக, கண்ணின் கருவிழியை படமாக எடுக்கும் யோசனையும் பரிசீலனையில் உள்ளது.

ஒவ்வொரு குடிமகனுக்கும் அடையாள எண் கொடுக்க மத்திய அரசு திட்டம் வகுத்துள்ளது. இது 16 இலக்கங்கள் கொண்ட எண்ணாக இருக்கும். இந்த திட்டத்துக்காகவே, அனைவரது விரல் ரேகைகளும் பதிவு செய்யப்படுகின்றன. அடையாள எண் வழங்கும் திட்டம், இன்னும் 18 முதல் 24 மாதங்களில் தொடங்கி விடும். அதையடுத்த 4 ஆண்டுகளில் 60 கோடி பேருக்கு அடையாள எண் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

# பொதுமக்களின் முகம், விரல் ரேகை, கண்களின் கருவிழியும் பதிவு செய்யப்படும் 19/5

## மத்திய மந்திரிசபை ஒப்புதல்

புதுடெல்லி, மே.19-
ஒருங்கிணைந்த குறியீட்டு எண் வழங்குவதற்காக, பொதுமக்களின் முகம், விரல் ரேகை, கண்களின் கருவிழி ஆகியவற்றை பதிவு செய்ய மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது.

### மந்திரிசபை குழு

நாடு முழுவதும் உள்ள குடிமக்களுக்கு ஒருங்கிணைந்த குறியீட்டு எண் வழங்குவது குறித்து ஆராய்வதற்காக இன்போசிஸ் முன்னாள் தலைவர் நந்தன் நிலேகனி தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்றை பிரதமர் மன்மோகன்சிங் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நியமித்தார்.

பிரதமரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கும் இந்த குழுவின் பரிந்துரைப்படி, இந்திய ஒருங்கிணைந்த குறியீட்டு ஆணையத்துக்கான மத்திய மந்திரிசபை குழுவும் உருவாக்கப்பட்டது.

### முதல் கூட்டம்

இக்குழுவின் முதல் கூட்டம், டெல்லியில் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடைபெற்றது. சமீபத்தில் தொடங்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது சேகரிக்கப்படும் விவரங்களையும், அரசின் நலத்திட்டங்களுக்காக வழங்கப்படும் அடையாள அட்டைகள், பாஸ்போர்ட், ரேஷன் கார்டுகள் உள்ளிட்டவற்றுக்கு மாற்றாக ஒரே அடையாளத்தை பிரதிபலிக்கும் வகையில் அனைத்து குடிமக்களுக்கும் ஒருங்கிணைந்த குறியீட்டு எண் வழங்குவது குறித்தும் ஆணைய உறுப்பினர்களுடன் பிரதமர் மன்மோகன்சிங் விவாதித்தார்.

இதில், பொதுமக்களின் விவரங்கள் மட்டுமின்றி, அவர்களின் முகம், 10 விரல்களின் ரேகை, கண் கருவிழி பதிவு உள்ளிட்டவைகளை ஒருங்கிணைந்த குறியீட்டு எண் அடையாள அட்டைக்கான பதிவேட்டில் இடம்பெற செய்ய முடிவு செய்யப்பட்டது. இதனை நடைமுறைகளை மேற்கொள்ளவும், மத்திய மந்திரிசபை கொள்கை அளவில் ஒப்புதல் தெரிவித்தது.

### ஆகஸ்டு முதல் கிடைக்கும்

இதுகுறித்து, ஒருங்கிணைந்த குறியீட்டு எண் ஆணையத்தின் தலைவர் நந்தன் நிலேகனி நிருபர்களிடம் கூறியதாவது:-

5 முதல் 15 வயதுடைய குழந்தைகளின் கண் கருவிழி பதிவுகளையும் ஒருங்கிணைந்த அடையாள குறியீட்டில் சேர்க்க மந்திரிசபை முடிவு செய்துள்ளது. முதல் தொகுப்பு அடையாள குறியீடு எண் அட்டைகள், வரும் ஆகஸ்டு முதல் அடுத்த ஆண்டு பிப்ரவரி வரை வழங்கப்படும். அதன் தொடர்ச்சியாக அடுத்த 5 ஆண்டுகளில் 60 கோடி பேருக்கு அட்டைகள் வழங்கப்படும். மத்திய-மாநில அரசுகளிடம் உள்ள பொதுமக்களின் தகவல்களும், அடையாள அட்டைக்கான பதிவில் சேர்க்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

Edited and Published by V. SUNDARESON for Thanthi Trust and printed by K.BALU at the Malar Press of Malar Publications Ltd. 33, Cuddalore Road, Puducherry - 605 001. RNI No: 40986/91.

அந்தி கிறிஸ்து யார் என்பதை வசனத்தின்படி நாம் பார்க்க வேண்டும். 1யோவான் 2:22 ல் கூறியுள்ளபடி "பிதாவையும், குமாரனையும் மறுதலிக்கிறவனே, அந்திக் கிறிஸ்து என்று வசனம் சொல்கிறது. இவர்கள் உலகம் உண்டான நாள்முதல் இந்நாள் வரையிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று 1யோவான் 2:18ல் "பிள்ளைகளே இது கடைசி காலமாயிருக்கிறது, அந்தி கிறிஸ்து வருகிறார் என்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்தி கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள், அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம்" என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்கண்ட வசனத்தை இன்னும் ஆழ்ந்து தியானிப்போமானால் அந்தி கிறிஸ்து யார் என்பது புரியும். 1யோவான் 4:3 ல் "மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல, வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்தி கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது". இதிலிருந்து இயேசுவை மறுதலிப்பவர்களும், அவரை அறிக்கை பண்ணாத ஆவியுடையவர்களும் அந்தி கிறிஸ்து என்று கண்டு கொள்ளலாம்.

இப்படிப்பட்டவர்கள் 10 பேர் சேர்ந்து முத்திரையை மனிதனின் வலதுகை, அல்லது நெற்றியிலாவது பதித்து, இந்த உலகத்தை ஆளுகை செய்வார்கள். இதுவே அந்தி கிறிஸ்துவின் ஆட்சியாகும். எனவே அந்தி கிறிஸ்து என்பவன் பெரிய மாயாஜாலம் செய்யக்கூடிய ஒரு மாய மனிதன் அல்ல, பயப்பட வேண்டாம். ஏனென்றால் உலகத்தில் எந்த பகுதியிலும் ஒரு மனிதன் யாரையும் அடிமையாகவோ கொடுமைபடுத்தும் வகையிலோ ஆளுகை செய்ய முடியாது. இந்த உலகில் கல்வி அறிவு நிறைந்தவர்களும், ஒருவருக்கு அநியாயம் நடக்கும் போது தட்டி கேட்க கூடிய சில மனிதநேயமுள்ள மனிதர்களும் இருக்கிறார்கள் அல்லவா! இப்படியிருக்கும் போது வித்தியாசமான ஒரு மனிதன் கையில் இந்த உலகம் இருக்காது. இறைவன் சக்தி ஒன்றே இந்த உலகத்தை ஆள முடியும். மற்றபடி அந்திகிறிஸ்து வர போகிறான் என்றும், அவனே இனி இந்த உலகத்தை ஆளுகை செய்ய போகிறான் என்றும், பயமுறுத்தினால் பயப்படவேண்டாம். **அந்திகிறிஸ்து என்பவன் ஒரு மனிதனல்ல, அது ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்படும் அடையாள எண்ணை குறிக்கிறது.** இதற்கு ஆதாரமாகத் தான் 17-10-2009 தினத்தந்தி செய்திதாளில் வந்த இணைப்பை கவனியுங்கள். இந்தியாவில் 120 கோடி பேருக்கு அடையாள எண் வழங்கவேண்டும் என்பதை ஒரு சவாலான பணியாக ஏற்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

## 10) புதிய வானமும், புதிய பூமியும்

வானம் பூமி சகலத்தையும் படைத்து காப்பாற்றி வருகிறவர் பிதாவானவர். முதலாவது கடவுள் ஆதாம் ஏவாளை படைத்தார் என்பதையும், அவர்கள் மூலமாகத்தான் மனிதர்களுடைய சந்ததி வளர்ந்து

வந்தது என்பதையும் வேதத்தில் *ஆதியாகமம்.2,3,4* ஆம் அதிகாரத்தின் மூலம் அறிந்துள்ளோம். அப்படியாக மனிதர்கள் பூமியில் பெருகும் போது பாவங்களும் பெருகி வந்ததால், தேவன் பூமியில் மனிதனை உண்டாக்கியதற்காக மனஸ்தாபப்பட்டார் என்பதை *ஆதி.6:5-6* ல் பார்க்கிறோம். எனவே உலகத்தை தண்ணீரினால் அழித்து நீதிமானாய் வாழ்ந்த நோவா குடும்பத்தில் உள்ள எட்டு பேரை மட்டும் ஒரு வருட காலம் பேழைக்குள் வைத்து காப்பாற்றி இருக்கிறார் என்பதை *ஆதி.6,7* ஆம் அதிகாரத்தின் மூலம் நாம் அறிவோம். அந்த சந்ததியின் தலைமுறை வம்சத்தின்படி, நாம் இப்போது இந்த பூமியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஆனாலும் இப்பொழுதுள்ள இந்த பூமியும் அக்கினியால் அழியப் போகிறது என்பதையும் அறிந்து இருக்கிறோம்.

இப்படியாக தேவன் பூமியைப் படைத்து எத்தனையோ மில்லியன் ஆண்டுகள் கடந்து இருக்கலாம். ஒரு நாள் மேலே போகும் போதும் எல்லாவற்றையும், மறைவான மன்னாவான வார்த்தைகளை நம்மிடம் தேவன் பேசுவார். ஆதார வசனம் *வெளி.2:17.* மேலும் இதன்படியாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த உலகம் அக்கினியால் அழிந்தாலும் ஏழு கண்டங்களில் உள்ள நாடுகளிலும் கொஞ்சம் கொஞ்சம் தேவன் விரும்பியபடி வாழும் தேவ பிள்ளைகளை நோவா குடும்பத்தை காப்பாற்றியது போல தேவன் அவர்களை இந்த உலகத்தின் கடைசி நாட்களில் காப்பாற்றுவார். இப்படி காப்பாற்றப்பட்டவர்கள் மூலம் வேத புத்தகமும் காக்கப்படும். எனவே தான் *மாற்கு.13:31* ல் வானமும் பூமியும் ஒழிந்தாலும் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என்று நம் தேவன் கூறியுள்ளார். இப்படி காப்பாற்றப்பட்டவர்களைக் கொண்டு இனி வரும் புதிய உலகத்தை தோற்றுவிப்பார் என்பதை தேவ பிள்ளைகளாகிய நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இது தேவனுடைய சித்தம். இதனால் தான் பிற இன மக்கள் இந்த உலகம் முழுவதும் அழியாது என்றும், அடுத்த ஜென்மம் பற்றியும் பேசுகிறதை கேள்விப்பட்டிருக்கிறோம்.

மேலும் தேவன் படைத்த இந்த பூமியில் உள்ள மண்ணையும், பாறையையும் ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகளின் பதில்கள் என்னவென்றால் இவைகள் தோன்றி, பல மில்லியன் ஆண்டுகள் ஆகிவிட்டதென்று சொல்வதை கேள்விபட்டு இருக்கிறோம். வசனமும் சொல்கிறது *பிரசங்கி.3:15* ல் உள்ள வசனத்தை படியுங்கள். இதன் விளக்கம் என்னவெனில், முன்பு இருந்த பூமியும், பூமியில் வாழ்ந்த மனிதர்களுக்கும் என்ன நடந்ததோ ! இப்போதும் அதைப் போலவே நமக்கும் நடக்கப் போகிறது. நடந்து முடிந்த காரியங்களை தேவன் விசாரிப்பார் என்பதே இதன் விளக்கமாகும். மேலும் *வெளி.11:17* ஆம் வசனத்தை பார்த்தால் *"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்"* என்று மூப்பர்கள் தேவனை ஸ்தோத்தரிக்கிறார்கள். அதே போல் கட்டளைகளும் சதா காலத்திற்கும் உறுதியானதென்று *சங்கீதம்.111:7-8* சொல்கிறது.

இதன் மூலம் தேவனுடைய வேலை படைத்தல், காத்தல், அழித்தல் என்பதாகும். இப்படியாக படைத்துக் காத்துக் கொண்டிருக்கும் தேவன் ஏன் அழிக்கிறார்? என்றால் அநியாயம், அக்கிரமங்கள் பெருகும் போது அழிக்கிறார். இதனை *எபிரெயர் 3:15* ல் காணலாம். இவ்வசனத்தில் உடன்படிக்கை பெட்டி என்று குறிப்பிடுகிறது. நியாயப் பிரமாணங்கள் அடங்கிய உடன்படிக்கை பெட்டியே ஆகும். இப்பெட்டியில் தேவனால் எழுதப்பட்ட கட்டளைகள் வைக்கப்பட்டிருக்கும். ஆனால் இவ்வசனத்தில் சொல்லப்பட்டபடி, இக்கட்டளைகளை நினைக்காமல் அதன்படி வாழாமலும், கட்டளைகளை குறித்து விசாரிக்காமலும் இருப்பார்கள் என்று இந்த வசனம் விளக்கம் சொல்லுகிறது. மக்கள் தேசத்தில் பெருகும்போது கட்டளைகளை கடைப்பிடித்தே வாழ வேண்டுமென்று இந்த வசனம் வலியுறுத்துகிறது. மேலும் *சங்கீதம் 121:4* ன்படி இஸ்ரவேலின் தேவனாகிய நம் தேவன் தூங்குவதுமில்லை, உறங்குவதுமில்லை என்ற வசனத்தின்படி படைத்தல், காத்தல், அழித்தல் வேலையை தேவன் தொடர்ந்து செய்து வருவதால் இவ்வசனம் உண்மையாகிறது. விஞ்ஞானிகள் சொல்லுகிறபடி இவ்வுலகம் தோன்றி பல மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்பது மேற்கண்ட வசனம் நிரூபிக்கிறது. *அப்போஸ்தலர் 17:26*ல் *"மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும், அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்"*. இந்த வசனத்தின் மூலம் இனிவரும் சந்ததி பூமியில் அவர் சித்தப்படி குறிப்பிட்ட எல்லைகளில் வாழ்வார்கள் என்பது தெரிகிறது.

சரி ! நாம் இப்படியாக இந்த சந்ததியில் தேவனுடைய பிள்ளையாக மரித்து நித்தியத்திற்கு வாழும் போது ஆயிரம் வருடம் அவரோடு அரசாளுவோம் என்று *வெளி.20:4* ஆம் வசனம் சொல்கிறது. அப்படியென்றால் 1000 வருடத்திற்கு பிறகு நாம் எங்கே வாழ்வோம்? நித்திய நித்திய சதாகாலமும் நாம் தேவனுடைய பிள்ளைகளாய், இனி மரணம் சந்திக்காத வாழ்க்கையை வாழ்வோம் என்ற நிச்சயம் தானே நமக்கு! அப்படியென்றால் ஆயிரம் வருடத்திற்கு பிறகு மீதம் உள்ள காலங்கள் நாம் எங்கே வாழப் போகிறோம் என்பதை தேவ ஆவியானவரிடத்தில் கேட்கும் போது, ஆதாம் ஏவாள் வாழ்ந்த ஏதேன் தோட்டத்தில் வாழ்வோம் என்று வேத வசனத்தின் மூலம் வெளிப்படுத்தினார். ஏனென்றால் மனிதனுக்காகவே படைக்கப்பட்ட ஏதேன் தோட்டத்தில் தான் நித்திய காலம் வாழப் போகும் ஜீவவிருட்சக் கனி உண்டு. *ஆதியாகமம் 2:8-9* ல் இதைக் காணலாம். இந்த இடத்திற்கு தான் புதிய எருசலேம் இறங்கி வருகிறது. எப்படியெனில் *ஆதியாகமம் 2:9-11* வரை உள்ள வசனத்தில், ஏதேன் தோட்டத்தில் ஜீவ விருட்சமும் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார் என்றும், அந்த தோட்டத்திற்கு தண்ணீர் பாயும்படி நதி ஒன்று ஓடுவதையும், அது 4 ஆறுகளாக பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆறும் ஓடுகிற இடங்களில் பொன்னும், கோமேதகம் போன்ற விலையுயர்ந்த மற்ற கற்களும் விளைகிறது. இவ்வாறு மனிதனுக்காக

ஏதேன் தோட்டத்தை ஆதியிலே தேவன் உருவாக்கினார். *ஆதியாகமம்.2:9*ஆம் வசனத்தில் *"தேவனாகிய கர்த்தர் பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவ விருட்சத்தையும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார் என்று படிக்கின்றோம்".*

*வெளி.21:1–2* ல் புதிய எருசலேமாகிய பரலோகம் இறங்கி வருகிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதனுடைய அமைப்பு எப்படியிருக்கிறது என்று பார்க்கும் போது *வெளி.21:10–21* வசனம் வரை படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். *வெளி.22:1–2* ல் சொல்லப்பட்ட வசனத்தை பார்ப்போம். *'பின்பு, பளிங்கைப் போல் தெளிவான ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்கு காண்பித்தார். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைத் கொடுக்கும், அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கிய மடைகிறதற்கு ஏதுவானவைகள்''* என்று கூறப்பட்டுள்ளளது. இவ்வாறாக ஆதியாகமத்தில் படைக்கப்பட்ட நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் அகற்றப்பட்டு, ஜீவ விருட்ச கனி மட்டும் தான் அங்கு இருக்கிறது. எனவே அந்த ஏதேன் தோட்டத்தில் நாம் 1000 வருடத்திற்கு பிறகு நித்திய நித்தியமாக வாழ்வோம். *சங்.25:12–13, மத்தேயு.5:5* இவ்வசனங்களில் *"கர்த்தருக்கு பயந்து இருக்கிற மனுஷனும் அவன் சந்ததியும் பூமியை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்''* என்று எழுதப்பட்டுள்ளது.

இவ்வுலக பழமொழியைப் பார்த்தால் "பொறுத்தார் பூமியாள்வார்" என்றும் சொல்லப்படுகிறது. அப்படியென்றால் பொறுமையோடு வாழ்பவர்கள் இந்த் பூமியில் மரிக்காமல் இருக்கிறார்களா? இல்லை! தேவனுடைய கட்டளையை கடைப்பிடிக்கும் போது அநேக கஷ்டங்கள் வரும். அதைப் பொறுமையோடு சகித்துக் கொண்டு நீதிமான்களாயும், பொறுமை உள்ளவர்களாய் வாழ்ந்து மரித்தோமானால், *எசேக்கியேல்.37:1–10* வரை உள்ள வசனத்தின் படி உயிர் பெற்று தேவனோடு இருப்போம்.

*சங்கீதம்.37:9,11,22,29* ஆகிய வசனங்களில் *"கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களும், சாந்த குணமுள்ளவர்களும், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட நீதிமான்களும், பூமியை சுதந்தரித்துக் கொண்டு என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்கள்"*என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீங்களும் புதிய எருசலேமாகிய பரலோகத்தில் வாழ விரும்புவதற்காகவே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. எனவே தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர் வழியில் வாழுங்கள். அப்போது இறங்கி வரும் பரலோக பூமியை நம்மால் சுதந்தரித்துக் கொள்ள முடியும். இதை *சங்.37:34* ல் *"நீ கர்த்தருக்கு காத்திருந்து அவருடைய வழியைக் கைகொள், அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர்*

உன்னை உயர்த்துவார்." என்பதை காணலாம்.

எனவே வெளி.21:4 ல் "பரலோக பூமியில் அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின" என்று எழுதப்பட்டுள்ளவாறு நாம் கவலையின்றி அங்கு வாழ்வோம். ஆதாம் ஏதேன் தோட்டத்தில் வாழும் பொழுது, தேவன் படைத்த மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் பெயரிடுமாறு அவர் அவனிடம் கொண்டு வந்தார். காண்க ஆதி.2:19. அந்த மிருகங்கள் இன்னும் அங்கே தான் இருக்கிறது. அவற்றையும் நாம் அங்கு காண்போம். அந்த மிருகங்கள் நமக்கு ஒன்றும் கேடு செய்யாது. ஆதார வசனம் ஏசாயா. 11: 6-9, ஏசாயா.65:17-25 வரை படித்து தெரிந்து கொள்ளுங்கள். 25ஆம் வசனத்தில் "ஓநாயும், ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும், சிங்கம், மாட்டைப் போல வைக்கோலைத் தின்னும், புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும், என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை கேடு உண்டாக்குவது இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்"என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக பூமியில் உள்ள ஏதேன் தோட்டமும், இறங்கி வருகிற புதிய எருசலேமாகிய **"புதிய வானம் புதிய பூமி"** என்ற பரலோகமும் ஒரே இடத்தில் ஒன்றாக இணையப்போகிறது. அவ்விடத்தை நாமும் தேவபிள்ளைகளாக வாழ்ந்தோமானால் சுதந்தரித்துக் கொள்வோம். புதிய எருசலேமில் மாதந்தோறும், ஓய்வுநாள் தோறும் பிதாவை பார்க்க முடியும். அவரையும் தொழுது கொள்ள முடியும். ஏசாயா.66:22-23ல் பார்க்கவும். இப்படி தொழுது கொள்வதற்காகத்தான் மனுஷ குமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து நம் பாவங்களை போக்கி நம்மை மீட்டெடுத்தார். இதைத்தான் லூக்கா.19:10ல் "இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்று வாசிக்கிறோம். ஆதாம் வாழ்ந்த இடமாகிய ஏதேன் தோட்டத்தை இழந்தான். அதை மனிதன் மீண்டும் பெறுவதற்காகவே மனுஷகுமாரன் இப்பூமிக்கு வந்தார். என்பதே இவ்வசனத்தின் விளக்கமாகும். இதனையே பவுல் அடிகளார் ரோமர்5:19ல் "அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்"என்று தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார். எனவே பிதாவினால் அனுப்பப்பட்ட இயேசு கிறிஸ்துவினுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து புதிய வானம் புதிய பூமி என்ற பரலோகத்தில் என்றென்றும் சதாகாலமும் மகிழ்ச்சியோடு வாழ தேவன் தாமே உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் கிருபை தருவாராக.

## 11) இரகசிய வருகைக்கு முன்பே 666 முத்திரை வரும்

நம் இயேசுவின் இரண்டாம் வருகையாகிய இரகசிய வருகையை எதிர்நோக்கி காத்திருக்கும் தேவ ஜனங்களே நம் வேதாகமத்தில், இரகசிய வருகையை பற்றி ஆண்டவர் தெளிவாய் பேசியுள்ளார். ஆராய்ந்து

பார்த்தால் அது நமக்கு தெள்ளத் தெளிவாக புரிந்துவிடும்.

*ஆமோஸ் 3:7* ல் ஆண்டவர் உரைத்தபடி, *"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்."* இந்த வார்த்தையை விசுவாசித்தபடியால் ஜெபவேளையில், இரண்டாம் வருகை எப்பொழுது? முத்திரைக்கு முன்பா? பின்பா? என்ற குழப்பத்திற்கு கர்த்தர் பின்வரும் காரியங்களை வெளிப்படுத்தினார்.

*மத்தேயு 24:3*ல் நாம் வாசிக்கும் போது இயேசுவின் சீடர்கள் துல்லியமாக ஆண்டவரே உம்முடைய வருகைக்கும், உலக முடிவுக்கும் அடையாளம் என்ன ? என்று கேட்கிறார்கள். மேற்கண்ட அந்த அதிகாரத்தை தியானித்தால் அதில் ஆண்டவர் உரைத்தவை எல்லாம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறதை நம்மால் உணரமுடியும். *மத்தேயு 24:14* ல் ஆண்டவர், *''ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்''* என்றார். ஆனால் பூலோகத்தில், ஓர் குறிப்பிட்ட இடத்தில் வசிக்கும் நம்மால் உலகில் உள்ள எல்லா ஜாதிகளுக்கும் சுவிஷேம் அறிவிக்கப்பட்டாயிற்றா? இன்னும் எவ்வளவு பேருக்கு அறிவிக்கவேண்டும். இவ்வாறு கருத்துகணிப்பு நடத்த முடியாது. ஆனால் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. விரைவில் அறிவிக்கப்பட்டு முடிக்கப்படும்.

ஆகையால் இவ்வசனத்தை மட்டும் கொண்டு இரகசிய வருகையை யூகிக்க முடியாது. ஆண்டவர் மற்றுமொரு அடையாளத்தை அதே அதிகாரத்தில் வைத்திருக்கிறார். அதென்னவெனில் *மத்தேயு 24:15*ல் **"மேலும்''** இந்த வசனத்தை படிக்கும் முன்பு மேலும் என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்னவென்றால் இன்னும் ஒரு அடையாளம் உண்டு என்பதை சுட்டிக் காட்டுகிறார். என்பதை புரிந்து கொள்ளுங்கள். வசனம் பின்வருமாறு *"மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கத்தரிசி சொல்லியிருக்கிறானே வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதை பரிசுத்த ஸ்தலத்தில் நிற்க காணும்போது...''* இப்போது தானியேல் என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்ப்போம்.

*தானியேல் 12:4–7*ல் உள்ள வசனங்களை தியானியுங்கள். குறிப்பாய் ஏழாம் வசனத்திடில் *"பரிசுத்த ஜனங்களின் வல்லமை சிதறடித்தல் முடிவு பெறும் போதே இவைகளெல்லாம் நிறைவேறித் தீருமென்றும், என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் பேரில் ஆணையிடக்கேட்டேன்''*. இந்த வார்த்தைகளை குறிப்பாக தியானிக்கும் போது பரிசுத்த ஜனங்களின் வல்லமை முறியடித்தல் என்றால் என்ன ? என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. அதற்கான பதிலை பின்வருமாறு ஆண்டவர் கூறினார். கிறிஸ்துவுக்கு முன்னும் கிறிஸ்துவுக்கு பின்னும் அநேகர் ஆண்டவருக்காக இரத்த சாட்சியாய் மரித்திருந்தார்கள். *மத்தேயு.27:52*ல் வாசிக்கும் போது இயேசு உயிர்விட்டபொழுது, *"கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது"* என்று

வாசிக்கிறோம். இயேசு உயிரோடு எழுந்த வேளையில் மரித்த அநேக பரிசுத்தவான்கள், உயிரோடெழுந்து பரிசுத்த நகரில் அநேகருக்கு காணப்பட்டதாக வேதம் கூறுகிறது. இப்படி உயிர் பெற்ற பரிசுத்தவான்கள் உயிரோடு எழுந்து இயேசு 40 நாட்களாக சீஷர்களுக்கு தரிசனம் கொடுத்தது போல பரிசுத்தவான்களும் அவர்கள் வாழ்ந்த இடத்தையும், தன்னை இரத்த சாட்சியாக சாகடித்த மனிதர்களையும் பார்த்திருக்கிறார்கள். எனவே தான் இயேசு மேலே சென்றவுடன் இவர்களும் அவருடனே மேலே போய் *வெளி.6:10,11*ல் இவ்வாறு பேசுகிறார்கள் – *"அவர்கள் :பரிசுத்தமும் சத்தியமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத் தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது, அன்றியும், அவர்கள் தங்களைப் போலக் கொலை செய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும், தங்கள் சகோதரருமானவர்களின் தொகை* **நிறைவாகுமளவும்,** *இன்னுங் கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது."*

இந்த வசனமே பரிசுத்தவான்களின் வல்லமை முறியடித்ததின் தொடர்புடைய வசனமாகும். இவ்வசனத்தில் **தொகை என்பதற்கு எண்ணிக்கை என்று பொருள்.** எனவே எத்தனை பரிசுத்தவான்களின் வல்லமை முறியடிக்கப்படும் என்று ஒரு எண்ணிக்கை உள்ளது. *வெளிப்படுத்தல்.14:1-4*ல் வரை வாசிக்கும் போது, **லட்சத்து நாற்பத்து நான்காயிரம் பேர்** என்று தெள்ளத்தெளிவாக பரிசுத்த ஆவியானவர் காண்பித்துக் கொடுத்தார். இவர்கள் *வெளிப்படுத்தல்.14:4*ல் சொல்லப்பட்டுள்ள பரிசுத்தவான்களே ஆவார்கள். இவர்கள் ஸ்திரீகளால் கறைபடாதவர்களும், கற்புள்ளவர்களுமாவார்கள். இவர்களே இவ்வுலக முடிவின் போது கர்த்தரோடு பூமிக்கு வந்து சகல ஜாதிகளையும் பழிவாங்கவும், தண்டிக்கவும் பட்டயத்தோடு வருபவர்கள் இந்த பரிசுத்தவான்களே என்பதை *சங்கீதம்.149:6-9*ல் காணலாம்.

இப்படிப்பட்ட பரிசுத்தவான்களின் தொகையில் பலர் முன்பு மரித்து இயேசுவோடு உயிர்தெழுந்து பரலோகத்தில் வசிக்கிறார்கள். மீதம் பலர் இப்பொழுது நாம் இருக்கும் இந்த காலக்கட்டத்தில் மரித்துக் கொண்டே இருக்கிறார்கள். இந்த தொகை எண்ணிக்கையின் முடிவு முத்திரைகாலத்தில் நிறைவு பெறும். அப்படியென்றால் முத்திரை காலத்தில் மரிக்கப்போகும் பரிசுத்தவான்களின் எண்ணிக்கை முடிவுக்கு வரும். *வெளி 13:16-18*ல் முத்திரையைப் பற்றியும், *வெளி.14:9-11*ல் முத்திரையை தரிக்ககூடாதென்பதையும், அதை தரித்தால் அக்கினி கடலில் தள்ளப்படுவார்கள் என்பதையும் வாசிக்கிறோம். *வெளி.14:12*ல் *"பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்."* என்ற வசனத்தின் மூலம் முத்திரை காலத்தில் பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள் என்பதும் அவர்கள் தேவனுக்காக இரத்த சாட்சியாக கூட மரிப்பார்கள் என்பதும் தெளிவாகிறது.

மேலும் *வெளி.18:24*ஆம் வசனத்தில் இது உறுதிப்படுத்தப்

பட்டிருக்கிறது. *"தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான்களுடைய இரத்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது என்று விளம்பினான்". வெளி.17:18* ஆம் அதிகாரத்தை வாசிக்கும் போது அவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்திரி என்ற மகாபெரிய நகரம் எதுவென்றால் உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் உதவிக்கரம் நீட்டும் கண்டம் ஆகும். உலகத்தின் அனைத்து தேசங்களின் மேலும் ஆளுகை செலுத்தக் கூடியதாய் இருக்கிறது. அந்த மாநகரம் எது என்பது நமக்குத் தெரியும்.

இந்த தேசமே பத்து இராஜாக்களாகிய பத்து கொம்புகளில் முதன்மை கொம்பாகிய முத்திரையை, அதிகாரப் பூர்வமாகவும் அரசாணைப்படியும் வெளியிடும். ஆதார வசனம் *வெளி.18:24* முத்திரையினால் சிந்தப்பட்ட பரிசுத்தவான்களின் இரத்தம் அவளிடத்தில் காணப்பட்டது என்ற வசனத்தின் மூலம் பரிசுத்தவான்களின் எண்ணிக்கை முடிவடையும். *மத்தேயு. 24:15ல் "பரிசுத்த ஸ்தலத்தில் அதை நிற்கக் காணும் போது"* என்ற வசனத்தின்படி 1 லட்சத்து 44 ஆயிரம் பரிசுத்தவான்களில் கடைசி பரிசுத்தவான் மரித்து, நியாத் தீர்ப்பு ஸ்தலத்தில் மற்ற மனிதர்களில் ஒருவராக நிற்க காணும் போது ஆண்டவரின் வருகை வரும் என்று வசனம் சொல்லுகிறது. இவ்விளக்கத்தின் மூலம் இரகசிய வருகைக்கு முன்பே முத்திரை வரும் என்பதை அறிந்தேன்.

இரகசிய வருகைக்கு முன்பே முத்திரை காலம் வந்தால் தான் மேற்கண்ட வசனங்களில் சொல்லப்பட்டபடி, பரிசுத்தவான்கள் சில சோதனைகளை தாங்கி, அவர்கள் மரிப்பார்கள். நாமும் அவர்களோடு சேர்ந்து இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவோம். நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள். இரகசிய வருகைக்குப் பிறகு, கீழே பூமியில் பரிசுத்தவான்கள் கட்டாயம் இருக்கமாட்டார்கள் அல்லவா ? இதன் மூலம் இரகசிய வருகைக்கு முன்பே முத்திரை என்பது தெளிவாகின்றது.

*2தெசலோனிக்கேயர்.2:1–8* வரை வாசியுங்கள். இதில் 2, 3–ஆம் வசனத்தை குறிப்பாய் வாசியுங்கள். *"கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது"* என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாவம் என்றால் என்ன? கட்டளையை மீறுவதே பாவம். ஆகையால் ஆண்டவரின் கட்டளையை மீறி அரசாங்கம் கொண்டுவரும் முத்திரையே கேட்டின் மகனாகும். முத்திரை வெளிப்பட்ட பின்பு விசுவாசத் துரோகமும் நேரிடும். விசுவாசிகள் கூட முத்திரையைப் போடக்கூடாது என்று அறிந்தும், உலக ஆசிர்வாதங்களுக்காக முத்திரையை போடலாமா என்று எண்ணுவார்கள். இதுவே விசுவாசத் துரோகம்.

இதையே பவுல் கூறுகிறார். இதன் மூலம் இரகசிய வருகைக்கு முன் முத்திரை என்று தெளிவாகிறது. எப்படியெனில் ஆவியானவர் கூறும் விளக்கத்தை கவனியுங்கள். பள்ளியில் 10ஆம் வகுப்பு 12ஆம் வகுப்புப் பிள்ளைகளுக்கு பொதுத் தேர்வு என்றால் எல்லா பள்ளிப் பிள்ளைகளுக்கும் பொதுவான கேள்வித்தாள் ஒரே மாதிரியாக இருக்கும். அதேபோல் தான் ஆண்டவர் வருகைக்கு முன்பாக உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு சோதனை. அதுதான் பயோசிப் ஆகிய முத்திரை

[illegible]

[illegible]

மேலும் இன்னுமொரு வசனத்தை பார்ப்போம். [illegible] 1:7 "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; [illegible] விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் [illegible] சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." இந்த வசனத்தை படித்துப் பாருங்கள். குறிப்பாய் இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது நம் விசுவாசம் சோதிக்கப்படும் என்பது [illegible] தெளிவாய் அறிய முடிகிறதல்லவா? எனவே [illegible] திட்டமும் தெளிவுமாய் "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களை காத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லப்பட்டபடி முத்திரைக் காலத்தில் பொறுமையுடன் இருக்கவேண்டும். ஏனென்றால் [illegible] பயோசிப் போடச் சொல்லி நாட்களை நீக்கு அறிவிப்பு [illegible] கொண்டேயிருப்பார்கள். எனவே மிகவும் பொறுமையுடன் இருங்கள். இதற்காகவே மேற்கண்ட வசனம் நம்மை எச்சரிக்கிறது.

அநேகர் சொல்வது போல் இரகசிய வருகைக்கு [illegible] வருவான் என்பதை பற்றி தியானித்து பார்த்தால் [illegible] எந்த ஒரு மனிதனுக்கும் எந்த நாட்டிலும் போடவே கூடாது அல்லவா!

தேவனும் என் மகன் வருகைக்குப் பிறகு தான் முத்திரை வரவேண்டும் என்று வைராக்கியமாய் இருக்கமாட்டாரா? அவர்கள் முத்திரை போடுவதற்கு தேவன் அனுமதித்திருக்கிறார் என்றால் இரகசிய வருகைக்கு முன்பு சட்டமாக முத்திரை வரும் என்பதால் அவர்கள் திட்டங்களை இப்போதே அனுமதித்து இருக்கிறார். **முத்திரையே பூமியில் வாழும் ஒவ்வொரு மனுஷனுக்கும் இரகசிய வருகைக்கு முன்பு வரும் கடைசி உபத்திரவமாகும். உலக முடிவிற்கு கடைசி அடையாளம், தேவனை ஏற்றுக்கொள்ளாத பிள்ளைகளுக்கு புண்கள் வருவதேயாகும்.** இந்த இரண்டு அடையாளங்களையும் தெளிவாய் தெரிந்து கொள்ளுங்கள். எனவே முத்திரைக்கு முன்பே நம் குடும்ப காரியம், ஊழியக் காரியங்கள் அனைத்தையும் சரிப்படுத்தி முத்திரை தரித்துக் கொள்ளாமல் இருக்க ஆயத்தமாவோம். சபையில் உள்ள விசுவாசிகளையும் ஆயத்தப்படுத்துவோம் !

இப்பகுதியை நான் தெரியப்படுத்தக் காரணம் முத்திரைக் காலத்திற்கு முன்பு அனைத்து விசுவாசிகளும் குடும்ப காரியங்களை சரி செய்து தேவையான பொருளாதாரத்தை சேர்த்து வைத்துக் கொண்டு ஆயத்தமாய் இருக்கவேண்டும். இதற்காகவே (இரகசிய வருகைக்கு முன்பே முத்திரை) இப்பகுதியை எழுதினேன். இந்த முத்திரைக் காலத்திலாவது *"சகோதரர்கள் ஒருமித்து வாசம் செய்வது எத்துணை நன்மையும், இன்பமுமாய் இருக்கும்"* என்ற வசனத்தின்படி அனைத்து சபையாரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தேவனுடைய நாமம் மகிமைப்படும். இதன் மூலம் தேவன் நமக்கு கொடுத்த வாக்குதத்த வசனங்களை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார். கர்த்தர் தாமே உங்களுடன் கடைசி வரை இருந்து உங்களை ஆசிர்வதிப்பாராக. ஆமென்.

## 12) இயேசுகிறிஸ்து சமீபமாய் வாசலருகே வந்துவிட்டதற்கான அடையாளங்கள்

தேவப் பிள்ளைகளே, இயேசுகிறிஸ்துவின் வருகை மிக மிக சமீபம் என்பதற்கான அடையாளங்களை 2007ம் ஆண்டிலிருந்து தினத்தந்தி பேப்பர் கட்டிங்கில் சேகரித்து வந்தேன். இதை இப்பகுதியில் இணைத்துள்ளேன். குறிப்பாய் 23–9–2010ம் ஆண்டு வெளிவந்த ஒரு பேப்பர் கட்டிங்கில் 2013ம் ஆண்டில் பூமியே முடங்கும் அபாயம் என்ற செய்தியை படித்து ஆச்சரியப்பட்டேன். இச்செய்திகளை கவனித்துப் படித்துப் பாருங்கள். அச்செய்தி என்னவெனில் விண்வெளியில் சுற்றிவரும் செயற்கைகோள்கள் எல்லாம் சேதமடையும். இதனால் மின்கம்பங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இருள் சூழ்ந்து கொள்ளும். இணைய தளங்கள் பழுதாகிவிடும். விமானங்கள் பறக்கமுடியாத நிலைமை ஏற்படும். சூரியனில் ஏற்படும் பிரளயத்தால் பூமிக்கு ஏற்படும் சேதத்தின் அளவை நினைத்துப் பார்க்க முடியாது என்று இங்கிலாந்து நாட்டு இராணுவ மந்திரி லியாம் பாக்ஸ் எச்சரித்திருக்கிறார். இத்தகவலை படிக்கும் போது நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைதான் நினைவுக்கு வந்தது. **மத்தேயு.**

*24:29, மாற்கு. 13:24,25* வசனத்தை படித்து தியானியுங்கள். இப்படியாக இரகசிய வருகை வருவதும் அதற்கு பிறகு தேவவசனத்திற்கு பஞ்சங்கள் வரும். இவை *ஆமோஸ். 8:6–14* வரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆண்டவர் வருகைக்கு முன்பு மனிதர்கள் அனைவருக்கும் ஏற்படும் கடைசி உபத்திரவம் முடிந்தவுடன், இயற்கைக்கும் கடைசி உபத்திரவம் உண்டாகும். அது தான் *மத்தேயு 24:29* ஆகும். அந்நாட்களில் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் என்ற வசனத்தின்படி தினத்தந்தி செய்தித்தாளில் ஒரு செய்தி வந்தது. அதை இங்கே இணைத்துள்ளேன். இந்த வசனத்தையும் இப்புத்தகத்தில் இணைத்துள்ள செய்தித்தாளின் மூலம் வந்த செய்தியையும் பார்த்தால் 2013ஆம் ஆண்டில் பூமியே

## 2013-ம் ஆண்டில் பூமியே முடங்கும் அபாயம்

சூரியனில் வருகிற 2013-ம் ஆண்டில் பிரளயம் ஏற்படப் போகிறது. அப்போது ஏற்படும் ராட்சத வெடிப்புகளால் நெருப்பு கோளங்கள் வெளிப்பட்டு பூமியை பாதிப்படைய செய்யப்போகிறது. இது போன்ற வெடிப்பு சூரியனில் 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்படுவது வழக்கம்.

இப்போது ஏற்படப்போகும் இந்த பிரளயத்தால் விண்வெளியில் சுற்றிவரும் செயற்கைக்கோள்கள் சேதம் அடையும். இதனால் மொபைல் போன் மூலமான தகவல் தொடர்பு துண்டிக்கப்படும். மின்கம்பங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இருள் சூழ்ந்து கொள்ளும். இணையதளங்கள் பழுதாகி விடும். விமானங்கள் பறக்க முடியாத நிலைமை ஏற்படும்.

இது பற்றி இங்கிலாந்து நாட்டு ராணுவ மந்திரி லியாம் பாக்ஸ் எச்சரித்தார். சூரியனில் இப்படி ஒரு பிரளயம் ஏற்பட்டால், பூமியில் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு சேதம் ஏற்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்து நாளிதழ் 25-1-2012

# Sun hurls strong geomagnetic storm

*This handout image provided by NASA, taken on Sunday night, shows a flare erupting on the Sun's northeastern hemisphere.* – PHOTO: AP

**WASHINGTON:** The strongest geomagnetic storm in more than six years was forecast to hit Earth's magnetic field on Tuesday, and it could affect airline routes, power grids and satellites, said the U.S. Space Weather Prediction Center.

A coronal mass ejection, a big chunk of the Sun's atmosphere, was hurled towards Earth on Sunday, driving energized solar particles at about 2,000 km per second), about five times faster than solar particles normally travel, said the centre's Terry Onsager.

"When it hits us, it's like a big battering ram that pushes into Earth's magnetic field," said Mr. Onsager. "That energy causes Earth's magnetic field to fluctuate."

This energy can interfere with high frequency radio communications used by airlines to navigate close to the North Pole in flights between North America, Europe and Asia, so some routes may need to be shifted, said Mr. Onsager.

It could also affect power grids and satellite operations.

Astronauts aboard the International Space Station may be advised to shield themselves in specific parts of the spacecraft to avoid a heightened dose of solar radiation, said Mr. Onsager.

The space weather centre said the geomagnetic storm's

லூக்கா. 21:25–ல்
சொல்லப்பட்டபடி சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்.

## கட்டிடத்தில் ஏறிய படகு



ஜப்பானில் நடந்த 11-ந் தேதி ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் மற்றும் சுனாமி பெருத்த சேதத்தையும், சோகத்தையும் உண்டாக்கியது. இன்னமும் மீட்பு பணிகளும், நிவாரண பணிகளும் நடந்து வருகின்றன. ஓட்சுச்சி நகரத்தில் சுனாமியின் ஆழிப்பேரலை தூக்கி வீசிய ஒரு குட்டிக்கப்பல் போன்ற படகு. இடிந்து உருக்குலைந்து போன ஒரு [illegible]



# சூரியனில் இருந்து பூமியை நோக்கி காந்தப்புயல் வருகிறது

## விமான போக்குவரத்து-செயற்கை கோள்களுக்கு பாதிப்பு ஏற்படுமா?

# பூமிக்கு மிக அருகில் எரிகல் செல்கிறது

27-9-2012 17

முடங்கும் என்ற செய்தி உறுதியாகிறது. இப்படி கட்டாயம் நடக்கும் என்பதற்கு அறிகுறியாக இப்போது 25-1-2012ல் சூரியனில் இருந்து காந்தப்புயல் பூமியை நோக்கி வந்துக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் செயற்கைகோள்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்ற செய்தியும் வந்துவிட்டது. பூமியை வெப்பம் அதிகமாக தாக்கும். இப்படி தொடர்ந்து பூமி வெப்பத்தால் மூழ்கும் போது பூமியே முடங்கும் அபாயம் ஏற்படும் என்பது உண்மையாகிறது.

இவைகளே இரகசிய வருகையில் இயேசுகிறிஸ்துவானவர் வாசல் அருகே வந்துவிட்டார் என்பதற்கான அடையாளமாகும்.

### *13) இப்புத்தகத்தின் இறுதி அறிவுரை*

அநேக ஆத்துமாக்களை பரலோகம் அழைத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு இப்புத்தகம் எழுதப்பட்டது. இப்புத்தகத்தில் எழுதப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் பரிசுத்த ஆவியானவரின் உதவியால் எழுதப்பட்டது. எழுதப்பட்ட கட்டளைகள் எல்லாம் பைபிளில் உள்ளவைகளே. எனவே கட்டளை பகுதியாகிய முதல் பகுதியின் படி கட்டாயம் வாழ்ந்தீர்கள் என்றால் பரலோகத்திற்குப் போவீர்கள். இப்படி வாழும்போது, தேவ பிள்ளைகளே, பரிசுத்தமுள்ளவர்கள் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்றபடி நீங்கள் இன்னும் பரிசுத்தமாவீர்களே தவிர கீழான நிலைக்கு விழமாட்டீர்கள். பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிக்க முடியாது என்று *எபிரெயர்.12:14* ல் சொல்லப்பட்டு இருக்கிறது. *“யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே”*. இவ்வசனத்தின்படி உங்கள் உறவினர்கள் மற்றும் யாவரோடும் சமாதானமாய் இருக்கிறீர்களா என்பதை ஆராய்ந்து பாருங்கள். தயவு செய்து அவர்களை மன்னித்து, அவர்கள் பேசவில்லை என்றால் நீங்கள் சென்று ஒரு சில வார்த்தையாவது பேசி சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள். அவர்கள் உங்களுடன் சண்டை போட்டு உங்களை அவமானப்படுத்தியிருந்தாலும் நீங்கள் அவர்களை மன்னியுங்கள் *எபேசியர்.4:32 “ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்”*. இவ்வசனத்தின்படி நீங்கள் நடக்கவில்லையென்றால் நம் பரம தகப்பனும் நம் நியாயத் தீர்ப்பு நாளில் உங்கள் பாவங்களை மன்னிக்க மாட்டார். நீங்கள் பேசியும் அவர்கள் பேசவில்லையென்றால் மனதிற்குள் ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டே வந்துவிடுங்கள். பிறகு உங்களை தேவன் பரிசுத்தப்படுத்துவார். எப்படியெனில் நீங்கள் சத்தியமுள்ள வசனமாகிய கட்டளைகளை கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டீர்கள் அல்லவா! வசனமே சத்தியம்” இனி சத்தியம் உள்ளவர் யார் என்று பார்ப்போம், *யோவான்.14:6 ‘நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்”* என்று சொல்கிறது. எதற்கு வழி என்றால் நாம் அனைவரும் பரலோகத்திற்கு செல்வதற்கு வழியாய் இயேசு இருக்கிறார். எனவே அவர் நமக்கு சொன்ன கட்டளையாகிய சத்தியத்தை கடைப்பிடிக்கும் போது கிருபை நம்மை சூழ்ந்து அவர் வருகையில் நம்மை எடுத்துக் கொள்ளும். பிதாவானவர் தன் மகனை இரகசிய வருகைக்காக அனுப்பும்போது கிருபையை ஊற்றிக் கொண்டே இருப்பார். இந்த கிருபைதான் நாம் தூங்கினாலும் நம்மை ஆயத்தபடுத்திவிடும். எனவே ஆபிரகாமைப் போல் நீதியுள்ள வசனங்களை விசுவாசித்து, அவர் கிரியைகளினால் கடைப்பிடித்ததை போல் நாமும் வாழ்ந்தால் கீழ்கண்ட வசனத்தின்படி *1பேதுரு.1:13, சங்கீதம்.32:10,*

சங்கீதம் 85:10 கிருபையும் சத்தியமும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று தம் வருகையில் சந்திக்கும். நாமும் சத்தியத்தை கடைப்பிடிக்கும் பிள்ளைகளாக வாழ்ந்தால் அவருடைய கிருபையினால் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவோம்.

இப்புத்தகம் பரலோகத்தில் மேற்கொண்ட பயணம் குறித்து இருக்கும் தூதர்கள் அனைவரும் படிப்பதை பரிசுத்த வரை எழுந்து செல்லப்பட்ட மகன் தேவா என்பவர் ஜெபிக்கும் போது தரிசனத்தில் பார்த்துச் சொன்னார். எனவே தான் இந்த புத்தகம் தீவிரமாய் வெளிவந்துள்ளது. இப்புத்தகம் வாங்கிய பிள்ளைகள் இந்திரிய நன்கொடை ரூ.20/- உரிய நபரிடம் கட்டாயம் கொடுத்துவிடுங்கள். அப்போது தான் ஆண்டவர் வருகை வரும் வரை தொடர்ந்து இந்த ஊழியத்தை எங்களால் செய்ய முடியும். மேலும் இப்புத்தகத்திற்காக உழைத்த என் தாயார் ஜுபா அவர்களையும், இப்புத்தகம் வெளியிட என் உடன்பிறந்த அண்ணன் சகோதரர் அ. சுந்தரராஜன் அவர்களையும் மற்றும் ஜெபித்து உதவி செய்தவர்களையும், இப்புத்தகத்தை படிக்கும் அத்தனை பிள்ளைகளையும், தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக. பரிசுத்த ஆவியானவர் உங்களுடன் இருந்து வழி நடத்துவாராக!

ஆமென்.

உங்கள் சகோதரி,

**வி. மரியா (எ) மிரியாம்**

### மூன்றாம் பகுதி

## ஆசிரியரின் தரிசனமும் கனவுகளும்

தேவ பிள்ளைகளே, உயிரோடு உலாவிக் கொண்டிருக்கும் நம் ஆண்டவர் அன்று சவுலாகிய பவுலுக்கு தரிசனம் கொடுத்தார், அதைப் போல இந்த கடைசி நாட்களிலும் தேவ பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருடனும், கனவுகள் மூலமும் தரிசனத்தின் மூலமும் உறவாட காத்துக் கொண்டிருக்கிறார் என்பதை தேவ நாம மகிமைக்காகவே நான் கண்ட கனவுகளையும் தரிசனத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பி இந்த மூன்றாம் பகுதியை எழுதுகிறேன்.

### *1) இறுதிநாளில் நான் பெற்ற நியாயத் தீர்ப்பு*

கடந்த 1997ஆம் ஆண்டு இரட்சிப்புக்கு வருவதற்கு முன்பாக நான் கண்ட முதல் கனவு, ஒரு நாள் இரவு வானில் மின்னல் ஒளி தொடர்ந்து பிரகாசித்தது. பிறகு எரிமலை வெடித்து ஆறாக நெருப்புக் குழம்பு ஓடியது. வானில் தங்க நிறத்தில் பசும் பொன்னாலான ஒரு பரலோக அறையை பார்த்தேன். அது மிகவும் பெரியதாக இருந்தது. அதில் இயேசுவானவர் வெள்ளை அங்கியுடன் நின்று கொண்டிருந்தார். பிறகு மரித்தவர்கள் எல்லாம் உயிரோடு எழுந்தார்கள். அவர்கள் வரிசையாக சென்று கொண்டிருந்தார்கள். அவ்வரிசையில் நானும் ஒருத்தியாக நின்று கொண்டு இருந்ததை நானே என்னை என் கனவில் பார்த்தேன். அங்கு இயேசுவானவர் நியாயத் தீர்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறார். வரிசையும் நகர்ந்து கொண்டேயிருந்தது. சிலரை வரிசையிலிருந்து தள்ளி விடுகிறார். அதைப் பார்த்துக் கொண்டே வரிசையில் நான் போகிறேன். என்னுடைய கால்கள் எல்லாம் பயத்தினால் நடுங்கியது. நான் அங்கே என் மனதிலேயே, ஆண்டவரே, நான் என்ன பாவம் செய்தேன் ? என்நிலை என்னவாகும் என்று பேசிக் கொண்டே போகிறேன். நான் அவரின் அருகில் நின்றவுடன் ஆண்டவர் இயேசு என் தலையில் கையை வைத்து ஆசீர்வதித்தார். அப்போது எனக்கு மிகுந்த சந்தோஷம் உண்டானது. என் கனவு கலைந்தது. இதுவே என் ஆவிக்குரிய முதல் கனவாகும். இந்த கனவைக் கண்டும் நான் ரோமன் கத்தோலிக்க மதத்தில் இருந்ததால், இரட்சிப்பு குறித்து பெரியதாக எண்ணவில்லை. தேவன் அப்போதே என்னை முன் குறித்துவிட்டார் என்பதை இப்போது தான் அறிந்து கொண்டேன்.

### *2) வானத்தில் தோன்றிய எழுத்துக்கள்*

2008ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21ஆம் தேதி அதிகாலை வானம் முழுவதும் இருளாக இருந்தது. பிறகு திடீரென்று வானத்தில் நிறையப் பேர் நின்று கொண்டு இருந்தார்கள். அதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். சிறிது நேரம் கழித்து வானில் பார்த்த மனிதர்கள் எல்லாம் மறைந்துவிட்டார்கள். மீண்டும் வானம் காரிருளாக மாறியது,

ஆனால் சிறிது நேரத்தில் வெள்ளை நிறமான எழுத்துக்கள் வானில் விழுந்தது. அந்த எழுத்துக்கள் மறைந்து விடுமோ என்று வேகமாய் படித்தேன். ஒரு சில நிமிடம் அந்த எழுத்துக்கள் வானில் நின்றது. அந்த எழுத்துக்களின் வார்த்தை என்னவென்றால் "இதோ உலக முடிவு சமீபம்" என்ற வார்த்தையே ஆகும். பிறகு வானத்தில் இருந்து ஒரு சத்தம் வந்தது. அந்த சத்தம் கயா... கயா... கயா... என்ற அந்நிய பாஷையின் சத்தமாகும். பிறகு இதோ நெருங்கிக் கொண்டிருக்கிறேன் என்று வானத்திலிருந்து தமிழ் மொழியில் பேசுகிற சத்தத்தையும் காதில் கேட்டேன். இது அந்நிய பாஷையின் விளக்கம் என்பதை என் கனவிலேயே புரிந்து கொண்டேன். என் கனவும் கலைந்தது. உடனே எழுந்து ஜெபித்தேன். அந்த நாள் டி.ஜி.எஸ். தினகரன் ஐயா இறந்த மறுநாளாக இருந்தது. எனவே மறுநாள் அவருடைய அடக்க ஆராதனைக்கு குடும்பமாய் சென்றோம்.

அவருடைய அடக்க ஆராதனை செய்தியில் இந்த கலியுகம் முடிவடையப் போகிறது என்ற செய்தி கொடுக்கப்பட்டது. நான் கண்ட கனவும் இச்செய்தியும் ஒன்று என்பதை ஆவியானவர் உறுதிப்படுத்தினார். நான் அந்த மேடைக்கு போய் சாட்சி சொல்லாம் என்று கூட நினைத்தேன். பின்பு அங்கு கூடியிருந்த ஊழியக்காரர்கள் கூட்டத்தை மேடையில் பார்த்தபோது, என் உள்ளத்தில் பரலோகத்தில் தான் இவர்களை எல்லாம் பார்ப்போம். இங்கு பூமியிலேயே பார்க்கிறோமே! என்று நினைத்து மகிழ்ந்தேன். ஆனாலும் டி.ஜி.எஸ். தினகரன் ஐயா அவர்களின் மரணம் பெரிய துயரத்தை எனக்கு ஏற்படுத்தியது. ஏனென்றால் எனக்கு திருமணம் நடந்த 1986ம் ஆண்டிலிருந்தே அவருடைய ஊழியத்தில் என் கணவரும் இணைந்திருந்தார். இன்று நாங்கள் குடும்பமாய் இரட்சிக்கப்படுவதற்கு அவரும், அவருடைய குடும்பதாருடைய ஜெபமும் ஒரு காரணமாக இருந்திருக்கும். எனவே அவருடைய ஊழியங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். அவர்களின் ஊழியத்தைப் பற்றி குறைகள் கேள்விப்பட்டால் பாரத்தோடு ஜெபிப்பேனே தவிர மற்றவரிடத்தில் இதைக் குறித்து பேசமாட்டேன். அதேபோல் தேவ பிள்ளைகளே, தேவனுக்காக அநேக ஊழியங்கள் பலர் செய்து கொண்டிருக்கிறார்கள். ஊழியங்களில் குறைவுகள் கேள்விப்பட்டால், அவர்களுக்காக பாரத்தோடு ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்.

### *3) ஓய்வு நாளில் தரிசனமாக இயேசுவை கண்டது*

2008 ஆம் ஆண்டு ஒரு ஓய்வு நாள் ஆராதனையில் பிரசங்க நேரம் முடிவடைந்தது. பிறகு எங்கள் ஊழியக்காரர் சபைக்கு 9 மணி ஆராதனையில் வந்த எல்லா பிள்ளைகளுக்காகவும் பலிபீடத்தில் இருந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். நானும் ஊழியக்காரரோடு இணைந்து விசுவாசிகள் அமர்கிற இடத்திலிருந்து முழங்கால் படியிட்டு பாரத்தோடு ஜெபிக்கும் போது, என் தலையில் போட்டிருந்த என் சேலையின் முக்காடு என் முகத்திற்கு முன்பாக விழுந்துவிட்டது. அதை நான் கண்திறந்தபடி

முக்காட்டை சரி செய்துக் கொண்டே, என்னை அறியாமலேயே பலி பீடத்தை பார்த்து விட்டேன். அங்கு என் சபை ஊழியக்காரர் அருகில், என் இயேசு இரட்சகர் வெண் அங்கி தரித்தவராய், நின்று கொண்டு இருந்தார். நான் பார்ப்பது உண்மையா? என்று மீண்டும் பார்த்தேன், இயேசுவானவர் பலிபீடத்தில் நின்று சபை மக்கள் அனைவரையும் பார்த்தவண்ணமே நின்றிருந்தார். இவ்வாறாக இயேசுவை ஓய்வு நாளில் ஆலயத்தில் தரிசித்தேன். தேவ பிள்ளைகளே, ஓய்வு நாள் அன்று ஆராதனை தொடங்கும் நேரத்திற்கு முன்பே போய் பரிசுத்த அலங்காரத்தோடு ஆராதியுங்கள். மேலும் நான் 2006ஆம் ஆண்டு தான் ஒரு தீர்மானம் எடுத்தேன். இனி வாழ்கிற நாட்கள் தேவன் பிரியப்படுகிற வகையில் மட்டுமே வாழவேண்டும். அவர் விரும்புகிற பரிசுத்தம் எதுவென்பதை வேதத்தின் மூலம் அறிந்து வாழ ஆரம்பித்தேன். இந்த கொஞ்ச நாள் பரிசுத்த வாழ்வுக்கே ஆண்டவர் தரிசனம் கிடைத்தது என்றால், உங்களுக்கும் தேவன் தரிசனத்தைக் கொடுப்பார்.

### *4) நான் கண்ட மீன் வகைகள்*

2009ஆம் ஆண்டிலிருந்து நிறைய மீன்கள் குவிந்து இருப்பதையும், சில சமயம் பெரிய மீன்களையும் அடிக்கடி கனவில் பார்ப்பேன். ஒரு நாள் கனவில் நான் பார்க்கும் போது எனக்கு ஆசிரியராக இருந்த சகோதரி ஒருவர் வீட்டு கிரகப்பிரவேசத்திற்கு நான் போகிறேன். அப்போது அவர்கள் வீட்டு வாசற்படியில் மீன் விற்றுக் கொண்டு ஒருவர் வருகிறார். நான் என் கையில் இருந்த பணத்தைப் போட்டு அந்த ஆசிரியர் வீட்டுக்கு மீன் வாங்கி தந்தேன். அவர்கள் அந்த மீனை வாங்கி வாசலிலேயே வைத்துவிட்டு, உள்ளே போய் சுத்தம் பண்ண கத்தி எடுத்துவர போனார்கள். நான் உடனே அந்த மீன்களை அவர்கள் வரும் வரை பார்த்துக் கொள்ள வாசலில் நடந்து கொண்டே இருந்தேன். உடனே ஒரு பெரிய கழுகு மீனை எடுக்க வானத்தில் இருந்து இறங்கி வந்தது, எனக்கு தெரியாமல் அவர்கள் வீட்டு அருகிலேயே அந்த குப்பை மேட்டிற்குள் மறைந்து கொண்டது. நான் மீண்டும் நடந்து கொண்டே வாசலில் உள்ள மீன்களை பாதுகாக்க நடந்து கொண்டே குப்பைமேட்டின் அருகில் நான் சென்றவுடனே மறைந்திருந்த கழுகு இறக்கைகளை விரித்து என்னை கொத்த வந்தது. ஆனால் அந்த இறக்கைகள் இரண்டும் குப்பை கூளத்திற்குள் மாட்டிக் கொண்டது. அந்த கழுகினால் சிறகடித்து பறக்க முடியவில்லை. உடனே விழித்து எழுந்து விட்டேன். இப்படியாக ஆத்தும ஆதாய ஊழியம் உண்மை என்றும், அதற்கு தடைகள் வந்தாலும் தேவன் பாதுகாப்பார் என்பதையும் ஆவியானவர் உணர வைத்தார்.

### *5) கனவில் கண்ட மோசே*

2010ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து "**பைபிளின் இரத்தின சுருக்கம்**" என்ற புத்தகத்தை எழுதிக் கொண்டேயிருந்தேன். இந்த புத்தகம் எழுத எனக்கு ஒரு தகுதியும் இல்லை. ஆனாலும் தேவன் பாராட்டிய கிருபை ஒன்று தான் என்னை இப்புத்தகத்தை முழுமையாக

எழுதி முடிக்க வைத்தது. இப்புத்தகம் இறுதி வடிவம் பெறும் தருவாயில் எனக்குள் ஒரு பயம், ஆண்டவரே, நீர் இப்புத்தகத்தை அங்கீகரிக்கிறீரா? இப்புத்தகம் வெளியிடுவது உமக்கு விருப்பம் என்றால், இதற்குண்டான பணத் தொகையை நான் யாரிடமும் கடன் வாங்காமல், இந்த அதியம் செய்ய உதவி செய்யும். ஏனென்றால் ஆண்டவரிடம் வருவதற்கு முன்பு உள்ள கடன் பிரச்சனைகள் இன்னும் கொஞ்சம் எனக்கு இருக்கிறது. எனவே இப்புத்தகத்திற்காக ரூ. 50,000 என் சொந்த பணம் செலவிட வேண்டும் என்று விரும்பி ஜெபித்தேன். அதே போல் எங்களுக்கு வரவேண்டிய வீட்டின் பாக்கி பணம் கிடைக்க, இடத்தை வாங்க ஒருவர் முன்வந்தார். இப்பணம் வர நாலைந்து மாதம் ஆகும் என்றும் சொன்னார்கள். மீண்டும் நான் தேவனிடத்தில் ஒரு பொருத்தனை வைத்தேன். எனக்குள் கடவுள் பயம் மீண்டும் வந்துவிட்டது. அது என்னவென்றால் வெளி. 22:18,19ல் உள்ள வசனத்தில் *"யாராகிலும் ஒரு வசனத்தையும் கூட்டவும் கூடாது குறைக்கவும் கூடாது. அப்படி செய்தால், செய்பவர் யாராயிருந்தாலும் அவருக்கு பரலோக பங்கு கிடைக்காது"* என்று எழுதியுள்ளது. எனவே இந்த வசனத்தை குறித்து பயம் வந்ததால் மீண்டும் ஆண்டவரிடம், ஆண்டவரே ! என் கையில் வீட்டு பாக்கிபணம் வாங்குவதற்குள், எனக்கு எவ்வித நோய் நொடியும் இல்லாமல் இருக்குமானால் நீர் இந்த புத்தகத்தை அங்கீகாரம் செய்கின்றீர் என்றும், இப்புத்தகம் வெளியிடுவது உமக்கு பிரியமில்லை என்றால், ஆண்டவரே எனக்கு ஏதாவது ஒரு விபத்தோ அல்லது என் உயிரே போகும் என்ற நோயாக இருந்தாலும் பரவாயில்லை, எப்படியோ ஒரு தடை செய்தீர் என்றால், இப்புத்தகத்தை வெளியிடமாட்டேன் என்று ஒரு பொருத்தனை பண்ணினேன். ஆனால் வீடு விற்க பேசிய நாள் 5-8-2011 முதல் அடைந்த நாள் 3-2-2012. ஆக 6 மாதமாயும் எந்த நோய் நொடியோ, விபத்தோ எதுவும் இல்லை. எனவே இப்புத்தகம் வெளியிடுவது ஆண்டவருக்கு பிரியம் என்பதை அறிந்து கொண்டேன். மேலும் இன்னொரு அடையாளத்தையும் என் கனவில் காண்பித்துக் கொடுத்தார்.

2011ஆம் ஆண்டு ஒரு நாள் இரவு விடியற்காலையில் ஒரு கனவு. அதில் ஒரு பெரிய மனிதர் உயரமாகவும் உயரத்திற்கு ஏற்ற பருமனாகவும், நீண்ட வெள்ளை தாடி வைத்தும் இருந்தார். நான் பரலோகத்தில் இருப்பதைப் போன்று இருக்கிறது. அங்கு நான் நின்று கொண்டு இருக்கிறேன். என்னைக் கடந்து அந்த பெரிய மனிதர் சென்றார். நான் அவரை கனவில் பார்த்துக் கொண்டே நான் இவர் யாராய் இருக்கும் என்று நினைக்கும் போது அவர் உடனே திரும்பி என்னை பார்த்து நான் தான் மோசே என்று சொன்னார். ஏன் இவர் நம் கனவில் வந்தார் என்பது அப்போது எனக்கு தெரியாது. பிறகு ஜெபிக்கும் போது தான் பிதாவானவர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மோசேயிடம் கட்டளைகளை எழுதி கொடுத்தார் அல்லவா! அது போல கட்டளைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இப்புத்தகத்தை எழுதுவதால் தேவன் என் கனவில் மோசேயை காண்பித்து இருக்கிறார் என்பதை சில நாட்களுக்கு பிறகு தான் ஆவியானவர் மூலம் ஜெபத்தில் அறிந்து கொண்டேன். இதன் மூலம்

தேவன் இப்புத்தகத்தை அங்கீகரித்தார் என்பதையும் விசுவாசித்தேன். இப்போது அதைப் போலவே பரலோகம் செல்ல எனக்கு பைபிளின் மூலம் தேவன் கட்டளைகள் கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டேன். *மத்தேயு.7:14* ல் ஜீவனுக்கு போகிற வாசல் குறுகியதாய் இருக்கிறதை நாம் தான் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறதே, அப்படி கண்டுபிடித்தால் தான் பரலோகம் போக முடியும் என்பதை வசனத்தின் மூலம் ஆவியானவர் துணையுடன் தேட ஆரம்பித்தேன். ஏனென்றால் நம் ஆத்மாவும் குடும்ப ஆத்துமாக்களும், நம் சபை ஆத்துமாக்களும், உலகத்தில் உள்ள அநேக ஆத்துமாக்களும், பரலோகத்தை சுதந்தரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்புத்தகத்தை நான் எழுதுவதால் தான் மோசேயை தேவன் கனவில் காண்பித்துக் கொடுத்தார். இப்புத்தகம் எழுதவும் உறுதி கொடுத்துள்ளார் என்பதையும் அறிந்து தேவனுக்கு கோடான கோடி நன்றி கூறினேன்.

### *6) வானத்தில் தோன்றிய இயேசு கிறிஸ்து*

பலமுறை *மத்தேயு. 24*ஆம் அதிகாரத்தை படித்து தியானிக்க தேவன் கிருபை செய்தார். அந்த அதிகாரத்தில் 30ஆம் வசனம் படிக்கும் போது எனக்குள் ஒரு கேள்வி. *"இயேசு கிறிஸ்து மேகங்களின் மேல் வருகிறதை சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்"* என்ற வசனத்தை படிக்கும் போது, ஆண்டவரே! இவ்வளவு பெரிய வானத்தில் நீர் எந்தப் பகுதியில் வருவீர், சகல கோத்திரத்தாரும் எப்படி பார்க்க முடியும் என்று கேட்டதற்கு, பல நாட்கள் கழித்து ஜெபத்தில் ஆவியானவர் விளக்கம் கொடுத்தார். சூரியன் என்பது இந்த உலகிற்கு ஒன்றே. அது உதிக்கும் போது அனைவரும் பார்கிறார்கள் அல்லவா?அதேபோல் ஆண்டவர் தோன்றுவார் என்று பதில் கிடைத்தது. கடவுளுக்கு நன்றி கூறினேன். ஏன் என்றால் இந்த விளக்கத்திற்கு வேத வசனம் *வெளி. 21:23* சாட்சியாய் இருந்தது. *"நகரத்திற்கு வெளிச்சங் கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை, தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது. ஆட்டுகுட்டியானவரே அதற்கு விளக்கு"*

ஆட்டிகுட்டியானவர் என்பதற்கு இயேசு கிறிஸ்து என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. இவ்வாறாக ஆவியானவர் கேட்கும் வசனத்திற்கு விளக்கம் கொடுத்து. அதற்கேற்றபடியே கனவிலும் இயேசுவானவரை காணச் செய்தார். அது என்னவெனில் ஒரு நாள் விடியற்காலை, ஜனவரி 2011ம் ஆண்டு 24ஆம் தேதி 3–00 மணியளவில் ஒரு கனவு. வானம் காரிருளாக இருந்தது. பிறகு சிறிது நேரத்தில் மிகப் பெரிய உருவத்தில் இயேசு கிறிஸ்து சிவப்பும் பொன்நிறத்திலுமான ஆடையும் அணிந்திருந்தார். வானத்தில் அரை உருவம் அளவுதான் தெரிந்தது. ஆனால் விலாவில் குத்திய காயம் தெரிந்தது. நான் கனவிலேயே இரகசிய வருகை வந்துவிட்டது என்று நினைத்து, ஆண்டவரே இரகசிய வருகையில் என்னை எடுத்துக் கொள்ளும் என்று சத்தமாக கூப்பிட்டுக் கொண்டே என் இரண்டு கையிலும் இருந்த பொருட்களை கீழே போட்டுவிட்டேன். இயேசு கிறிஸ்துவும் ஒரு நொடிப்

பொழுதில் மறைந்துவிட்டார். அதற்கு பிறகு நானும் அங்கு இல்லை. உடனே என் கனவு கலைந்தது. இப்படியாக ஒரு வசனத்திற்கு அர்த்தமும் கூறி கனவிலும் காண்பித்து கொடுத்த பரிசுத்த ஆவியானவருக்கு கோடான கோடி நன்றி கூறினேன்.

### *7) அக்கினியால் மூடப்பட்ட பூமி*

2011 நவம்பர் 20ஆம் தேதி அதிகாலை கனவில் வானம் இருண்டதையும் சிறிது நேரத்தில் பூமி உருண்டை போன்று ஒரு பெரிய உருண்டை இளஞ் சிவப்பு நிறத்தில், வானத்தில் நிற்பதை பார்த்தேன். அதன் தோற்றம் மறையப்போகும் சூரியன் நிறத்தில் இருந்தது. அதன் அளவு சூரியன் அளவைவிட பெரியதாகவே தெரிந்தது. உடனே ஆச்சரியப்பட்டு பிள்ளைகளை கூப்பிட்டேன். என் பெரிய மகள் விமலா உடனே வந்தாள். நானும் அவளுமாக மீண்டும் வானத்தில் அதிசயமாக தோன்றிய அந்த பெரிய பூமி உருண்டையை, பார்த்துக் கொண்டே இருக்கும் போதே, மூன்று முறை தலைகீழாக சுற்றி கீழே விழுந்தது. பிறகு தண்ணீர் நிறைந்த குளத்தில் ஒரு சிறிய கல்லைப் போட்டால் நடுவிலிருந்து நீர் சுழற்ச்சி ஏற்படுவதைப் போல் கீழே விழுந்த அந்த நெருப்பு உருண்டையால் பூமியின் நடுவிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக எல்லா கட்டிடங்களும் இடிந்து விழுந்து கொண்டே வந்தது. முற்றிலுமாய் எல்லா இடமும் அழியும் போது சிறு எல்லைக் கோடு மட்டும் தெரிந்தது. பிறகு பூமியின் நடுவிலிருந்து புகை எழும்பிற்று. அது அதிகமாகி புகைக் காடாக மாறியது. உடனே என் கனவும் கலைந்தது. ஆண்டவரே இந்த கனவிற்கு வேத வசனம் எங்கிருக்கிறது என்ற வேதத்தைப் புரட்டினேன். அப்போது *அப்போஸ்தலர். 2:19*ஐ காண்பித்துக் கொடுத்தார். *''அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழப் பூமியிலே இரத்தம் அக்கினி, புகைக்காடாகிய, அதிசயங்களையும் காட்டுவேன்''* இந்த வசனத்தை படித்து தேவன் நம்முடன் இன்னும் அதிகமாக ஈடுபடவும், அதேபோல உலகத்தில் உள்ள எல்லா ஊழியக்காரரோடும் இடைப்படவும் ஜெபித்தேன். இதுவே நான் கண்ட கனவுகள் ஆகும்.

இப்படியாக தேவன் ஒவ்வொரு நாளும் ஜெபத்தின் மூலம் அநேக வேத இரகசியங்களை அவருடைய பிள்ளைகளிடம் தெரிவிக்க விரும்புகிறார். நீங்களும் தேவபிள்ளையாய் இருந்து, பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க கட்டளைகளை கடைப்பிடியுங்கள். தொடர்ந்து ஜெப வாழ்வில் நிலைத்து இருங்கள். பரிசுத்தமாய் இருக்க முயற்சி செய்யுங்கள். அப்போது நாம் பரலோகத்தில் சந்திக்க தேவன் தாமே கிருபை செய்வாராக.

அன்பு தேவப் பிள்ளைகளே, இப்பூமியில் இனி நாம் வாழ்கிற நாட்கள் மிகவும் குறைவு. இதை பிற இன மக்களும் அறிந்திருக்கிறார்கள். எப்படியெனில் 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உலகமே அழியப் போகிறது என்று பேசப்பட்டு வருகிறதை நீங்களும் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். அது போல தேவ பிள்ளைகளும் இதோ உலக முடிவு சமீபம் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். இதற்கேற்றவாறு 2013ஆம் ஆண்டு பூமியே முடங்கும் என்ற செய்தியும்

சூரியனிலிருந்து காந்தப் புயல் வீச ஆரம்பித்து விட்டது என்ற செய்தியும் நமக்கு வந்துவிட்டது. என்ன வந்தாலும் முதலில் நடக்கும் சம்பவம் தேவனுடைய நியாயத் தீர்ப்பாகிய இரகசிய வருகையே தவிர அது பூமியின் அழிவு அல்ல. எனவே குறுகிய நாட்களுக்குள் புத்தகத்தில் உள்ள முக்கிய கட்டளைகளை தயவு செய்து கடைபிடிக்க ஆரம்பித்து விடுங்கள். அப்போது கட்டாயம் பரலோகத்தை சுதந்தரிப்பீர்கள். நான் நரகத்தை குறித்து அநேக காரியங்களை சில புத்தகங்களின் மூலம் படித்திருக்கிறேன். அந்த இடத்தின் கொடுமை மிகவும் மோசமானது. அந்த இடத்தில் வீசும் துர்நாற்றமானது நாம் அங்கு ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது என்பதை அறிந்து கொள்ளுங்கள். இதைத் தவிர நரகத்தை குறித்து நான் அதிகமாக எழுதவிரும்பவில்லை. ஏனென்றால் நாம் தான் பரலோகம் செல்லப்போகிறோம். எனவே அந்த இடத்தை பற்றி (நரகம்) நீங்களும் கவலைப்படவேண்டாம். சரி தேவப் பிள்ளைகளே இப்புத்தகம் முடிவடைந்துவிட்டது. இனி உங்களுடன் இணைந்து ஜெபிக்க விரும்புகின்றேன். இதற்கு முன்பாக தயவு செய்து நம் இயேசுவானவர் இந்த பூமியில் வாழும் போது இறுதி ஜெபம் நமக்காக பிதாவிடத்தில் ஜெபித்திருக்கிறார். இதை *யோவான்.17*ஆம் அதிகாரம் முழுவதையும் படித்து தியானியுங்கள். இயேசுவானவரும் நமக்காக இறுதியாக ஜெபித்துவிட்டு சென்றதால் நாம் கட்டாயம் பரலோகம் போவோம் என்று நிச்சயத்தோடு கீழ்கண்ட ஜெபத்தை சொல்லுங்கள்.

**ஜெபம்.**

வானத்தையும் பூமியையும் அதில் உள்ள அண்ட சராசரத்தையும் படைத்து இந்நாள் வரை காப்பாற்றி வருகிற பரம பிதாவே. முதலாவது என்னுடைய பாவத்தை மன்னியும். உம்முடைய மகனின் திருஇரத்தத்தினால் மீண்டும் ஒரு விசை என்னை கழுவி சுத்திகரியும். நீர் இரக்கமுள்ள தெய்வம். நீர் கிருபை உள்ளவர். எனவே தான் என் மீது மனமிரங்கி இப்புத்தகம் என் கையில் கிடைக்க கிருபை தந்திருக்கிறீர். உம்முடைய ஆவியானவர் துணையுடன் இக்கட்டளைகள் அனைத்தையும் உம்முடைய சித்தப்படி நானும் என் குடும்பத்தாரும் பரிசுத்தமாய் கடைபிடித்து வாழ்ந்து பரலோகத்தை சுதந்தரிக்க உதவி செய்யும். இயேசுவின் இனிய நாமத்தில் ஜெபிக்கின்றேன். நல்ல பிதாவே. ஆமென்.

இப்படிக்கு

உங்கள் அன்பு சகோதரி **மரியா (எ) மிரியாம்**

நெ. 7–ஏ, கான்வென்ட் தெரு,நெல்லித்தோப்பு அஞ்சல்,

புதுச்சேரி 605 005.

**குறிப்பு :-**

இப்புத்தகத்தை ஊழியக்காரர்கள் படிப்பீர்களேயானால் உங்கள் சபையில் உள்ள ஆத்துமாக்களுக்கு, இப்புத்தகத்தை ஆர்டர் செய்து வாங்கிக் கொடுங்கள். இந்த ஊழியத்தை நீங்களும் விரும்பி செய்கிறபடியால் இப்புத்தகத்தின் மூலம் பரலோக இராஜ்யம் செல்லும் ஆத்துமாக்களின் கணக்கை தேவன் உங்கள் மேல் எழுத ஜெபித்துள்ளேன்.

தனி ஒருவனாய் இனி இந்த ஊழியத்தை என்னால் செய்ய முடியாது. காலங்களும் இல்லை, நீங்கள் செய்யும் ஊழியத்தோடு இந்த ஊழியத்தையும் தயவு செய்து செய்யுங்கள், இப்படிச் செய்யும் போது உங்களையும் உங்கள் குடும்பத்தையும் சபை மக்களையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக.

---

ஆமோஸ் 9:2 அவர்கள் வான பரியந்தம் ஏறினாலும் அவ்விடத்திலிருந்து அவர்களை இறங்கப் பண்ணுவேன். (இந்த வசனத்தின் படி மனிதர்கள் விண்வெளி ஆராய்ச்சி செய்து கொண்டு அங்கு நிரந்தரமாக தளம் அமைக்க ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.)

ஆதாரம் தினத்தந்தி நாளிதழ்
புதுச்சேரி 17-2-2012



மத்தேயு.24:7,"ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்".

வெளிநாட்டு செய்திகள்

வெளிநாட்டு செய்திகள்

ஆப்கானிஸ்தானில் 19 மணி நேரம் நடந்த சண்டை முடிவுக்கு வந்தது

தீவிரவாதிகள் 6 பேர் உள்பட 14 பேர் பலி

15.9.2011

மிகப்பெரிய போர் மூளும் ஆபத்து

தென்கொரியா மீது வடகொரியா பீரங்கி தாக்குதல்

கட்டிடங்கள் தீப்பற்றி எரிந்தன; 2 வீரர்கள் பலி

மோதலில்

25 வீடுகள், 5 மோட்டார் சைக்கிள் அடித்து நொறுக்கப்பட்டது

அ.தி.மு.க. கவுன்சிலர் அடித்துக் கொலை

தேர்தல் விரோதம் காரணம் போலீஸ் விசாரணை

ஏமன் நாட்டிலும் ஆட்சிக்கு எதிராக பேரணி

லிபியா மீது அமெரிக்க கூட்டுப்படை தாக்குதல் நடத்த கடும் கண்டனம்

மத்தேயு 24:7, லூக்கா 21:11, பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமி அதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.

## பிலிப்பைன்ஸ் நிலநடுக்கம் பாதிப்பு

பிலிப்பைன்ஸ் நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதில் 44 பேர் பலியாகி ஏராளமான கட்டிடங்களும் சேதம் அடைந்தன. அங்குள்ள லா லிபெர்தாட் நகரில் உள்ள ரோடு பிளவுபட்டுக் கிடப்பதை படத்தில் காணலாம்.

நுண்டு வெடிப்பில் இடிந்த ஓட்டல்

## பிலிப்பைன்ஸ் நில நடுக்கத்தில் சாவு எண்ணிக்கை 44 ஆக உயர்வு

[illegible]

கேரளாவில் 29/7/…

## பன்றிக்காய்ச்சலால் இறந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்தது

திருவனந்தபுரம், ஜூலை 29- கேரளாவில், பன்றிக்காய்ச்சலால் இறந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்து இருக்கிறது.

### பன்றிக்காய்ச்சல்

கேரளாவில் திருவனந்தபுரம் மாவட்டம் உள்பட மாநிலம் முழுவதும் பன்றிக்காய்ச்சலால் பலர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இங்குள்ள அரசு ஆஸ்பத்திரியில் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு [illegible] அனுமதிக்கப் [illegible] இறந்தனர். இறந்தவர்கள் [illegible] மற்றும் 63 வயதுள்ள பெண்.

இவர்களையும் சேர்த்து கேரளாவில் பன்றிக்காய்ச்சலால் இறந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்து இருக்கிறது.

### மத்திய மருத்துவ குழு

கேரளாவில் மத்திய மருத்துவ குழுவினர் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு ஆஸ்பத்திரிகளுக்கு சென்று அங்கு பன்றிக்காய்ச்சலு

தினத்தந்தி

15-2-2012

வெளிநாட்டு விநோதங்கள்

## வீட்டுக்கு வீடு ஒரு புற்றுநோயாளியை கொண்ட கிராமம்

[illegible]

**லூக்கா 21:11, வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும் என்ற வசனத்தின்படி கீழே உள்ள படங்கள் அமைந்துள்ளது.**

## பாலைவன நகரில் மழையாக பெய்த மீன்கள் 4/3/2010

ஆஸ்திரேலியாவின் வடக்கு பகுதியில் உள்ளது லஜ்மானு நகரம். இந்த நகரம் அமைந்துள்ள பகுதி பாலைவனம் ஆகும். இந்த நகரில் கடந்த 2 நாட்களாக மீன் மழை பெய்து வருகிறது. மீன்கள் வானத்தில் இருந்தபடி விழுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை உயிருடன் இருந்தன. கிட்டத்தட்ட 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மீன்கள் வானத்தில் இருந்து விழுந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் இதுவரை 3 முறை மீன் மழை பெய்து இருப்பதாக கூறப்படுகிறது. நல்லவேளை மீன்கள் தான் வானத்தில் இருந்து விழுந்தன. முதலைகள் விழுந்தால் எங்கள் கதி என்ன கதியாகி இருக்கும் என்று அந்த நகரை சேர்ந்த ஜோ ஆஸ்லி தெரிவித்தார்.

## இங்கிலாந்தில், வானத்தில் தெரிந்த பறக்கும் தட்டுகள்

பூமியைப்போல் வேற்று கிரகங்களில் மனிதர்களை போன்ற உயிரினங்கள் வசிப்பதாகவும், அவர்கள் பறக்கும் தட்டுகளில் பூமிக்கு வந்து செல்வதாகவும் அவ்வப்போது செய்திகள் வருகின்றன. அவற்றுக்கு ஆதாரமாக புகைப் படங்களையும் வெளியிட்டு வருகின்றனர். இதை ஆதாரமாக வைத்து மறைந்த எம்.ஜி.ஆரை கதாநாயகனாக வைத்து சினிமாவும் வந்தது நினைவிருக்கலாம்.

இந்த நிலையில் இங்கிலாந்தை சேர்ந்த 2 பேர் பறக்கும் தட்டை பார்த்ததாக தெரிவித்துள்ளனர். ஒருவர் கென்ட் என்ற இடத்தை சேர்ந்த எர்னஸ்ட். இவர் தனது வீட்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது வானத்தில் அதிக ஒளியை கக்கியபடி 2 மர்ம பொருள்கள் பறந்ததாகவும், சிறிது நேரத்தில் அவை மறைந்து விட்டதாகவும், ஆனால் அவை விமானமோ, செயற்கை கோள்களோ இல்லை என்றும் தெரிவித்து உள்ளார்.

பறக்கும் தட்டை பார்த்ததாக கூறிய இன்னொருவர் கென்ட் நகரத்தை அடுத்து 50 கி.மீட்டர் தூரத்தில் உள்ள ஊரைச்சேர்ந்த ஜோன்ஸ். அவர் 5 பறக்கும் தட்டுகளை பார்த்ததாகவும், அவற்றை தனது செல்போனில் படம் பிடித்து வைத்து இருப்பதாகவும் தெரிவித்து உள்ளார்.

இருவர் சொல்வதும் உண்மையா? என்று இங்கிலாந்து நிபுணர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

# புதிய சூரியனும் அதை சுற்றி வரும் 7 கிரகங்களும் கண்டுபிடிப்பு

வாஷிங்டன், ஆக.27-

பூமியில் இருந்து 127 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால், சூரியன் போன்ற நட்சத்திரத்தையும் அதை சுற்றிவரும் கிரகங்களையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர். சூரிய மண்டலத்துக்கு அப்பால் கண்டுபிடிக்கப்பட்டு உள்ள மிகப்பெரிய நட்சத்திரமும் கிரகங்களும் இவைதான்.

### 6 ஆண்டுகள் ஆராய்ச்சி

அமெரிக்கா அருகில் உள்ள சிலி நாட்டில் லா சில்லா என்ற இடத்தில் டெலஸ்கோப் வைக்கப்பட்டு உள்ளது. இந்த டெலஸ்கோப்பில் பொருத்தப்பட்டு உள்ள கிரகங்களை கண்டுபிடிக்கும் கருவியான ஹார்ப்ஸ் ஸ்பெக்ட்ரோகிராப் மூலம் விஞ்ஞானிகள் ஆய்வுகள் மேற்கொண்டனர். ஐரோப்பியன் சதர்ன் அப்சர்வேட்டரி விஞ்ஞானிகள் டாக்டர் கிறிஸ்டோபர் தலைமையில் இந்த கிரக ஆராய்ச்சியில் கடந்த 6 ஆண்டுகளாக ஈடுபட்டனர்.

இந்த ஆராய்ச்சியின் முடிவில், பூமியின் சூரியனை போன்ற ஒரு சூரியனையும், அதைச்சுற்றி வரும் 7 கிரகங்களையும் அவர்கள் கண்டுபிடித்து உள்ளனர். 5 கிரகங்கள் இருப்பது உறுதியானது. மேலும் 2 கிரகங்கள் அந்த சூரியனை சுற்றிவருவதற்கான ஆதாரங்கள் கிடைத்து உள்ளன.

### 127 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால்

புதிய சூரியனுக்கு எச்.டி.10180 என்று பெயர். இந்த புதிய சூரியனும், அதை சுற்றி வரும் கிரகங்களும் பூமியில் இருந்து 127 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கின்றன. சூரிய மண்டலத்துக்கு வெளியில் உள்ள கிரகங்களையும், நட்சத்திரங்களையும் தனித்தனியாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இப்போதுதான் முதல்முறையாக பூமியின் சூரியனை போன்ற ஒரு பெரிய நட்சத்திரத்தையும் அதை சுற்றி வரும் 7 கிரகங்களையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

இந்த கிரகங்கள், சூரிய மண்டலத்து கிரகங்கள் போல குறிப்பிட்ட இடைவெளியில் உள்ளன. இந்த சூரியனைப்பற்றியும், அதன் குடும்பத்தை சேர்ந்த கிரகங்களைப் பற்றியும் விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஏற்படுத்திவிடும் என்று தீவிரவாதிகள் நம்புகிறார்கள். அதோடு கிராமப்பகுதிகளில் உளவு சொல்லும் ஒற்றர்கள் பெருகி விட்டார்கள். நகரங்களில் உளவு பார்ப்பது கடினமாக இருக்கும் என்றும் தீவிரவாதிகள் கருதுகிறார்கள். இதனால் தீவிரவாதிகள் சிறு கூட்டம் கூட்டமாக அவர்கள் இருட்டுத்தனமாக நகரங்களுக்குள் ஊடுருவி வருகிறார்கள். அவர்கள் கராச்சி நகரத்துக்கு தான் அதிக அளவில் குடியேறி வருகிறார்கள். கராச்சி நகரில் பஷ்டூன் இன மக்கள் அதிக அளவில் வசித்து வருகிறார்கள். இதுவும் அவர்களுக்கு வசதியாக இருக்கிறது. அவர்களுடன் எளிதில் கலந்து விட முடியும் என்று தீவிரவாதிகள் நம்புகிறார்கள்.

## நிவாரண முகாமில் பாகிஸ்தானிய சிறுமி

# பூமியின் வளிமண்டலத்தின் மேல்பகுதி சுருங்குகிறது

பூமியின் வளிமண்டலத்தின் மேல்பகுதி எதிர்பாராத வகையில் சுருங்கி வருகிறது. அதோடு குளுமை அடைந்து வருகிறது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். சூரியன் வெளிப்படுத்தும் வெப்பம் வழக்கத்தை விட கடந்த 2007-ம் ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு வரை குறைந்து விட்டது தான் பூமியின் வளிமண்டலம் சுருங்குவதற்கு காரணம் ஆகும் என்று விஞ்ஞானிகள் கணிக்கிறார்கள். அமெரிக்காவில் கொலராடோ மாநிலத்தில் பவுல்டர் நகரில் உள்ள வளிமண்டல ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் இதை தெரிவித்து இருக்கிறார்கள்.

இந்த கால கட்டத்தில் வளிமண்டலத்தின் மேல் பகுதியில் 90 முதல் 600 கி.மீ. பரப்பளவு வரை சுருங்கியது என்றும், 2008-ம் ஆண்டு 74 டிகிரி பாரன்ஹீட் குளுமை இருந்தது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# பூமியைப்போல ஏராளமான கிரகங்கள்

பிரபஞ்சத்தில், நாம் வசித்து கொண்டிருக்கும் பூமியைப்போல ஏராளமான கிரகங்கள் நிரம்பியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சூரியனைப்போன்ற நான்கு நட்சத்திரங்களில் ஒன்று பூமியின் தன்மையை ஒத்திருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

[illegible]

எங்களுக்கு அல்ல கர்த்தாவே எங்களுக்கு அல்ல உமது கிருபையினிமித்தமும் உமது சத்தியத்தினிமித்தமும் உம்முடைய நாமத்திற்கு மகிமை வரப்பண்ணும்
சங்கீதம் - 115:1

**நாங்கள் ஆராதனைக்கு குடும்பமாக சென்று வருகின்ற திருச்சபை**


**TRINITY FULL GOSPEL CHURCH**
(அருள்வாக்கு CGN TV)
ஆசீர்வாத வீதி,
(ஸ்ரீனிவாசா அப்பார்ட்மெண்ட் பின்புறம்)
வில்லியனூர், மெயின்ரோடு,
உழவர்கரை, புதுச்சேரி - 605 010.

# பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்

**செப்பனியா 3:8**

12/10 விண்ணில் இன்று அதிசயம்:

## பூமிக்கு மிக அருகில் எரிகல் செல்கிறது

பூமிக்கு மிக அருகே வானில் கடந்து செல்லும் எரிகல் போன்ற மாதிரி தோற்றம்.

வாஷிங்டன், அக்.12–

வானத்தில் அவ்வப்போது அரிய நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கம். சில சமயங்களில் வானில் இருந்து எரிகற்கள் விழும். மேலும், மிகப் பெரிய பாறைத் துணுக்குகள் பூமி மீது மோதுவது போன்ற சம்பவங்களும் நடந்துள்ளன. இது தவிர, வெறும் கண்ணுக்கு எளிதில் புலப்படாத வியாழன், வெள்ளி, புதன் போன்ற முக்கிய கிரகங்கள் பூமிக்கு மிக அருகில் வந்து சென்ற அற்புதங்களும் அரங்கேறி இருக்கின்றன.

இந்த சூழ்நிலையில், வானத்தில் மீண்டும் ஒரு அரிய நிகழ்வு இன்று நடைபெற இருக்கிறது. மிகவும் சிறிய வடிவிலான எரிகல் ஒன்று, பூமிக்கு மிக நெருக்கமாக கடந்து செல்கிறது. அதன் உண்மையான அளவு குறித்து இன்னமும் தீர்மானிக்க முடியவில்லை. எனி முதல் 40 ஆயிரம் மைல் (64 ஆயிரம் கி.மீட்டர்) உயரம் வரையிலான பகுதிக்குள் அந்த எரிகல் விண்ணில் மிதந்து செல்லும். பூமியின் மேலே எந்த பகுதியில் அந்த எரிகல் தெரியும் என்பதை விஞ்ஞானிகள் இன்னும் உறுதி செய்யவில்லை. எனவே, இந்தியா உட்பட எங்கு வேண்டுமானாலும் அந்த எரிகல் தெரியக் கூடும்.

இந்த தகவல்களை, சிறிய கோள்கள் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. 'நாசா' விஞ்ஞானிகளும் இதை உறுதி

## Sun hurls strong geomagnetic storm

[illegible] - PHOTO AP

[illegible]

தங்கள் வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களை பிடித்தார்கள் - லூக்கா 5:6-10

அப்போது இயேசு சீமோனை நோக்கி பயப்படாதே இது முதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்...

**ஆசிரியர் :**

**வி. மரியா (எ) மிரியாம்**

**கைபேசி 96887 48968**


Sundar Prints 9840199777